www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

தாமரை

இவர்கள் எழுதுகிறார்கள்...

- ★ டாக்டர் அ. கதிரேசன்
- ★ திருவைகாவூர் கோ. பிச்சை
- ★ சிவா
- ★ இராகுலதாசன்
- ★ எச். ஜி. ரசூல்
- ★ தனுஷ்கோடி ராமசாமி
- ★ குலோத்துங்கன்
- ★ பெருமாள் முருகன்
- ★ ராஜ்கமல்
- ★ குமரிஅமுதன்
- ★ இளசை வே. சதாசிவன்
- ★ கனந்தர்

படிப்பகம்

www.padippakam.com

தாமரை

நிறுவக ஆசிரியர்:
ப. ஜீவானந்தம்

ஆசிரியர்:
ப. மாணிக்கம்

பொறுப்பு ஆசிரியர்: கே. சி. எஸ். அருணாசலம்

மலர்: 31 ஜனவரி 1990 இதழ்: 7

சொல் புதிது, பொருள் புதிது, சிந்தனை புதிது!

உலகெங்கும் புதிய காற்று வீசிக்கொண்டிருக்கிறது. அது சற்று பலமாகவே வீசுகிறது. பலவீனப்பட்ட அமைப்புகள் படபடக்கின்றன.

'பெரிஸ்ட்ரோய்கா' 'க்ளாஸ் நாஸ்ட்' புதிய சொற்கள். இவற்றின் புதிய பொருள்கள் என்ன? புதிய சீரமைப்பு, புதிய சிந்தனை அகிம்சை முறையில் தீர்வு, சத்திய தரிசனம். அந்தச் சொற்களின் நடைமுறைப் பொருள் நாடுகள் பலவற்றில் மாற்றங்களைக் கொண்டு வருகின்றது. மக்களை விட்டு விலகி நின்று பக்களாட்சி நடத்த முடியாது என்பதன் விளக்கங்களாக அந்த நிகழ்ச்சிகள் அமைகின்றன.

அணு குண்டுகள், ஹைட்ரஜன் குண்டுகள், ஏவுகணைகள், நட்சத்திரப் போர்கள், விண்வெளி உளவுகள், சட்டாம் பிள்ளைத் தலையீடுகள், ஆகியவை வெற்றியைத் தராது என்பதை உலகம் உணரத் தொடங்கி இருக்கிறது. உறைபனி மன நிலைகள் உருகத் தொடங்கி இருக்கின்றன.

தன் தலையிலேயே கையை வைத்துக் கொண்டு போகும் இய பஸ்மாசுரனைப் போல நமது அழிப்புத் திறமை

படிப்பகம்

www.padippakam.com

நம்மையே அழித்துவிடும் என்பதை மனிதன் உணரத் தொடங்கிவிட்டான். "வாழு, !" "வாழவிடு !" என்ற புதிய சிந்தனை உலகெங்கும் உயிர் பெற்று உரம் பெற்று ஓங்கிக் கொண்டிருக்கும் நேரம் இது.

இந்தியா உலகிற்களித்த கூட்டுச்சேரா நேர்மைக் கொள்கை. தவறுகளைச் சுட்டிக்காட்டும் திறனை வளர்த்திருக்கிறது. 'யாவரும் கேளிர்' 'உலகோர் குடும்பம்' என்ற நம் நாட்டுப் பழமொழிகள் மாநிட நேயச் சிந்தனையாக விரிவடைந்து வளருகிறது.

மக்கள் நினைத்தால் மாற்றங்கள் சாத்தியம். எந்த சக்தியும் மக்களை மதித்து நடக்க வேண்டும் என்பதை இந்திய ஜனநாயகம் சென்ற ஆண்டு இறுதியில் மறுபடியும் நிருபித்துக் காட்டியது. இது எதிர்காலத்தின்மேல் நம்பிக்கைய வளர்க்கிறது.

எண்பதுகளைத் தாண்டி தொண்ணூறுகளில் இந்த ஆண்டு அடி எடுத்து வைக்கிறோம். இருபதாம் நூற்றாண்டின் கடைசிப் பத்தாண்டுகளில் காலடி எடுத்து வைக்கிறோம்.

மரபுகள் பண்பாட்டின் சேமிப்புகள். மரபுகளுக்கும் புதுமைகளுக்கும் ஓயாத மோதல் நடக்கிறது. வலுவற்ற மரபுகள் சாகும். மக்கள் ஏற்காத புதுமைகள் மண்ணோடு மண்ணாகும். மக்கள் ஏற்கின்ற நல்ல மரபுகள் தொடரும் அவர்கள் ஏற்கின்ற புதுமைகள் புதிய மரபுகளாக, மரபுகளை மேலும் பெருமையாக்கும்.

புத்தாண்டில் புதிய சொற்கள் பிறக்கட்டும்,
புதுப்புது அர்த்தங்கள் பெருகட்டும்,
புதிய சிந்தனைகள் புலரட்டும்.

'தாமரை'யின் 'வண்டு'களே
தேனினும் இனியப் புத்தாண்டு வாழ்த்துக்கள் !

படிப்பகம்

www.padippakam.com

நாட்டின் மணிச்சுடர்கள்

கல்லை எடுத்தொரு சிற்பம் வடித்தவன்
கைகளைப் போற்றுகிறேன்—தமிழ்ச்
சொல்லைத் தொடுத்தொரு காவியம் செய்தவன்
வாழ்கென வாழ்த்துகிறேன்!

நெல்லை விதைத்தொரு பயிர் வளர்த்தவன்
வேர்வையைப் பாடுகிறேன்—பெரும்
தொல்லை யிடை தேசத் தொண்டு புரிபவன்
சேவையைப் போற்றுகிறேன்!

எல்லைப் புறம் நின்று காவல் புரிபவன்
தீரத்தை வாழ்த்துகிறேன்—ஒரு
எல்லை யிலாமலே அள்ளித் தருபவன்
ஈரத்தைப் போற்றுகிறேன்—மன
ஈரத்தைப் போற்றுகிறேன்!

இப்படிச் சேவைகள் செய்பவர் தாம் இந்த
நாட்டின் மணிச்சுடர்கள்—அன்றி
எப்படி யோ உயிர் வாழ்ந்து மறைபவர்
மின்னும் பனித்துளிகள்!

—குமரி அமுதன்.

படிப்பகம்

www.padippakam.com

தண்ணீருக்குள் கண்ணீர்

—இளசை வே. சதாசிவன்

த்தேய்... த்தேய்... ம்... ம்... என்று மாடுகளை ஒரு மைல் தூரம் விரட்டிக்கொண்டு வந்த புதூர் பொன்னையா நாயக்கர் புங்கவர்நத்தம் பூங்காவனத் தேவர் ரைஸ் மில்லுக்கு முன்னால் வந்து வண்டியை நிறுத்தி மாடுகளைத் தட்டிக்கொடுத்தார்.

ரைஸ்மில் வாசலில் தூசு படிந்த உடம்போடு நின்ற பூங்காவனத்தேவருக்கு படு கோவம் வந்தது. ''ஏய் பொன்னையா... கொள்ள போகுதுன்னா இப்பிடி மாடுகளே வெரட்டிக்கிட்டு வந்திருக்கே... பாரு மாடுக என்னத்துக்கு ஆகும்... எவச்சு எளச்சு வாயெல்லாம் நொரை தள்ளுது... என்று பொன்னையா நாயக்கரைப்பார்த்து எரிச்சலோடு சொன்னார்.

''ஆமா... பின்ன நீ ஏன் சொல்லமாட்டே..! உனக்கு தெனசரி ரைஸ் மில்லிலேயே இல்லரை வந்து விழுந்துகிட்டே இருக்கு ஒடம்பு நோகாம திண்ணுபோட்டு ராசா மாதிரி ரைஸ்மில்லுலே வந்து உக்காந்துக்கிடுதே—

நானு இன்னோ ரெண்டு மைலு டவுனுக்குப் போயி சாமாஞ் சட்டு முட்டு வாங்கி வண்டியிலே போட்டுக்கிட்டு,

படிப்பகம்

www.padippakam.com

திரும்ப வந்து அரைச்ச அரிசியே எடுத்துக்கிட்டுப் போகனும், என்று சொல்லிக்கொண்டே அவிச்சுக் கட்டிய நெல் மூடை களை ரைஸ்மில் வாசலில் இறக்கிப் போட்டார் பொன் னையா நாய்க்கர்—

—ரைஸ் மில்லுக்கு மாவு அரைக்க வந்த பூங்காவனத் தேவர் தூர உறவு மருமகள் வெள்ளத்தாயி அவரைப் பார்த்து லேசாகச் சிரித்தாள் !

"எதுக்கு புள்ளே சிரிக்கே?"

"பின்ன என்ன மாமா ! ஒமக்குவயசு அறுபதுக்கு மேலே போயிருச்சு அந்த வண்டிக்கார ஐயாவுக்கு அதுக்கு மேலே இருக்கும் போல இப்ப போயி ரெண்டு பேரும் சின்னப்புள்ளய மாதிரி நீ வா போன்னு பேசிக் கிடுதீளே அதப் பாத்துதான் சிரிச்சேன் !

"ஓ... அதக்கேட்கியா... ! வெள்ளத்தாயி நானும் பொன் னையாவும் சின்ன வயசுல ஆறு வருஷமா ஒண்ணாவே படிச் சோம்—அவன் அவுக ஊரு புதூருலே இருந்து தூக்குச் சட்டி யோட வருவான், நானு நம்ம ஊரு புங்கநத்திலே இருந்து பழைய சோறக் கட்டிக்கிட்டுப் போவேன் இப்ப மாதிரி ஊரு ஊருக்கு டவுன் பஸ்சு அப்பக் கெடையாது ரெண்டு பேரும் வெக்கு ரோட்ல சந்திச்சுப் பேசிகிட்டே டவுண்லே இருக் கிற பள்ளிக்கொடத்துக்கு நடந்தே போவோம் வரும் போதும் அப்பிடித்தான்—

—ஆனா எங்க ரெண்டுபேருக் கும் படிப்பு சரியா ஓடலே. பொன்னையா படிக்கும்போதே சம்சாரி வேலையே ஆசை யோட செய்ய ஆரம்பிச்சிட் டான்—அவனுக்கு அவுகஅம்மா வழி நெல புலங்க ஜாஸ்தி. ஆனா? நானு என்ன செய்ய எங்க ஐயா பாத்த காடு காவல் வேலைன்னு ரொம்ப நாளா புஞ்சைக் காடுகளே சுத்திக் கிட்டே இருந்தேன். அப்பையும் நானு வாரத்துக்கு ரெண்டு தரம் புதூரு போயி பொன்னை யாவே பார்க்காமே இருக்க மாட்டேன்—

—இப்ப கொஞ்ச வருஷத் துக்கு முன்னாடி தான்—அது வும் பொன்னையா முன் யோசனை பண்ணி "ஏய் பூங் காவனம் நம்ம ரெண்டு ஊருக் கும் ஊட போற ஓடையே மறிச்சு—"கம்மா" உண்டாக் கப் போறாங்க; இன்னமே புஞ் சைக் காட்லே கம்மம் புல்லு, குதிரைவாலி, தெனை, போட றதே எல்லாரும் நிறுத்திப் போட்டு நெல்லு போட ஆரம்

படிப்பகம்

www.padippakam.com

பிச்சிருவாங்க உனக்கும் இன்னமே ஒடம்பு வளைஞ்சு வேலை செய்ய முடியாது அதனாலே ஊர்ல ஒரு சின்ன ரைஸ்மில்லக் கட்டிருன்னு சொல்லி பொன்னையாதான் எங்க வீட்டுக்காரி நகையெல்லாம் வாங்கிக் கொண்டுபோய் அடகு வச்சு பத்தாக் கொறைக்கு அவுக வீட்டம்மா நகையவும் அடகு வச்சு ரைஸ்மில்லே ஏற்பாடு பண்ணிக் கொடுத்தான் இப்ப பத்துப் பதினைஞ்சு வருஷமா இதுதான் சோறு போட்டுக் கிட்டு இருக்கு...என்று பெருமை யாடு சொன்னார் பூங்காவனத்தேவர்.

''அதுதானே பாத்தேன்... நல்ல வேளையா நாய்க்ரையா சினிமா கொட்டகையே கட்டச் சொல்லாமே ரைஸ்மில்லக் கட்டச் சொன்னாரு... இல்லாதுபோனா அவசரத்துக்கு அரைக்காப்பிடி மாவு வேணுமின்னாலும் ரெண்டு மைலு ஓடனும்'' என்று சொல்லிவிட்டு வெள்ளைத்தாயி புறப்பட்டாள்''.

—நெல் மூடையை இறக்கிப் போட்ட பொன்னையா நாயக்கர்'' ஏய் பூங்காவனம்... நானு டவுனுக்குப் போயிட்டு வாரதுக்குள்ளே—நெல்லே அரைச்சு வச்சிரு பெறகு ஒம்பாட்லே வாயிலே ஊத்திப் போட்டு, மல்லாந்து படுத்திராதே'' என்று எச்சரிக்கையான மவுனச் சிரிப்போடு சொல்லிவிட்டு வண்டியை வேகமாகத் திருப்பினார். பூங்காவனத் தேவரும் அதைப் புரிந்து கொண்டு'' சரி தான் நீ போய்ட்டு வாயா என்று மவுனமாகச் சிரித்தார்—

—வண்டியைத் திருப்பிய பொன்னையா நாயக்கர் தற்செயலாக ரைஸ்மில் உள்புறம் ஏறிட்டுப் பார்த்தார். புதுப் பையன் கருப்பசாமி வேலை செய்துக் கொண்டிருந்தான்.

''என்ன பூங்காவனம்பையன் புதுசா இருக்கான்? நம்ம பிச்சையாவே எங்கே?''

''அவனக் கேட்கியா! அந்தப் பயபுள்ளெயே ரெண்டு போடு போட்டு வீட்டுக்குப் போகச் சொலிட்டேன்'' பயபுள்ளே சில்லரையே எடுக்க ஆரம்பிச்சிருச்சு!

''என்ன பூங்காவனம்? நம்ம பிச்சையாப்பயலா சில்லரையே எடுத்தான்னு சொல்லுதே? என்று ஆச்சரியத்தோடு கேட்டுக் கொண்டே வண்டியை விட்டு இறங்கி விட்டார்— பச்சேரி குடிசையிலே பிறந்த பிச்சையா மீது பொன்னையா நாயக்கருக்கு அளவு கடந்த நம்பிக்கையும் பாசமும் உண்டு!

படிப்பகம்

www.padippakam.com

''பொன்னையா! நீ முந்தானத்து வந்துகேப்ப மாவு அரைச்சுக்கிட்டுப் போனதுக்குப் பெறகு இந்தப் பயல் பிச்சையா ரைஸ்மில்லுக்கு உள்ளே தூத்து ஒதுக்கிக்கிட்டு இருந்தான். அப்ப ஒரு ரூவா சில்லுன்னு விழுந்தது. திரும்பிப் பாத்து ''ஏலேய்...! துட்டு ஏதுடான்னு கேட்டேன் பயல் பதில் ஒண்ணும் சொல்லாமே திறு திறுன்னு முழிச்சான் அப்பத்தான் தெரிஞ்சுக்கிட்டேன். சீ போடான்னு ரெண்டு போடு பெட்டியிலே போட்டு போகச் சொல்லிட்டேன்.

அட சண்டாளா! அரைச்ச மாவே எடுத்துக் கிட்டுப் போகும் போது நான் தானே அந்த ஒரு ரூவாயே வச்சுக்கடான்னு அவன் கிழிஞ்ச டவுசர்லே திணிச்சு வச்சுட்டுப் போனேன்!?

''என்ன...! நீயா கொடுத்துட்டுப் போனே? என்று பூங்காவனத் தேவர் திடுக்கிட்டுப் போனார். முகத்தில் ஈயாடவில்லை. தவறு செய்து விட்ட உணர்வில் உடம்பெல்லாம் வியர்த்தது!

—ஆனால் பொன்னையா நாயக்கருக்கு படுகோவம் வந்தது. ''பூங்காவனம்! நீ என்னைக்கி இடுப்பிலே சாராயப் பாட்டில சொருகி வச்சுக்கிட்டு நெனைச்ச நேரமெல்லாம் ரெண்டு ரெண்டு மடக்கா வாயிலே ஊத்திக்கிடற பழக்கத்தே விட்டுத் தொலைக்கியோ அன்னைக்குத்தான் உருப்புடுவே! ''சே'' தாத்தா.... தாத்தான்னு இடுப்பச் சுத்திக்கிட்டே இருந்த பச்சப் பயலே அடிச்சு முடுக்கிருக்கியே உனக்கே நல்லா இருக்கா?

—நீ அவனே வேலைக்கி வச்சுக்கிட்ட புதுசுலே அவனப் பத்தி எவ்வளவு பெருமையா எங்கிட்டச் சொன்னே! தெரியுமா ''என்னடா இது சேரிப் பயலக் கொண்டு வந்து பூங்காவனம் ரைஸ் மில்லிலே பொறுப்பாவச்சிருக்கானேன்னு நெனைக்காதே பொன்னையா.. பிச்சையா எப்பிடி யோக்யமான பயல் தெரியுமா?—நான் கொஞ்சம் அதிகமா குடிச்சுப் போட்டு வெலக்கு ரோடு வேப்ப மரத்தடியிலே மெய் மறந்து கெடந்தப்போ மடியை விட்டு நழுவிக் கிடந்த பேங் பணம், பாஸ் புஸ்தகம், எல்லாத்தையும் எடுத்து வச்சிருந்து மறுநாளு இந்தாங்க தாத்தான்னு வீடு தேடிக்கொண்டு வந்து கொடுத்த பயலாக்கும் பிச்சையான்னு, எத்தன தடவே பெருமையாச் சொல்லி இருக்கே? அப்பிடிப் பயல் இப்ப களவாணிப் பயலாப் போயிட்

படிப்பகம்

www.padippakam.com

டானோ? என்று பொன்னையா நாயக்கர் கோபத்தோடு கேட்டதும் பூங்காவனத் தேவரால் பதில் பேச முடியவில்லை! தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டார். ஆனால் நம்ம குடிகாரத்தனம் சொந்தப் பேரப்பயல் மாதிரி ஆடி ஓடி வேலை செஞ்சு நமக்கு உதவிக்கிட்டு இருந்த பிச்சையாப் பயலவே கைநீட்ட வச்சிருச்சே... என்று கண் கலங்கினார்.

"பூங்காவனம்! பிச்சையா பதினாலு வயசு கூட ஆகாத சேரி சின்னப்பயதான் ஆனா. நீ தண்ணி போடறத தெரிஞ்சு வச்சுக்கிட்டு ரைஸ்மில்லே எப்பிடியெல்லாம் நிர்வாகம் பண்ணி இருக்கான் தெரியுமா? என்ற பொன்னை நாயக்கர்—நான் போன வாரம் மாட்டுக்கு தவிடு அள்ளிக்கிட்டுப் போறதுக்காக வந்தேன். நீ இல்லே, பிச்சையா கரண்டு கணக்கு அட்டையை எடுத்து அதுக்குள்ளே சில்லரை ரூவா நோட்டா எண்ணி வச்சான். தானு ஏலேய் சேட்டக்காரப் பயவுள்ளே என்னடா கரண்டு கணக்கு அட்டக்குள்ளே ரூவா நோட்டே எண்ணி வைக்கியே எதுக்குன்னு கேட்டேன்.

"வாங்க; பாட்லுக்கார தாத்தா போயி பதினிக்காரத் தாத்தா வந்தாச்சான்னு" என்னைக் கூகலி பண்ணிப் போட்டு-அதுக்கு அவன் என்ன சொன்னான் தெயுரிமா?

"தாத்தா...! எங்க தாத்தா கிட்டப் போயி கரண்டு பில்லுக்கு பணம் குடுங்க கட்டனும்னு கேட்டா போடா கடைசி அன்னைக்கி கட்டிக்கிடலாம்னு சொல்லிருவாக. கடைசி அன்னைக்குப் பாத்தா பெட்டியிலே பணம் இருக்காது எங்க தாத்தா சேர்ர சில்லரையெல்லாம் தெளவிட்டுப்போயி பாட்ல வாங்கி இடுப்பிலே சொருகி வச்சுக்கிடுவாகெ... பெறகு எங்க தாத்தா வாங்கிக்கிட்டு வரச் சொன்னாகன்னு அங்கிட்டு இங்கிட்டுமா கை மாத்து வாங்கிக் கிட்டு எலக்டரி ஆபீசுக்குப் போனா டேய் உனக்கும் ஒங்க தாத்தனக்கும் வேற வேலக்கழுதே கெடையாதோ... வட்டவட்டம் பீசப் புடுங்கிற நேரத்திலேதான் பில் பணம் கட்ட வாறியேன்னு சத்தம் போடுதாங்க. இத எங்க தாத்தா கிட்டே சொன்னா போடா அவங்க பாட்ல சொல்லிக்கிட்டே இருக்கட்டும்னு சொல்லுதாக..

— அதுக்காகத்தான் கரண்டு கணக்கு எடுத்துக் கிட்டுப் போனதும் தெனசரி கொஞ்சம் கொஞ்சமா அட்டக்குள்ளே

படிப்பகம்

www.padippakam.com

சேத்து வச்சிக்கிட்டே இருக்கேன் — இது எங்க தாத்தாவுக்குத் தெரியாது. இதை மீட்டர் பெட்டிக்குள்ளே வச்சுப் பூட்டிருவேன் எங்க தாத்தா அங்கெல்லாம் போயிபாட்லுக்கு ருவாஇருக்கான்னு தேட மாட்டாருன்னு சொன்னான் தெரியுமா?.

— நீ தலகீழ தின்னாலும் இப்பிடிக் கொணமான பயலப் யாக்க முடியுமா? —ஒன்னையே தாத்தான்னு கூப்புடுதிலே அவனுக்கு எவ்வளவு சந்தோஷம் இருக்குன்னு தெரியுமா! இப்பிடிப்பயலே நீவிட்டுப் போட்டு இருக்கியே... போ போ. நீ சீக்கிரமாப் போயி பிச்சையாகவே கூட்டிக்கிட்டு வந்திருன்னு சொல்லிவிட்டு வண்டியில் ஏறி உட்கார்ந்தார் பொன்னையா நாயக்கர்-

வண்டியில் உட்கார்ந்தவர் பிறகு என்ன நினைத்தாரோ அவசரமாகக் கீழே இறங்கி வந்தார். பூங்கா வனம்! நான் எதுக்கு இவ்வளவு அவசரப் படுதேன் தெரியுமா? இப்ப ஊர்களுக்குளே நெலமே ஒண்ணும் சரி இல்லே. எங் கட்சிஒங்கட்சின்னு கொடியைப் புடுச்சுக்கிட்டு கும்மாளம் போட்டுக்கிட்டே இருந்த வெடலப் பயகே இப்பக் கொஞ்ச நாளா எஞ்சாதி ஒஞ் சாதின்னு பேச ஆரம்பிச்சிட்டாங்க. அடபேசிப் போட்டு அவங்க அவங்க பாட்ல வெட்டியப் பாத்துப் போவாங்களினு பாத்தா ஒருத்தனுக் கொருதன் மொறைச்சுப் பாத்துக்கிட்டு மல்லுக் கெட்டத்திரியுதாங்க- இது எதுலே போயி முடியப் போகுதோ தெரியலே. ஊர் ளுக்குள்ளேயே எந்த நேரம் என்ன நடக்கும்னு சொல்ல முடியாது. நீ இப்பிடி நேரத் திலே பிச்சையாப் பயலே அடிச்சு வெரட்டினா சேரியிலே உள்ளவங்கஒன்னப்பத்தி என்ன நெனப்பாங்க தெரியுமா? அதுக்காகத்தான் சொல்லுதேன் நீ வெரசியாப்போயி நம்ம பிச்சையாவே கூட்டிக்கிட்டு வந்திருன்னு சொல்லிவிட்டு மறுபடியும் வண்டியில் ஏறி உட்கார்ந்தார் :— மாடுகளும் டவுணை நோக்கி வேகமாகக்கிளம்பியது

—ஆனால் பூங்காவனத் தேவருக்கு பெரும் அதிர்ச்சியாக இருந்தது. கடந்த ஒருவாரமாக கிழக்கே சேரியிலிருந்து. நெல்லு, கேப்பை அரைக்க வருபவர்களின் எண்ணிக்கை குறைவாகப் போவதற்கு வெடலப் பையன்களின் விஷயந்தான் காரணமோ.... என்று யோசிக்கலானார்! பிறகும் பார் யார் சொல்புத்தி கேட்டு எப்பிடிக்

படிப்பகம்

www.padippakam.com

கெட்டுப் போனால் நமக்கென்ன நாமே உடனே போயி பிச்சையாவைக் கூட்டிக்கிட்டு வந்திருணும் கிற தீர்மான முடிவுக்கு வந்தார். ஆனா, நாம பிச்சையாவைக் கூப்பிட சேரி தெருவழியாப் போனா அவங்க வழக்கம் போலவாங்கய்யான்னு கேப்பாங்களா! இல்லே மொறைச்சுப் பாத்து திரும்பிக்கிடு வாங்களான்னு பூங்காவனத் தேவருக்கு பலத்த சந்தேகம் வந்துவிட்டது.

பிச்சையாவுக்காக கவுரவத்தை விட்டு விடவா இல்லே கவுரவத்துக்காக பிச்சையாவே விட்டு விடவா.... என்ற மனப் போராட்டம் அவரை உலுக்கி எடுத்தது எந்த முடிவுக்கும் வரமுடியாமல் வீட்டில் போய் மல்லாந்து படுத்துக் கொண்டார்.

சூரிய ஒளி மறைந்து மெள்ள மெள்ள இருள் கவியத் தொடங்கியது புதுப் பயன் கருப்பு சாமி ரைஸ் மில்லைப் பூட்டி தாத்தா சாவி இந்தாங்கன்னு கொடுத்து விட்டு, தாத்தா! பிச்சையாவுக்கு ரொம்ப குளிர் காய்ச்சலாம் அவுக அம்மா இஞ்சி வாங்கிக் கிட்டுப் போறா ன்னு சொன்னான் பூங்காவனத் தேவர் துள்ளி எழுந்து உட்கார்ந்தார். பிறகு விரல்களை வளைத்து சொடக்குப் போட்டுக் கொண்டே எழுந்து விட்டிற்குள் அங்கும் இங்குமாக நடந்து கொடுத்தார். இருட்டாய் விட்டது இப்பப் போனால் ரெம்பப் பேருக்குத் தெரியாதுபிச்சையா குடுசைக்குப் போவமா... என்று எண்ணினார். ஆனால் அவர் உள்ளம் இன்னும் கவுரவ உணர் விலேயே இருந்தது. மறுபடியும் மல்லாந்து படுத்துக் கொண்டார்.

திடீரென்று தீ...தீ... என்ற பெரும் கூக்குரல் கிழக்கே சேரியிலிருந்து கிளம்பி வந்தது! ஓடிவந்து வெளியே எட்டிப் பார்த்தார் சேரியின் கீழ்க்கோடியில் தீ நாக்குகள் உயர்ந்து தெரிந்தது பொன்னையா சொன்னது சரியாப் போச்சே'' என்று பூங்காவனத்தேவர் திடுக்கிட்டார். அப்ப நம்ம பிச்சையா...? அதற்கு மேல் அவரால் நிலை கொண்டு நிற்கமுடியவில்லை வாலிப வயதில் ''கிளித்தட்டு'' விளையாடுவதில் புலிப்பாய்ச்சல் பூங்காவனம் என்று பெயர் வாங்கிய அவருக்கு இப்பொழுது அதே விறு விறுப்பு வந்தது பிச்சையா குடிசையை நோக்கி ஒரே பாய்ச்சலாக ஓடினார்.

குடிசையில் பிச்சையா அம்மா இல்லை அவள் குடத்துத் தண்ணீரைத் தூக்கிக்கொண்டு தீப்பிடித்த

படிப்பகம்

www.padippakam.com

வீட்டை நோக்கிப் போய் விட்டாள்- குடிசையின் மாடாக் குழியில் தகர விளக்கு சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்தது பிச்சையா மூஸ், மூஸ், என்று ஏங்கி முனுகிக் கொண்டே பாயில் படுத்திருந்தான். ஆள் நுழைகிற சந்தடி கேட்டு தலையைத் திருப்பி ஏறிட்டுப் பார்த்தான் அவன் உடம்பெல்லாம் வெடவெடத்தது!

தாத்தா... நானு துட்டே எடுக்கலே தாத்தா.... துட்டே எடுக்கலே தாத்தா.... என்று பயங்கரமாக ஏங்கி அழுதான்! பூங்காவனத் தேவர் துடித்துப் போனார் குமுறி வந்த அழுகையை அடக்கிக் கொண்டார். "பிச்சே நீ என்னைக்குமே மனுஷந்தாண்டா... நாந்தான் எடையிலே மிருகமாப் போயிட்டேன்" என்று சொல்லிக் கொண்டே அவனை வாரி யெடுத்து தோளில் போட்டுக் கொண்டு வேகமாக நடந்தார்! பிச்சையா உடம்பெல்லாம் அனலாகக் கொதித்தது.

டவுனுக்குப் போற வண்டிப் பாதை வழியாக ஓட்டமும் நடையுமாக வந்த பூங்காவனத் தேவர் பிறகு என்ன நினைத்தாரோ கண்மாயின் நடுவே கருவேல மரங்கள் அடர்ந்த ஒத்தையடிப் பாதை வழியாக பிச்சையாவைச் சுமந்து கொண்டு நடந்தார்—

இந்தப் பாதை வழியாப் போனால் டவுண்லே இருக்கிற டாக்டர் வீடு எட்டிப் பிடிக்கிற தூரந்தான் என்பது அவருக்குத் தெரியும்.

கண்மாயின் நடுப்பகுதியில் போய்க் கொண்டிருக்கும் போதே அவர் தோளில் சாய்ந்திருந்த பிச்சையா தாத்தா! என்றான் "என்ன பிச்சே"

"தாத்தா நீங்க முந்தானத்து அடிச்சதுக்குந்தான் நானு அழுகலையே.... இப்ப நீங்க ஏந் தாத்தா அழுகுறியே?"

பூங்காவனத் தேவர் அவனுக்குப் பதில் சொல்லவில்லை. கண்களைத் துடைத்துவிட்டு அவன் முதுகை தடவிக்கொடுத்துக் கொண்டே வந்தார்.

கண்மாயின் மறுகரை ஏறிய அவர் கிழக்கே திரும்பிப்பார்த்தார். தீ ஜுவாலைகள் அடங்கி சிகப்பு நிற புகை மண்டலம் மட்டும் உயரமாகத் தெரிந்தது எனினும் வெடலப் பையன்களின் வ முறை வார்த்தைகளும் வீராவேசப் பேச்சுக்களும் தொலைதூரத்தில் ஒலித்துக் கொண்டே இருந்தது—இந்த

படிப்பகம்

www.padippakam.com

நிகழ்ச்சி பூங்காவனத் தேவருக்கு பெரும் மன நெகிழ்வைக் கொடுத்தது.

''ஹூம்?' மனுஷங்க காலத்தப் பின்னாலே தள்ளி முன்னாலே போகனும்னு நெனச்சா காலம் மனுஷங்களே பின்னாலே தள்ளி பழைய காலத்துக்கே போங்கடான்னு சொல்லுது. மனுஷங்க காலத்தே பின்னாலே தள்ளி எப்ப முன்னாலே போகப் போறாங்களோ தெரியலே!'' என்று முனகிக் கொண்டே டவுனை நோக்கி நடந்தார் பூங்காவனத் தேவர்.

'.தாத்தா?''

''என்ன பிச்சே''

'நம்ம இப்ப எங்க போரோம்'

''அந்தா தூரமா லைட்டு வெளிச்சம் தெரியுது பாரு டாக்டர் வீடு —அங்கதான் போறோம்'?

''ஒங்களுக்கு கை வலிக்குமில்லே நானு கொஞ்சங்கானு நடக்கட்டா?''

''வேண்டாம்பிச்சே...ஒனக்கு ரொமபக் கால்ச்சலடிக்கி ஒன்னாலே நடக்க முடியாது-அவன் அமைதியாகிவிட்டான்.

இருட்டுப் பாதையில் நடந்தவாறு இருந்த பூங்காவனத் தேவர் மஞ்சனத்தி செடி புதராக இருந்த இடத்தில் சிறு சலசலப்பு உண்டாவதைப் பார்த்து திகைத்து நின்று திரும்பிப் பார்த்தார். அடுத்த விநாடி டமார்... என்று வெடிகுண்டு வெடித்த சப்தம் பெருய இடியோசையாக முழங்கியது.

''ஏலே... பிச்சையா!'' என்ற பெரும் அவல ஓலத்துடன் பூங்காவனத்தேவர் தரையில் விழுந்தார். அந்த முன்னிருட்டில் யாரோ தெரிந்தோ தெரியாமலோ வீசிய வீரியமான வெடிகுண்டு அவர் உயிரைக் குடித்துவிட்டது.

சில அடி தூரம் தூக்கி எறியப்பட்ட பிச்சையா தாத்தா... தாத்தா.... என்று கோரமாகக் கதறினான். அவன் தாத்தாவிடம் போகத் துடித்தான். கால்கள் வரவில்லை. அவனது இடது கால் எலும்பு தெரிய இடுப்பிலிருந்து தொங்கியது. கைகளை ஊன்றி தவழ்ந்து கொண்டே போய் தாத்தா! என்று அவர்மீது விழுந்தான் அத்துடன் அவன் ஜீவனும் ஓடுங்கியது.

நிரபராதிகளான இரண்டு சடலங்களிலிருந்தும் பீறிட்டுப் பாய்ந்த ரத்த வெள்ளத்தை பூமி மாதா கண்ணீர் மல்க தனது அகன்ற மாரிபில் தாங்கிக் கொண்டே இருந்தாள்!

படிப்பகம்

www.padippakam.com

ஏழ்மையின் மிஞ்சிய புன்மையிலை

—குலோத்துங்கன்

1. சுற்றுப் புறத்தினைக் காப்பர் யாமெனச்
சொல்லி யெழுந்துள தொண்டர்களே;
சற்றுப் பொறுத்திடு வீர் ; இங்கு யாம்சொலும்
சங்கதி கேட்டுப்பின் மேல்தொடர்வீர்

2. மாளிகை வீட்டினில் வாழுகி றீர்; உமை
மாசறு சூழலில் பேணுகிறீர் ;
கோளிடை யாத்திரை கொண்டுள மேற்றிசைக்
கூட்டத்தின் பாங்கினில் பேசுகிறீர்.

3. அன்னை இயற்கையின் தூய்மையைக் காப்பதில்
யாரும் சளைத்தவர் என்பதிலை :
முன்னுள தேவைகள் யாவையும் கண்டபின்
முக்கிய மென்பவை தேர்ந்திடுவோம்.

4. ஆலையின் உப்பினில் நல்வயல் கெட்டதாய்
ஆய்வினர் சொன்னதை ஓதுகிறீர் :
காலையும் மாலையும் கஞ்சியிலாத் துயர்க்
கண்களின் ஏக்கத்துக் கேதுரைப்பீர்.

5. பூச்சி மருந்தினம் நீர், நிலம் யாவினும்
புன்மை கலந்த தெனப்புகல்வீர்.
பேச்சினி லென்பயன் : நாளும் வளர்பசிப்
பீடையில் வாடுவர்க்கேது சொல்வீர்.

6. வானமும் வையமும் மாறுமென்பீர் : வளர்
மாசினில் மானிடம் மாளுமென்பீர் :
வானமும் வையமும் மாசுசெய்தோர், சொலும்
வார்த்தையைக் இன்னைபோல் வாய்திறப்பீர்.

படிப்பகம்

www.padippakam.com

7. தத்தி, விழுந்து, தவழு கிறோம் : புவி
தந்தவை நாம்பெறக் கூடுகிறோம் ;
எத்தனை செல்வங்கள் மேற்றிசையில் : நமக்
கின்னொரு 'வேதம்' இயம்புகிறார்.

8. ஏழ்மையின் மிஞ்சிய மாசு மிலை : பசி
சர்ப்பதை மிஞ்சிய நோவுமிலை ;
வாழ்வதும் சாவதும் ஒன்றெனும் ஏழையர்
மாசறு சூழ்நிலை ஏதறிவார்.

9. சேரி யெனும்நர கின்குள தே:அவண்
சென்(று)அவர் உய்வழி தேறுவிரோ ?
காரியம் யாதினும் கைகொடுக் காதநும்
காகிதப் போரினால் யாதுபயன் ?

10. இற்றை அறிவியல் தந்த பொருள்பல
ஏற்றுப் பயன்பெறு சூழ்நிலையில்,
குற்ற மெனச்சில தோன்றிடு மேல்அவை
கூர்ந்து களைந்திடல் யார்தடுத்தார் ?

11. தேன்தரும் ஈக்குலம் சீறிடு மேல்அது
தேனெனக் கொட்டுதல் கண்டதுண்டு ;
ஊன்வலி நீக்குவம் : தேன்விழை கின்றனம் :
ஓட்டஅவ் ஈக்குலம் மாய்ப்பதிலை.

12. வேரிற் பழுத்த பலாவின் நறுஞ்சுளை
மேலுள முட்கள் தவிர்ப்பமன்றோ :
பாரிற் புதுக்கலை ஏற்றிடு நாள்அதன்
பாதகம் தேர்ந்து தவிர்த்திடுவோம்.

13. வையத்தின் ஓர்சிறு பாகத்தில் வாழுநர்
வானையும் மண்ணையும் மாசுசெய்தார் :
பையநம் நாட்டினர் நல்வளம் தேடுநாள்
''பாவம்'' என்றிங்குவந் தோதுகிறார்.

14. சூழும் புறங்களில் மாற்றமொன் றின்றியும்
துய்க்கும் வளங்கள் வளர்வதிலை :
வாழும் நிலத்தையும் வானையும் காத்திடும்
வாயில் திறந்துபின் மேல்நடப்போம்.

படிப்பகம்

www.padippakam.com

கவிதையே காத்திரு

—களந்தர்

அருந்தாயின் திருவயிற்றில்
அரும்பாகிப் பூத்தபோதே
எறும்பாய்ச் சிறுத்தேன்

பின்,

இரும்பாய் உழைத்துத்
துரும்பாய் இளைத்துத்
துயரால் களைத்தேன்.

எந்தன் துயரத்தை
எழுதி வைக்க நினைத்தாலோ
பேனாவில் மையில்லை!

குருதியால் என் கதையின்
குறிப்பெடுக்கக் கையறுத்தேன்
கசக்கியும் கசியவில்லை.

கூழுக்கு விற்ற
குருதியினி ஊறும்வரை
கவிதையே காத்திருப்பாயா?

நினைவஞ்சலி

படைப்பாளி மக்களின் இதயத் துடிப்பின் குரல். அவனது குரலை நெறிப்பது ஜனநாயக படுகொலை, சென்ற ஆண்டு முதல் நாள் மக்கள் கலைஞர் சப்தர் ஹஷ்மியின் கொலையுடன் துவங்கியது. அந்தக் கொலையின் பின்னணியில் கொக்கறித்தவர்களுக்கு மக்கள் தீர்ப்பளித்து விட்டார்கள். காதகர்கள் கலைஞனைக் கொன்றுவிடலாம். ஆனால் அவன் குரலை அடக்கிவிட முடியாது. இன்னும் ஓங்கி ஒலிக்கும். கொள்கைகளின் பால் நின்று தன் இன்னுயிரை அர்ப்பணம் செய்த கலைஞன் சப்தர் ஹஷ்மியின் நினைவுக்கு தாமரை நினைவஞ்சலி செலுத்துகிறது.

படிப்பகம்

www.padippakam.com

சென்ற இதழ்த் தொடர்ச்சி

தமிழ்க் கவிதை மரபில் பெண்

—ஹெச். ஜி. ரசூல்

பருவம் வந்ததை
மறைக்க முடியாத—பூக்கள்
தெருவில் போக முடியாது
திண்ணக் காத்திருக்கும்
எண்ண விழிகளுக்கு
வேலியிடவும் முடியாது.

கற்பழிப்புக்களால் பாதிக்கப்பட்ட பெண்களின் நிலை

இன்றைய சமுதாய அமைப்பிலே வரதட்சணை கொடுமையின் காரணமாய் கணவன்களால், மாமியார்களால்; வேலை பார்க்கும் இடங்களில் உயர் அதிகாரிகளால்; சமுதாயத்தில் உலாவும் காமவெறியர்களால் அவமானப் படுத்தப்படும் பெண்களின் வாழ்நிலை வெளிப்படுத்தப்படுகிறது.

பண்ணை நுகத்தடிகளில் வேலைபார்க்கும் உழைக்கும் பெண்கள் நிலஉடமையாளர்களால் வஞ்சிக்கப்பட்டு தாங்கள் பெறும் குழந்தைக்கு அப்பா யாரென்று சொல்லக்கூட முடியாத அளவுக்கு சிறுமைப்பட்டு வாழ்கின்ற பெண்களின் நிலை இங்கே வண்ணச்சிறகு கவிதையின் ஜீவத்துடிப்பாகி விடுகிறது.

அம்மா
உன் வசந்த ருதுவின்
முதல் ஆண்டிலேயே
நீ புஷ்பித்த
முதல் பூவின்
அப்பா யாரு...?

2

படிப்பகம்

www.padippakam.com

அந்த
பண்ணை இருட்டில்
உன் கன்னி நிலம்
கிழிக்கப்படுவதும்
கை வளையல்கள்
நொருக்கப்படுவதும்
காட்சி பிம்பங்களாய்...

இன்றைய ஆளும்வர்க்கத்தின் நலனை காக்கவே முழு முயற்சி எடுத்துக் கொள்கின்ற காவல் நிலையங்களில் பாவப்பட்ட பெண்களின் கற்பு சூரையாடப்படுவதை சில கவிஞர்கள் காட்சி சித்திரங்களாக்குகின்றனர்.

பூரண அலங்காரங்களுடன்
எங்கள் பெண்களை
நடு நிசியில்
நடந்து வர சொன்னாயே...
இங்கே-பார்

எங்கள் சகோதரிகளுக்கு
காவல் நிலையங்களிலேயே'
சாந்தி முகூர்த்தம்
அது புகழேந்தி பார்வையின் கவிதைப் பதிவு.

பாக்பத்திலும்
பாளையங்கோட்டையிலும்
அவளை
அவிழ்த்தார்கள்
ஜபல்பூரிலும்
சங்கனாங் குளத்திலும்
அவளை கிழித்தார்கள்

—கந்தர்வனின் வரிகளில் ஜாதீய வெறியால் சிதைக்கப் பட்ட கற்போடு; காவல் நிலைய வாசலில் கிழித்தெறியப் பட்ட பெண்மையின் அவலம் சுட்டிக்காட்டப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

இந்த ஆகஸ்டு இரவில்
எதனைத் தேடுகிறாய்
என் இளைய சகோதரியே...

கால காலமாக
காவல் நிலையத்தில்
கடித்தெறியப்பட்ட
கன்னங்களை...
கால்களை...
காம்புகளை....

வண்ணச்சிறகின் கவிதையில் காவல்நிலையங்களில் கதறக் கதறக் கற்பழிக்கப்பட்டு அலங்கோலப் படுத்தப்பட்ட பெண்மையின் துயரச் சித்திரம் துல்லியமாக படம்பிடித்துக் காட்டப்படுகிறது.

மதங்களின் பார்வையில் பெண்

தணிகைச் செல்வனின் கவிதை, பெண்களின் துயர் துடைக்க மதங்கள்கூட மறுதலித்துவிட்டதை அங்கதம் மேலிட கூறுகிறது. மதுராந்தகத்தில் கற்பழித்து கொலை செய்யப்பட்ட செய்யூர்க் கிராமத்து சோதரி ஞானசவுந்தரியைப் பற்றிய கவிதை இது.

தாலிமுடிச்சை விளைந்த
உன் தளிர்கழுத்து
சேலை முடிச்சால்
இறுக்கப்பட்டபோது
கர்த்தரும் வரக்காணோம்.
கடைவீதியில்
கணபதியும் வரக்காணோம்.

பிரபாவின் கவிதையும் மதங்கள், பெண்மையை பாது காக்கத் தவறிப் போனதை அம்பலப்படுத்துகிறது.

அவனது
கொலை விரல்களுக்கிடையில்

படிப்பகம்

www.padippakam.com

அவளது
குரல்வளைக் கிடந்தது.

பத்து வருடங்கள்
நாளும் விண்ணப்பித்தாள்
தேவனே... என்
கணவனைத் திருத்து.

....

இதற்காக... இவைகளுக்காக
மதங்கள் - உன்னை
மன்னிக்கச் சொல்லும்.
நீ—
மதங்களை மன்னிக்காதே !

கவிஞர் ஹாமீம் முஸ்தபாவின் கவிதை இந்து-முஸ்லிம் என எல்லா மத பழமைவாதிகளாலும் பெண்மையின் உரிமை 9றுக்கப்படுவதை உணர்ச்சிகரமாக்குகிறது.

ஜீவனாம்ச உரிமைகேட்ட ஷாபானு, கணவன் இறந்ததால் சிதையிலே கொளுத்தப்பட்ட ரூப்கன்வர், பொருளாதார மற்றும் சமுதாய உரிமை மறுக்கப்பட்டு நசுக்கப்பட்ட பெண்மையின் குறியீடுகளாகி விடுகிறார்கள்.

பாஞ்சாலியை பணயம் வைத்த
பாண்டவக் கூட்டங்கள்
ஷாபானுவின் உரிமைகளுக்கு
தீக்குச்சி உரசிய
துருக்கிய குல்லாக்கள்

இராஜஸ்தானில் பற்றி எரிந்த
அக்னி குண்டத்திற்கு
கட்டை அடுக்கிய
காவிமனதுகள்

படிப்பகம்

www.padippakam.com

பெண் விடுதலைக்கான தீர்வு

சமுதாய ரீதியாகவும், அரசியல் பொருளாதார ரீதியாகவும் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட பெண்களின் விடுதலைக்கு அவர்களது பிரச்சினைகளுக்கான தீர்வு சில கவிஞர்களால் சுட்டிக் காட்டப்படுகிறது.

வைரமுத்து வரதட்சணைப் பிரச்சினைகளில் சிக்குண்டு திணறிப்போகும் பெண்மைக்கு தீர்வினை பாதிக்கப்பட்ட பெண்கள் ஒன்றிணைந்துவிட்டால் வரதட்சணைவில்லை ஒடித்துவிடலாம் என்கிறார்.

இந்த வரதட்சணைவில்லை
வளைப்பதுது யார்?
ராமர்களுக்கு இன்று
ரத்தமில்லை.

ஜனகனோ பாவம்
சாய்வு நாற்காலியில்
எங்கே
சீதைகளே கொஞ்சம்
சேருங்களேன்.

பெண்கள் திரண்டெழுந்துவிட்டால் மட்டும் வரதட்சணை பிரச்சினை முடிவுற்று விடுவதில்லை. சம அந்தஸ்துடைய குடும்பங்களிடையே திருமண ஏற்பாடு செய்யாமல் குதிக்கு மீறி வரனைத் தேடுவதால் வரதட்சனை பிரச்சினை உருவாகிறது. மேலும் வரதட்சணை தருவதில்லை என்கின்ற குரல் பெண்களுக்கு அளிக்கப்பட வேண்டிய சம சொத்துரிமைக்கு எதிராகவும் திரும்புகிற அபாயமும் நடக்கிறது. எனவே எதையுமே பணத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் இந்த சமூக அமைப்பை உண்மையான அன்பு, பாசம், காதலுக்கு மதிப்பளிக்கும் சமுதாய அமைப்பாக மாற்றிட உழைக்கும் பெண்களும், ஆண்களும் இணைந்து போராடுவதே சரியானதாகும்.

படிப்பகம்

www.padippakam.com

பெண்ணடிமைத் தனங்களுக்கு தீர்வாக வண்ணச்சிறகு நிலபிரபுத்துவத்தை அழித்துவிடுகிற ஒரு ஆங்காரக் குரலை எழுச்சியோடு எழுப்புகிறார்.

அம்மா...
உடைக்கப்பட்ட
வளையல் துண்டுகளை—நான்
கணக் கெடுத்தாயிற்று.

இனி—
கணக்கு முடிக்கப் போகிறேன்
விடைகொடு.

இனி—
நொறுங்கப் போவது
கைவளையல்கள் அல்ல
கிழியப்போவது
கன்னி நிலங்களல்ல....
பண்ணை இருட்டுகள்.

இன்றைய சமூக அமைப்பில் நிலவுடைமை பண்ணை சமூகக் கொடுமைகளைவிட பிரதானமாக முதலாளித்துவ சமூகக் கொடுமை வடிவங்களே மேலோங்கியுள்ளது. எனவே எஞ்சியிருக்கும் நிலபிரபுத்துவ கொடுமைகளையும், முதலாளித்துவ சமூக அக்கிரமங்களையும் அழித்தொழிக்கப் படவேண்டியது அவசியமாகிறது.

கவிஞர் தணிகைச் செல்வனோ சமுதாய அரசியல் மற்றும் காவல்நிலைய துரோகிகளால் கற்பழித்து வீசப்படுகிற பெண்மையை மீட்க வேண்டுமெனில் துப்பாக்கி ஏந்த வேண்டும் என்கிறார்.

சரித்திரமாகிப் போன
எமது
சகோதரிச் சவங்களே.

படிப்பகம்

www.padippakam.com

உங்கள்
சவபாக்கியை—நாங்கள்
மீட்கும் போது
நாம்
ஏற்கவேண்டிய பாக்கி
ஒன்றிருக்கும்
துப்பாக்கி.

எல்லா ஜனநாயக முறை போராட்டங்களினாலும் பலன் ஒன்றுமில்லை. எனவே பாக்கியிருக்கு ஒரேமுறையான துப்பாக்கி ஏந்திய ஆயுதப் போராட்டமே பெண்ணடிமைத் தனத்தை தீர்வுக்கு கொண்டுவரும் என்கிறார். இது ஸ்தாபன ரீதியாக அணி திரண்டு ஜனநாயக ரீதியாக போராட்டங்களில் ஈடுபடும் உழைக்கும் வர்க்கம் பெற்று வரும் வெற்றிகளின் சாதனைகளை மறந்து பேசுவதாகும். இன்றைய ஜனநாயக யுகத்தில் மக்கள் பங்கேற்பு இயக்கங்களை மறுப்பதும் சரியல்ல. நாம் ஏந்த வேண்டிய ஆயுதங்களை நாமல்ல, நமது எதிரிகள் தான் தீர்மானிக்க வேண்டும்.

இறுதியாக இன்றைய சமூகநிலையில் பெண் ஒரு சார்பு நிலை ஜீவனாகவே கருதப்படுகிறாள். திருமணமாகும் வரை பெற்றோருக்கும், திருமணத்திற்குப் பின் கணவனுக்கும், வயதான காலத்தில் மகனுக்குமாக தன் வாழ்வை முடித்துக் கொள்கிறாள். பொருள் உற்பத்தியில் பெண்களின் பங்கு சமமாய் இல்லை. பொருளாதார சுயசார்பு இல்லாத காரணத்தினால் அவள் அந்நியக் கரங்களையே நம்பி வாழவேண்டியுள்ளது. பெண்களின் திருமணம் கூட காதலையோ, அன்பினையோ, விருப்பத்தையோ அடிப்படையாகக் கொண்டு இயங்கவில்லை. ஆயுள்காலம் முழுவதும் தனது உடலை உணவும் உடையும் அளிப்பவனுக்கு சரணாகதி அடையச் செய்யும் ஒரு நிகழ்ச்சிப் போக்காகவே உள்ளது.

எனவே பொருளாதார சுதந்திரம், அதனை உருவாக்கக் கூடிய கல்வி மற்றும் வேலை வாய்ப்பு, சமமாக பெண்களுக்கு கிடைக்கும் போதும், பெண்கள் தங்கள் திறமைகளை வளர்க்க

படிப்பகம்

www.padippakam.com

முழு சந்தர்ப்பமும் கிடைக்கும் போதுதான் பெண் விடுதலை சாத்தியமானதாகும். இது சமுதாய மாற்றத்தினால்தான் உருவாகும். இதற்காக பெண்கள் தங்களையும் அரசியல், பொருளாதார, சித்தாந்தப் போராட்டத்தில் இணைத்துக் கொள்ளவேண்டும். இத்தகைய சரியான தீர்வு புதுக்கவிதைகளில் அழுத்தமாக அழகியல்ரீதியாக பதிக்கப்படவில்லை. எனினும் சமகால பெண்களின் வாழ்வு அற்புதமான படிமச் சித்திரங்களாக புதுக்கவிதைகளில் பூத்திருப்பது வரவேற்பிற்குரிய அம்சமாகும்.

துணைநூற்பட்டியல் :

1. ஜீவா, ''புதுமைப்பெண்'' (நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை) ஜூலை, 1988.

2. விமலாபருக்கி, ரேணுசக்ரவர்த்தி, ''கம்யூனிசமும் பெண்களும்'' (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கல்வி இலாகா வெளியீடு, சென்னை) ஆகஸ்டு, 1976.

3. ஆர். பி. எஸ், ''கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் வெற்றிப்பயணம்'' (நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை) மார்ச், 1982.

4. மைதிலி, ''பெண்கள் இருவேறு உலகங்களில்'' (ஜனநாயக மாதர் சங்கம், தமிழ்நாடு)

5. பாரதியார், ''பாரதியார் கவிதைகள்'' (பூம்புகார் பிரசுரம், சென்னை) டிசம்பர், 1981.

6. பாரதிதாசன், ''பாரதிதாசன் கவிதைகள்'' (செந்தமிழ் நிலையம்—புதுக்கோட்டை) 1986.

7. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, ''மலரும் மாலையும்'' (பாரிநிலையம், சென்னை) 1973.

8. ஜீவா, ''ஜீவாவின் பாடல்கள்'' (நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை) பிப்ரவரி, 1975.

படிப்பகம்

www.padippakam.com

9. வைரமுத்து, ''திருத்தி எழுதிய தீர்ப்புகள்'' (கலைஞன் பதிப்பகம்,—சென்னை) பிப்ரவரி, 1979.

10. வைரமுத்து, ''இன்னொரு தேசியகீதம்'' (கலைஞன் பதிப்பகம்—சென்னை) டிசம்பர், 1984.

11. புவியரசு, ''இதுதான்'' (அன்னம் வெளியீடு, சிவகங்கை) நவம்பர், 1975.

12. தமிழன்பன், ''அந்த நந்தனை எரிச்ச நெருப்பின் மிச்சம்'' (பூம்புகார் பிரசுரம், சென்னை) ஆகஸ்ட், 1982.

13. அபிமானி, ''பாரம் சுமப்பவர்கள்'' (பரணி அச்சகம், மதுரை) மே, 1986.

14. கந்தர்வன், ''கிழிசல்கள்'' (அகரம், சிவகங்கை) அக்டோபர், 1981.

15. வண்ணசிறகு, ''வண்ணசிறகு கவிதைகள்'' (மலையரசி பதிப்பகம்) மே, 1985.

16. தணிகைச் செல்வன், ''ஒரு துண்டு இந்தியாவும் நானும்'' (அன்னம், சிவகங்கை) ஆகஸ்ட், 1983.

17. புகழேந்தி, ''ஒரு கையெழுத்தில்லா கடிதம்'' (காவ்யா வெளியீடு சென்னை) செப்டம்பர் 1982.

(முற்றும்)

முகப்பு :

கவிஞர் இளவேனில்

படிப்பகம்

www.padippakam.com

சோவியத் யூனியனில் 10 நாட்கள்

இந்திய—சோவியத் கலாச்சாரக் கழக தமிழக மாநிலக் கவுன்ஸிலின் சிபாரிசின் பேரில் புதுடெல்லி இஸ்கஸிலிருந்து மருத்துவக் குழுவின் ஒரு பிரதிநிதியாக என்னை மாஸ்கோ வரும்படி, அழைப்பு வந்தவுடன் எனது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எனது நெடுநாளைய கனவு நிறைவேறப் போகிறது என்ற இன்பக் களிப்பில் நான் என்னை மறந்து சில நிமிடங்கள் இருந்தேன். அகில உலக அடிமை நாடுகள் மற்றும் ஏகாதிபத்திய மாமன்னர்களின் ஆட்சி அழிந்து சுதந்திர சோஷலிச நாடுகள் பல தோன்ற வித்திட்ட, லெனின் தலைமையிலான நவம்பர் புரட்சி தோன்றிய நாட்டை, முதல் விண்வெளிவீரர் யூரிக்ககாரின் பிறந்த நாட்டை, முதல் விண்வெளி வீராங்கனை வேலண்டினா தெரஷ்கோவா தோன்றிய தேசத்தை, பங்களாதேஷ் விவகாரத்தின் போது இந்தியாவை அச்சுறுத்திய அமெரிக்க 7வது கப்பற்படையை விரட்டியடித்து நமக்கு உதவிய புண்ணிய பூமியை, இந்திய விண்வெளி வீரர் ராகேஷ் சர்மாவை விண்வெளிக்கு அனுப்பிய நாட்டை, பல்வேறு மாபெரும் தொழிற்சாலைகள், அணைக்கட்டுகள், போன்றவற்றை அமைத்துக் கொடுத்து நமது பொருளாதார நிலையை உயர்த்திய நாட்டை, நேரிலேயே சுற்றிப் பார்க்கப் போகிறோம் என்ற பெருமிதத்துடன் சோவியத் யூனியன் செல்லவேண்டிய ஏற்பாடுகளில் இறங்கினேன். டில்லியிலிருந்து மாஸ்கோ சென்று மீண்டும்

—டாக்டர் அ. கதிரேசன்

படிப்பகம்

www.padippakam.com

டில்லி திரும்பிவர, அங்கு உணவு, உறையுள் ஆகியவை அனைத்தும் அவர்களது பொறுப்பு.

சென்னையிலிருந்து டில்லி சென்று, பின்னர் டில்லியிலிருந்து சென்னை வருவது நமது பொறுப்பு, இருந்தபோதிலும் இந்த அரிய வாய்ப்பை விட்டு விடக் கூடாது என்று ரூ 3712 கொடுத்து சென்னை—டில்லி—சென்னைக்கான விமான டிக்கெட்டை எடுத்துவிட்டேன். நான் செலவழித்த தைத் தெரிந்த, நான் பணிபுரியும் ஏ. எம். எம். அறக்கட்டளையைச் சார்ந்த தலைவர் திரு ஏ.எம்.எம். அருணாசலம் அவர்கள், ரூ. 3712-க்கான ஒரு காசோலையை அளித்தார். இந்த உதவியை நான் என்றும் மறக்க முடியாது.

டில்லி விமான நிலையத்தில் என்னைச் சந்தித்து வேண்டிய உதவிகள் செய்து, இஸ்கஸின் அன்சால்பவானுக்கு அழைத்துச் சென்று பாஸ்போர்ட், விசா ஆகியவற்றைப் பெற்று எனக்கு உதவியளித்தவர் என். சி. பி. எச்.ஐச் சார்ந்த தோழர் கிருஷ்ணமூர்த்தி அவர்களாகும். பின்னர், சோவியத் கலாச்சாரக் கழகத்தின் ரஷ்யநாட்டு அதிகாரிகளின் அறிவுரைகளைப் பெற்று கொண்டு நவம்பர் 25 காலையில் ஏரோஃப்ளோட் விமானத்தில் மாஸ்கோ பிரயாணமானேன். என்னுடன் பாட்டியாலா இஸ்கஸைச் சார்ந்த டாக்டர் தாண்டன், புதுடில்லியைச் சார்ந்த டாக்டர் சஹானி, டாக்டர் மச்சத்தா ஆகியோரும் எங்கள் மாத்துவர்களின் குழுவின் உறுப்பினர்களாவர்.

நள்ளிரவு 1.30 மணிக்கு (இந்திய நேரம்) அப்போது மாஸ்கோவில் நேரம் இரவு 11 மணியாகும்.) மாஸ்கோ விமான தளம் வந்தடைந்தோம். அப்போது வெப்பநிலை '0' க்கு 10 டிகிரி குறைவாக (—10°சி) இருந்தது. மாஸ்கோவாசிகள் அந்த மாதத்தில் அவ்வளவு குளிர் பொதுவாக இருக்காது எனக்கூறினார். அந்தக் குளிரில் எங்களைச் சந்திக்க, வரவேற்க தோழர் டாக்டர் அலெக்ஸாண்டர் பி. குஸ்பிசேவ் (மாஸ்கோவின் மிகப் பிரபல டாக்டர்களில் ஒருவர்) தனது மொழி பெயர்ப்பவரின் துணையுடன் காத்திருந்தனர். எங்களைக் கட்டித்தழுவி, முத்தமிட்டு வரவேற்றனர். ''கோமேதா'' ஹோட்டலில் அன்று தங்கினோம். (கோமேதா என்றால் 'அக்னிக் கோளம்' அல்லது 'நெருப்பு உருண்டை' என்று பொருள்). 18 மாடியும்

படிப்பகம்

www.padippakam.com

600க்கும் மேலான அறைகளும், ஒரு உணவு விடுதியும் கொண்ட அந்த ஹோட்டலில் பணியாற்றுபவர்களில் 60% பெண்களாவர். டிசம்பர் 30 தேதி வரை மாஸ்கோவில் தங்கி பல்வேறு மருத்துவமனைகளுக்குச் (இருதய நோய்ப் பிரிவு, புற்று நோய்ப் பிரிவு, அக்குபஞ்சர் பிரிவு காசநோய் பிரிவு இன்ன பிற) சென்று நடப்பதை நேரில் கண்டோம். மருத்துவப் பிரிவு என நான் கூறும்போது ஒவ்வொன்றும் பல அடுக்கு மாடிகள் கொண்ட நவீன மருத்துவ வசதிகள் கொண்ட மருத்துவ மனைகளாகும். ஒவ்வொன்றிலும் கிட்டத்தட்ட 1000 முதல் 2500 படுக்கைகள் உள்ளன.

மிகவும் அற்புதமான ஒரு அம்சம் என்னவெனில் பிறந்தது முதல் இறப்பது வரை சோவியத் மக்கள் அனைவருக்கும் இலவச மருத்துவ சிகிச்சை என்பது குறிப்பிடத்தக்கது. எந்தப் பகுதியிலும் யாருக்காவது திடீரென்று வியாதி தோன்றினால், ஆம்புலன்சுக்கு தொலைபேசியில் பேசினால் 5-10 நிமிடங்களுக்குள் நர்சு, டாக்டர் ஆகியோருடன் ஆம்புலன்சு வந்துவிடும். நோயாளிக்கு முதலுதவி அளிக்கப்படும். உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டு வீட்டுக்கு ஆம்புலன்ஸிலேயே அழைத்துச் செல்லப்படுவார். இதற்கு ஒரு கோபெக் கூட (1 பைசா) செலவு கிடையாது. எந்தவகையான நோயாக இருந்தாலும் சரி, எத்தனை நாட்கள் மருத்துவமனையில் தங்கிருந்தாலும் சரி, முழுக்க முழுக்க இலவச சிகிச்சை கிடைக்கும். இந்த முறை கம்யூனிஸ்ட் நாடுகளைத் தவிர வேறு எங்கும் கிடையாது.

பல்வேறு மருத்துவமனைகளில் சோவியத் டாக்டர்களுடன் கலந்து உரையாடல், கருத்தரங்கு, சொற்பொழிவு போன்ற பல நடைபெற்றன. மாலை நேரங்களில் மாஸ்கோவின் பல பகுதிகளுக்குச் சென்று வந்தோம். இதில் எங்களை மிகவும் கவர்ந்தது. லெனின் மௌசோலியம், கிரெம்ளின் மாளிகை, லெனின் அருங்காட்சியகம், புரட்சி கண்காட்சி, போல்ஷாய் நடனம், பனிச் சறுக்கு விளையாட்டு, மெட்ரோ சுரங்க ரயில் பாதை போன்றவையாகும். 5 கோபக் கொடுத்தால் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும், எந்தப் பகுதிக்கும் சென்று வரலாம். 1-½ கோடி மக்கள் கொண்ட மாஸ்கோவின் பெரும்பகுதிகளை இந்த மெட்ரோ மூலம் அடையலாம். எல்லாமே தானி

படிப்பகம்

www.padippakam.com

யங்கி சாதனங்கள் கொண்டது. ரயிலின் ஒரு பகுதி மாஸ்கோ நதியின் அடியில் செல்லுகிறது. பெரும்பகுதி நதிக்கு மேலேயே நிலத்தில் குகைப் பாலத்தில் செல்லுகிறது. பேருந்துகள் டிராம் வண்டிகள், டாக்சிகள் போன்ற பல வசதிகள் உள்ளன. 27ம் நாள் நவம்பர் வெப்பநிலை—27° செ. ஆகும்.

28 தேதி சோவியத் நட்பகத்தில் (House of Soviet Friendship) டாக்டர் குஸ்மிசேவ் தலைமையில், மாஸ்கோ நகர் பலசிறந்தடாக்டர்களும்,நாங்களும் கலந்து இந்திய சோவியத் மருத்துவ நட்புறவை எவ்விதம் சிறப்படையச் செய்வது என்று உரையாடினோம். டிசம்பர் 1ம் நாள், மால்டேவியா தலைநகரான சிஷினேவுக்குப் பறந்து சென்று''அக்டோபர்''ஹோட்டலில் (அக்டோபர் புரட்சியை நினைவூட்டும் ஹோட்டல்) தங்கினோம்.

இந்தக் குடியரசின் மருத்துவமனையில் 1300 படுக்கைகள் உள்ளன. புற நோயாளி பகுதியில் மட்டும் 24 தொலைபேசிகள் இயங்குகின்றன. நோயாளிகளின் ஒவ்வொரு வார்டிலும் ஒரு டி. வி, ஒரு ரேடியோ, ஒரு தொலைபேசி, ஒரு குளிர்சாதனப் பெட்டி காணப்படுகின்றன. அங்கு நாட்டுப்புற நடனத்தில் (Folk Dance) கலந்து கொண்டோம். எங்கள் நால்வரையும் நிர்பந்தப்படுத்தி நடனமானச் செய்தனர். மால்டேவியா மக்களது உபசாரம் விருந்தோம்பல், இந்தியா, சோவியத் நட்புறவின் மீதுள்ள பிடிப்பு போற்றத்தக்கது.

டிசம்பர் 4ம் நாள் மீண்டும் மாஸ்கோ வந்து ஹோட்டல் ''இஸ்மேலியா நோவா''வில் தங்கினோம். இது, 28 மாடிகள் கொண்ட 4 கட்டிடங்களில் அமைந்திருக்கின்றது. இரண்டு நாட்களில் எக்ஸ்ரே நிறுவனத்தையும், செவிலியர் கல்லூரியையும் கண்டு, பிரமித்து நின்றோம்.

விண்வெளி வீரர் யூரி ககாரினைப் பற்றி ரஷ்ய நண்பர் ஒருவர் கூறியது பற்றி இங்கு குறிப்பிடவேண்டும். அவரது மனைவிக்கு ஏதோ ஒரு ஆபரேஷன் நடந்ததாம். அப்போது ககாரின் கூறினாராம் :- ''நான் எனது மனைவியுடனே இருக்க விரும்புகிறேன். ஆகவே என் மீதும் ஏதாவது ஆபரேஷன் செய்து என்னையும் அவளது அறையில் அவளுடன் வையுங்கள்''. விண்வெளியில் பறந்து சென்ற தோழர் ககாரின் தனது மனைவியின் மீது அவ்வளவு பாசம் வைத்திருந்தார்.

படிப்பகம்

www.padippakam.com

சோவியத் யூனியனில் நாங்கள் கண்ட மிகச் சிறப்பான அம்சங்கள் வருமாறு :-

★ உழைப்பதில் சோவியத் மக்கள் கொள்ளும் ஆர்வம், பெருமை, கம்பீரம் !

★ பெரும்பாலான பெண்கள் வீட்டு வேலையை முடித்து விட்டு, அலுவலக பணிகளுக்குச் செல்லும் தோரணை.

★ இலவச மருத்துவ உதவி.

★ எல்லா மட்டங்களிலும் இலவசக் கல்வி.

★ 100% எழுத்தறிவு.

★ வேலை உத்திரவாதம்.

★ சோவியத் மக்களின் கட்டுப்பாடு, பாசம், நன் னடத்தை, விருந்தோம்பல்.

★ குறிப்பாக சோவியத் இந்திய நட்புறவைப் பேணிக் காப்பதில் உள்ள அவர்களின் அக்கறை.

மாஸ்கோவில் உள்ள பல இடங்களில் பெரிஸ்ட்ரோய்கா, கிளாஸ்னாஸ்ட் (மறு சீரமைப்பு, பகிரங்க விவாதம்) பற்றி பல விவாதங்கள் நடைபெற்ற போதிலும், சோவியத் இந்திய நட்புறவைப் பற்றி எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. இன்னும் எழுத வேண்டியது நிறைய உள்ளது.

"வாழ்க இந்திய—சோவியத் நட்புறவு."

படிப்பகம்

www.padippakam.com

கன்னடமொழிச் சிறுகதை

...அவள் விட்டுச் சென்ற...

கன்னடத்தில் எழுதி ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்ததும்] சாந்திநாத்தேசாய்

ஆங்கில வழி தமிழாக்கம்:

திருவைகாவூர் கோ. பிச்சை

"பார்வதம்மா, நந்தினி இன்னும் கல்லூரியிலிருந்து வரவில்லையா'?" என்று சதாசிவய்யா தனது படுக்கை அறையிலிருந்து ஓய்வு அறைக்குச் செல்லும் போது சமயலறை நோக்கி கேள்வியைத் தொடுப்பார். அலுவலகத்திலிருந்து வந்த பிறகு வீட்டில் நந்தினியைக் காணவில்லை என்றால் எதோ ஒன்றை இழந்துவிட்டவரைப் போல் உணர்வார்.

"அப்பா, அக்கா, ராமு கடைக்கு காய்கறி வாங்கப் போயிருக்கா" என்று இன்னொரு அறையிலிருந்து மஹேஷ் சொல்லிக் கொண்டே ஓடி வந்து அப்பாவின் கைகளைப் பிடித்துக்கொண்டான்.

"மஹேஷ் நீயும் அக்காவுடன் போய்வந்தாலென்ன?" என்று சதாசிவய்யா கேட்டார்.

"தான் ஐந்து நிமிஷத்தில் திரும்பி விடுவதாகவும் அவள் வரும் வரையில் என்னை இங்கேயே இருக்கும் படியும், வரும் போது எனக்கு நிச்சயம் காட்பரிசாக்லேட் வாங்கி வருவதாகவும் சொல்லி இருக்கிறாள். என்றான் மஹேஷ்.

"சரி மஹேஷ் உள்ளே போய் எனக்கு தேநீர் தயாரித்து எடுத்து வரும்படி பார்வதம்மா விடம் சொல்."

"பார்வதம்மா இன்றைக்கு வரவில்லை. அவங்க மகள் தான் சமயல் செய்ய வந்திருக்காங்க. அவங்களிடம் போய் சொல்கிறேன்." என்று தனது கால்சட்டையை மேலே இழுத்

படிப்பகம்

www.padippakam.com

துப் பிடித்துக் கொண்ட அடுக் அடுக்களைப் பக்கமாக ஓடி னான். மஹேஷ் ஆர்வத்தோடு குதித்து விளையாடும் போதெல் லாம் தாயற்ற குழந்தைக்காக தான் இரக்கத்தால் இழுக்கப் படுவதை உணர்வார்.

சதாசிவய்யா தனது காலணி களையும் காலுறைகளையும் கழற்றி விட்டு பெரு மூச்சு விட்டபடி உயிரற்றவர் போல் வழக்கமாக அமரும்தனது நாற் காலியில் சாய்ந்தார். ஆம் இந்த இரண்டு குழந்தைகளும் இல்லை என்றால் இந்த வீடு மயானம் போலத்தான் என்று அவர் நினைத்தார். பிரதான மாக நந்தினி வீட்டில் எவ்விதக் குறையுமில்லாதவாறு கவனித் துக் கொண்டாள். அவள் சிறந்த குடும்ப நிர்வாகி குடும் பத்தலைவி. தனது தாயார் சுனந்தாவைவிட மிகத் திறமை யுடன் குடும்பத்தை நிர்வாகம் செய்து வருகிறாள். இப்போது வீடு நேர்த்தியாகக் காட்சி யளிக்கிறது. சுனந்தா உயி ரோடிருந்தபோது இருந்ததை விட வீடு இப்போது நன்கு பராமரிக்கப்பட்டு அழகாக அலங்கரிக் கப்பட்டிருந்தது. அந்தோ பாவம்! இன்று சுனந்தா இல்லை. சுனந்தாவை சந்தோஷமாக வைத்திருக்க வில்லையே என்பதைநினைத்து அவர் வருந்தினார். அவரிடம் சந்தோஷத்தைவிட துன்பத் தையே சுனந்தா அனுபவித் தாள். திடீரென்று பிரசவ சமயத்தில் அவள் இறந்துவிடு வாளென்று அப்போது அவர் அறிந்திருக்க முடியாதல்லவா? அடக்க முடியாத கோபத்தில் அவள் மீது எரிந்து விழுவார்.

சில சமயங்களில் அடித்து விடு வார். அவள் அழுவாள்; அவள் கண்ணீர் விடும் ஒவ்வொரு சம யமும் தாங்க முடியாதபடி அவ ரது அடி வயிறு கலங்க ஆரம் பித்துவிடும். பின் ஆறுதல் கூற விரைந்து சென்று அவளை தன் கரங்களால் அணைத்துக் கொண்டு கொஞ்சிக் குலாவி மல்லுக்கு நின்று கிச்சு கிச்சு மூட்டி குஷிப்படுத்தி இறுதியில் சிரிக்க வைத்துவிடுவார். ஆரம் பத்தில் இது சுவையாகத்தானி ருக்கும்! ஆனால் கடைசியில் ஆனந்தம் குறைந்து கோபம் தான் அதிகமாகும். தன் மனை வியுடன் பேசிப் பழகியதைவிட நந்தினி வளர்ந்த பிறகு அவளு டன் பேசுவதில் ஆவல் காட்டி னார். அவளுடன் விவாதித் தார். சிரித்துப் பேசி மகிழ்ந் தார். அவருக்கு சதா நந்தினி-நந்தினிதான்............பரிதாபம் சுனந்தா-அவள் இப்படி இறந்து விடுவாளென்றோ, தன் வாழ் விலிருந்து மறைந்து விடுவா ளென்றோ அவர் சிறிதாவது எண்ணி இருந்தால் நிச்சயம்

படிப்பகம்

www.padippakam.com

அவளை அன்புடனும பாசத்துடனும் ஒரு பூவைப் போல நாசுக்காக வைத்திருந்திருப்பார். அவர் ஒரு மிருகம் இல்லையா? உண்மையில் அவர் மிருகம்தான்!

"ஐயா, தேநீருடன் தின்பதற்கு ஏதாவது தயார் செய்யட்டுமா?" கதவுக்கு அப்பாலிருந்து மெல்லிய குரலில் இந்தக் கேள்வி வந்தது. ஓஹோ இது பர்வதம்மா மகளின் குரலாக இருக்க வேண்டுமென்று சதாசிவய்யா எண்ணி கதவை நோக்கி தன் பார்வையை செலுத்தினார். தனது அலுவலகத்தில் வேலைபார்க்கும் இளைஞர்களில் தனது மகளுக்கு ஒரு மாப்பிள்ளை பார்க்கும்படி தன்னை பர்வதம்மா இரண்டு மூன்று தடவை கேட்டுக்கொண்டது அவரது ஞாபகத்திற்கு வந்தது. தனது ஆர்வத்தை அடக்கிக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்து விரல்களால் மூக்கை இழுத்துவிட்டுக் கொண்டார்.

"சரி யாரது? பர்வதம்மாவின் மகளா?" என்று கூச்சத்துடன் கதவுப்பக்கமாக எட்டிப் பார்த்தார்.

"ஆமாம், ஐயா! என் பெயர் கிரிஜா" என்று வாயிற்படிக்கு நெருங்கி வந்தபடி அந்தப் பெண் சொன்னாள்.

"எனக்கு எதுவும் சாப்பிடத் தோன்றவில்லை. மஹேஷுக்கு ஏதாவது வேண்டுமா என்று கேள். அவன் இதுவரை எதுவும் சாப்பிடவில்லையா? நந்தினி எங்கே?" இன்னும் சதாசிவய்யாவின் கண்கள் ஆராய்ந்துக் கொண்டுதானிருந்தன. உயரமான கட்டான உடம்புடன் அந்தப் பெண்ணின் பக்கவாட்டுத் தோற்றம் அவர் கண்ணில் பட்டது. நேருக்கு நேராக அவளைப் பார்க்க அவர் விரும்பினார்.

"மஹேஷ் கொஞ்சம் ரொட்டி சாப்பிட்டான் இன்னும் நந்தினி எதுவும் சாப்பிடவில்லை. சீக்கிரம் திரும்பி விடுவதாக சொல்லி வெளியில் போயிருக்கிறார். மார்க்கெட்டில் ரொட்டி, காய்கறிகள் இன்னும் சிலதும் வாங்கிவரவேண்டுமென்றும் சொல்லிக் கொண்டிருந்தார். ஐயா, இன்று இரவு சாப்பாட்டுக்கு என்ன செய்யட்டும்? சப்பாத்தியா? புரோட்டாவா?"

சப்பாத்தியா, புரோட்டாவா? கிரிஜாவின் உறுதியும் தெளிவுமான குரலை மனதிற்குள் பாராட்டிக் கொண்ட போதிலும் சுனந்தாவின் ஞாபகம் அவரை அம்பாகத் தாக்கியது. சுனந்தா கூட அடிக்கடி இப்படிக் கேட்பது அவரது

படிப்பகம்

www.padippakam.com

நினைவுக்கு வந்தது. ''சப்பாத்தியா புரோட்டாவா?'' உங்களுக்கு என்ன செய்து கொடுக்க வேண்டும்? அவர் சப்பாத்தி வேண்டுமென்றால் நீங்கள் புரோட்டா சாப்பிட்டால் என்ன என்று கேட்பாள். புரோட்டாதான் சுலபமாக ஜீரணமாகுமென்பாள். தவறுதலாக அவர் புரோட்டா வேண்டுமென்று சொன்னால் அவள் சொல்வாள்: ''நீங்கள் என்னை திருப்திப்படுத்த சொல்கிறீர்கள். நீங்கள் ஆசைப்பட்டால் உங்களுக்கு சப்பாத்தி செய்து தருகிறேன்.'' இதில் வேடிக்கை என்னவென்றால் அவளது விருப்பத்திற்கு ஏற்றவாறு அவர் சொன்னாலோ செய்தாலோ அவர்மீது அவளுக்கு சந்தேகம் உண்டாகி விடும். இது ஏதோ தந்திரம் என்று அவள் எண்ணுவாள். அல்லது தான் எங்கேயாவது தவறு செய்து விட்டோமோ என்று அவள் ஆச்சர்யப்படுவாள். உண்மையில் அவள் ஒருபோதும் அவரை நம்பியதில்லை. அவளது கருத்துக்கு மாறாக அவர் பேசுவதும் நடந்து கொள்வதும் தான் அவளுக்கு ஆசைவாக இருக்கும்.

''நந்தினியைக் கேட்டு அவள் சொல்கிறபடி செய்'' என்று சதாசிவய்யா உளறி சமாளித்தார். சுனந்தாவின் மறைவுக்குப் பின்னர் நந்தினி வீட்டின் சகல பொறுப்புகளையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தாள். சகலவற்றையும் மகள் வசம் சதாசிவய்யா ஒப்படைத்துவிட்டார். நந்தினியின் சம்மதமின்றி அவர் எதுவும் செய்தததில்லை, சுனந்தா இருந்த வரை இது வேறு விதமாக இருந்தது—எப்போதும் அவளுக்கு எதிராகவே இருப்பார்—எரிச்சலூட்டுவார்.......

''இதோ உங்களுக்கு தேநீர் கொண்டு வருகிறேன் ஐயா'' கிரிஜா சமையலறைக்குள் நுழைந்தாள்.

அவளது தாயாரின் உடல் நலம் பற்றி விசாரித்திருக்க வேண்டுமென்பதை சதாசிவய்யா உணர்ந்தார். சுனந்தாவின் மறைவிற்குப் பிறகு மற்றவர்களைப் பற்றிய பிரச்னை சகலத்தையும் அவர் துறந்து விட்டார். அவரது உள்ளம் உடைந்து விட்டது. சகலமும் அவருக்கு அலுவலகமும் வீடும் தான். வீட்டை நிர்வகிக்க நந்தினியும், சமையல்செய்ய பார்வதம்மாவுமிருந்தனர். நந்தினியிடம் அதிசயமான மாறுதல் ஏற்பட்டிருப்பதாக எல்லோரும் சொல்லிக் கொண்டனர். சுனந்தா உயிரோடிருந்த வரையில் தாயும் மகளும் ஒத்திருந்ததில்லை. அவர்கள் வெறித்

படிப்பகம்

www.padippakam.com

தன்பாக சச்சரவிட்டுக் கொண்டிருந்தார்கள் அல்லவா? தாயாரின் சொல்லை நந்தினி சிறிதுகூட சட்டை செய்ததில்லை. ஆனால் இப்போது எவ்வளவு பெரிய மாற்றம்! எவ்வளவு பொறுப்புணர்வு. நன்கு புரிந்து கொண்டு நடத்தல்; வாழ்க்கையில் ஆர்வம்... அவள் இந்த வீட்டில் இருந்திருக்காவிட்டால் சதாசிவய்யா துன்ப இருளில் மூழ்கி உயிரை விட்டிருப்பார். சில மரணம் மக்களை அமைதிப் படுத்தி விவேகமுள்ளவர்களாக்கி விடுகிறது. அவர்களிடத்தில் காதல், அனுதாபம், இரக்கம், அன்பு இவைகளைப் பரிணமிக்கச் செய்து விடுகிறது...கிரிஜாவிடம் சென்று அவளது தாயாரின் உடல்நிலை பற்றி விசாரிக்க வேண்டுமென்றும், அவளுக்கு என்னதான் செய்கிறது, வைத்திய உதவி தேவையுள்ளதா என்று விசாரிக்க வேண்டுமென்றும் விரும்பினார்.

சதாசிவய்யா நாற்காலியிலிருந்து எழுந்து சமையலறை கதவருகே சென்று, "கி...கி...கி...ரி...ஜா பர்வதம்மா உடம்புக்கு என்ன? வருத்தப்படாதே, இதை முன்பே கேட்க மறந்து விட்டேன்" என்று சொன்னார். அவரது நாக்கு குழறி தடுமாறியதை அவர் புரிந்து கொண்டார். கிரிஜா ஆச்சரியத்தால் நடுங்கியபடி, பரபரப்புடன் மார்பின்மீது இருந்த புடவைத் தலைப்பை சரிசெய்து கொண்டு 'ஓஹோ' என்று அவரைப் பார்க்கத் திரும்பினாள்.

சதாசிவய்யா அவளது கண்களை நோக்கினார். வட்ட வடிவில் பெரிய கண்கள்—மீனின் கண்களை ஒத்திருந்தன. உண்மையில் அவள் பூர்ணமாக வளர்ச்சி அடைந்து மிக அழகாக இருந்தாள். அவள் ஏன் இன்னும் திருமணமாகாமல் இருக்கிறாள் என்று எண்ணி ஆச்சரியப்பட்டார்.

தண்ணீர் கொதித்துக்கொண்டிருக்கும் பாத்திரத்தை அடுப்பிலிருந்துஇறக்க கிரிஜா திரும்பினாள். சதாசிவய்யாவின் கண்கள் அவளது நேரான முதுகையும் நீண்ட கூந்தலையும் வட்ட வடிவான பின்புறத்தையும் சுற்றி வட்டமிட்டன...

"ஜுரத்தினால் அம்மா படுத்தபடுக்கையாகிவிட்டாள். நான் வீட்டை விட்டு கிளம்பிய போது அவளது உடம்பு ஜுரத்தால் தகித்துக் கொண்டிருந்தது..."

"டாக்டரிடம் காட்டவில்லையா?" "இல்லை ஐயா. டாக்டர்கள் மீது அம்மாவுக்கு நம்பிக்கை இல்லை. ஜுரம்

படிப்பகம்

www.padippakam.com

தானாகவே தணிந்து விடும் என்று நப்பு றாள்.'' தேநீர் தயாராகிவிட்டது. கிண் ணத்தை எடுத்துவர அலமாரிப் பக்கம் சென்றாள்.

''அங்கே ரொட்டி ஏதாவது இருக்கிறதாபார்.'' என்றார் சதாசிவய்யா. ''எங்கிருக்கிறது என்று எனக்குத் தெரியும்.'' என்று சொல்லியபடி சமையல் அறை வாசற்படியைத் தாண்டி னார்.

கிண்ணத்தில் தேநீரை ஊற் றிக் கொண்டே, ''இங்கே தானிருந்தது: மஹேஷ் எங்கே வைத்தானோ தெரியவில்லை.'' கிரிஜா மிகுந்த படபடப்புடன் ரொட்டி இருந்த பெட்டியை எங்கும் தேடினாள்.

கிரிஜாவின் அங்க அசைவு கள் சதாசிவய்யாவின் உள் ளத்தை அசைத்தது. ''சரி எனக்கு ரொட்டி வேண்டாம். தேநீரைக் கொடு. அது போதும்.'' என்றார். கையில் தேநீர் கோப்பையை ஏந்தியபடி சுறுசுறுப்பாக தாழ்வாரத்தை நோக்கி வெளியே வந்தார்.

அதே சமயம் சமையலறைக்கு வெளியே நந்தினி நின்றிருந் தாள். ''அப்பா அதை என்னி டம் கொடுங்கள். உங்களுக்கு வேறு தேநீர் தயாரித்துத் தரு கிறேன். கிரிஜா என்ன தேடுகி றாய்?'' அவளது குரலில் அதி காரம் தொனித்தது. அது வழக் கத்தை விட கடுமையாக இருந் தது.

நந்தினியிடம் தேநீரைக் கொடுத்தார். தவறு செய்து விட்டவர் போலவோ அல்லது தவறு செய்யும் போது கையும் களவுமாகப் பிடி பட்டவர் போலவோ எண்ணி அவரது முகம் வெளிறிப் போனது. தனது ஓய்வு அறையை நோக்கி அவர் நடந்து கொண்டே தந் தைக்குள்ள அதிகாரத்துடன் நந்தினியை நோக்கி, ''இவ்வ ளவு நேரம் நீ எங்கே போயிருந் தாய்? இது வரை நீ ஒன்றும் சாப்பிடவில்லையாமே. மஹே ஷுக்கு காட்பரி சாக்லேட் வாங்கி வந்திருக்கிறாயா இல் லையா? அதுக்காகத்தான் அவன் காத்துக்கொண்டிருக்கி றான்'' என்றார். அவளிடமி ருந்து தேநீரை வாங்கி கொஞ் சம் உறிஞ்சிவிட்டு உணவருந் தும் மேஜைக்கருகில் அமர்ந்து கொண்டு ''இதோபார் நந்தினி நீ தனியாகப் போவதற்குப் பதிலாக, கிரிஜாவை கடைக்கு அனுப்பி சாமான்களை வாங்கி வரச் சொல்லி இருக்கவேண் டும். இல்லாவிட்டால் நாமிரு வரும் மாலையில் சற்று நேரம் கழித்துச் சென்று வாங்கி வந்தி

படிப்பகம்

www.padippakam.com

ருக்க முடியும்'' என்று சொன்னார்.

அடுத்து அவர் பேச வாயெடுக்குமுன் நந்தினி, ''பாவம் அவள் சின்ன பெண். சாமான்கள் வாங்கிவர அவளுக்கு எப்படித் தெரியும்? என்ன தெரியும் அவளுக்கு?'' என்று சொல்லி விட்டு, ''மஹேஷ் ஏ மஹேஷ்'' என்று கூப்பிட்டாள். நந்தினியின் குரல் என்றுமில்லாதவாறு கடுமையாக இருப்பதாக சதாசிவய்யா கருதினார். ஒருவகையில் இது பழைய குரல்தான். தனது தாயாருடன் அவள் சண்டை பிடிக்கும்போது இப்படித்தான் குரல் கடுமையாக இருக்கும் என்பது அவர் ஞாபகத்திற்கு வந்தது. ஆனால் இப்போது நந்தினியின் குரலில் அதைவிட கடுமையும் குரூரமும் அதிர்ச்சியும் தொனிக்கிறது இல்லையா?

அப்பா — பார்த்தீர்களா மஹேஷ் இப்போது விளையாட்டைத் தவிர வேறு எதிலும் உற்சாகம் காட்டுவதில்லை. அவனைப் படிக்க உட்கார வைப்பது எனக்கு மிகவும் சிரமமாக உள்ளது. சில சமயங்களில் அவனால் எனக்கு சலிப்புத் தட்டுகிறது.''

கிரிஜா ஒரு கோப்பையில் தேநீரைக் கொண்டுவந்து நந்தினியின் முன் வைத்தாள். ''எனக்கு வேண்டாம். அப்பால் எடுத்துப் போ.'' என்று அதட்டலுடன் சொன்னாள்.

''நந்தினி மஹேஷுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க தனியாக ஒரு ஆசிரியரை ஏற்பாடு செய்தாலென்ன? உனது தேர்வும் நெருங்கிக் கொண்டிருக்கிறதே.''

''வேண்டாம் அப்பா. தேவையில்லை. இரண்டாம் வகுப்புப் பையனுக்கு நாம் தனியாக ஆசிரியர் வைப்பதைப் பார்த்தால் ஜனங்கள் சிரிப்பார்கள். நீங்கள் அலட்டிக் கொள்ள வேண்டாம். அவன் படிப்பு பற்றி நான் உரிய கவனம் எடுத்துக் கொள்கிறேன்.'' என்று சொல்லிவிட்டு நந்தினி சமயலறைக்குச் சென்றாள்.

சதாசிவய்யாவின் காதுகளும் கண்களும் அடுக்களை பக்கமாகத் திரும்பின.

''கிரிஜா இரவு சாப்பாட்டுக்கு என்ன செய்யப் போகிறாய்? இதோ பார், கத்தரிக்காய் பஜ்ஜியும் பச்சைப்பட்டாணி உசிலியும் சப்பாத்தியும் செய். அப்பாவுக்கு சப்பாத்தி ரொம்பவும் பிடிக்கும். தெரியுமா?''

அவருக்கு எது பிடிக்கும் எது பிடிக்காது என்று அவளுக்கு

படிப்பகம்

www.padippakam.com

நன்றாக தெரியும். இருந்தாலும் இன்று சூடான புரோட்டாவும் பசிசைப்பட்டாணி உசிலியும் சாப்பிட விரும்பினார். ஆனாலும் இனத சொல்லும் நிலையில் அவர் இல்லை.

"சரி நான் தயார் செய்கிறேன்.'' என்றாள் கிரிஜா.

''சரி பச்சைப்பட்டாணி உசிலி எப்படி செய்வதென்று உனக்குத் தெரியுமா?'' என்று சற்று வேகமாகவே நந்தினி கேட்டாள்.

''எனக்கு நன்றாகவே தெரியும். தெரியாவிட்டால் எப்படி செய்வதென்று உங்களைக் கேட்டிருப்பேன்.''

கிரிஜாவின் குரலில் வெளிப்பட்ட ஆர்வத்தைவிட அதில் தொனித்த கேலியை சதா சிவய்யா புரிந்து கொண்டார்.

"ஹோ—ரொட்டி இருக்கும் பெட்டி இதோ இருக்கிறதே. ஐயா தேநீருடன் ரொட்டியையும் கேட்டார்.'' என்றாள் கிரிஜா.

"அப்படியா? நீ ஏன் இதை முன்பே சொல்லவில்லையா? மார்க்கெட்டில் புதிதாக ரொட்டி வாங்கி வந்திருக்கிறேன். அப்பா உங்களுக்கு இன்னும் கொஞ்சம் தேநீர் தருகிறேன். உங்களுக்குப் புதிதாக ரொட்டி வாங்கி வைத்திருக்கிறேன். ரொட்டியுடன் கொஞ்சம் வெண்ணையும் வைத்திருக்கிறேன். ரொட்டியுடன் கொஞ்சம் வெண்ணையும் வைத்துத் தரட்டுமா?'' நந்தினியின் குரலில் கனமும் வற்புறுத்தலுமிருந்தது.

ஃ ஃ ஃ

"ஹே அம்மா, இப்படி துயரக் கடலில் எங்களைத் தள்ளிவிட்டு நீ ஏன் பிரிந்தாய்? அம்மா நீ எங்கு சென்றாய்? எனது சின்னஞ் சிறிய தோள்களின் மீது குடும்பப்பொறுப்பை தூக்கி வைத்து, சுமக்க வைத்துவிட்டு இந்த உலகத்திலிருந்து தப்பித்து கொண்டு எப்படிப் போய் சேர்ந்தாய்? ஆமாம் நான் நன்கு குடும்பத்தை நடத்துவதாக எல்லோரும் சொல்கிறார்கள். நான் இந்த வழியில் சீராக குடும்பத்தை நிர்வாகம் செய்வதில் உன் ஆத்மா திருப்தி அடைந்து விட்டதா? ஆனால் அம்மா இப்போது நான் சில அபாயங்களை உணர்கிறேன். இங்கே ஒரு பாம்பு, பிசாசு, முதலை இருக்கிறது—இதை என்னவென்று குறிப்பிடுவேன்—இது வீட்டில் புகுந்து விட்டது. வீட்டில் நுழைந்து விட்ட அந்தப்

படிப்பகம்

www.padippakam.com

பெண் உள்ளிருந்தே அதை அழிக்க முயன்று கொண்டிருக்கிறாள்...... அப்பாவுக்கு விவேகமில்லை, அப்பா இதை புரிந்து கொள்ளாமல் அந்த முதலையின் வாயில் விழுந்து கொண்டிருக்கிறார். அம்மா, அப்பா உன்னை மறந்து கொண்டிருக்கிறார்.

ஏ தெய்வமே நான் என்ன செய்வேன்.'' நந்தினி தன் கன்னிப் பருவத்தில் எழுதி வைத்துள்ள இந்த நாட்குறிப்புகளைப் படித்து விட்டு சதாசிவய்யா லேசாக சிரித்துக் கொண்டார். அன்று லேசாக தலையை வலித்ததால் சற்று முன்னதாகவே வீட்டுக்கு ந்து விட்டார். ஆனால் வீடு பூட்டப் பட்டிருந்தது. பக்கத்து வீட்டில் இருந்து சாவியை வாங்கி வீட்டைத் திறந்தார். வீட்டைச் சுற்றிப் பார்த்த போது அங்கு நிலவிய மயான அமைதி அவரது உள்ளத்தை வாட்டியது. தனக்காக ஒரு கின்னம் தேநீர் தயாரித்துக் கொள்ளக் கூடாதா என்று நினைத்து ஆச்சரியப்பட்டார். ஆனால் சமையலறையில் நுழைய அவரது கால்கள் தயங்கின. காலணிகளை கழற்றி வைத்து விட்டு ஆழ்ந்து பெருமுச்சுவிட்ட டியேநாற்காலியில் சாய்ந்தார். சிறிது நேரம் சென்று திடீரென எழுந்து நின்றார். நந்தினியின் அறைக்குள் சென்று அவளது படிப்பு மேஜையின் பக்கமாக அமர்ந்தார். அதன் பிறகு தான் நந்தினியின் நாட்குறிப்பை எடுத்து படித்தார்......

கணக்குகளை ஒழுங்காகவும் தவறு இல்லாமலும் எழுதும் இந்தப் பெண் தனது உணர்ச்சிகளை எழுத்தில் வடிக்கும் போது குழம்புவதாக சதாசிவய்யா நினைத்தார். அறிந்து கொண்டவற்றை எழுத்தால் விளக்க அவளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்...எதோ ஒரு விஷயம் பற்றி அவள் சந்தேகமடைந்துள்ளதாக அவருக்குத் தோன்றியது. அன்றொரு நாள் தான் கிரிஜாவின் கரங்களைப் பற்றிக் கொண்டிருந்ததை ஒருக்கால் பார்த்திருப்பாளே? சந்தர்ப்பப் பிசகாக கிரிஜா ஏதாவது சொல்லி இருப்பாளோ? இந்த கிரிஜா ஒரு புதிர். புரிந்து கொள்ள முடியாத பயங்கரமான புதிர். ஒரு வகையில் கிரிஜா அவருக்கு திருப்தியளிப்பதில் கவனமாக இருந்தாள். ஆனால் அவர் அவளை நெருங்கும்போது தூர விலகிவிடுகிறாள். முன்பு ஒரு நாள் அவள் கையைப் பிடித்த போது தனது பார்வையைத் திருப்பி சுற்றிப் பார்த்தபடி நழுவிப் போய் தூரத்தில் நின்றாள். அதெல்லாம் சரி இந்

படிப்பகம்

www.padippakam.com

தப் பெண் ஏன் இந்த வீட்டிற்கு வந்து சேர்ந்தாள்! இந்தப் பாம்பு, இந்தப் பிசாசு, இந்த முதலை? பர்வதம்மாவை டாக்டரிடம் அழைத்துச் சென்று சீக்கிரமே குணப்படுத்த வேண்டுமென்று விரும்பினார். மஹேஷ் குராவின் வீட்டுக்குச் சென்றுள்ளான். அவன் வீட்டிலிருந்தால் கிரிஜாவும் இருந்திருப்பாள். இந்த நண்பர்களின் அனுதாபம் வேறு சுமையாகிக் கொண்டிருக்கிறது. மற்றொரு நாள் அவரது நண்பர் குராவ், "சதாசிவ் நீங்கள் எல்லோரும் வந்து எங்களுடன் ஏன் சில நாட்கள் தங்கி இருக்கக் கூடாது? எங்காவது நாம் ஏன் சுற்றுலா சென்று வரக்கூடாது? வீட்டில் நிறைய வேலைகள் செய்து பாவம் நந்தினி வெகுவாக இளைத்துப் போயிருக்கிறாள். அவளை நான்கைந்து நாட்களுக்காவது எங்கள் வீட்டுக்கு அனுப்பி வைக்கக் கூடாதா?" என்று கேட்டார்.

மூன்று நான்கு தினங்கள் குராவின் வீட்டுக்கு நந்தினியை அனுப்பி வைத்தால் என்ன என்று வியப்பெய்தினார். அவள் போனால் மஹேஷும் கூட போவான். அதன் பிறகு வீட்டில் ...ஹோ...ஹோ உரக்க சிரிப்பது போன்று உணர்ந்தார்.

இப்படி தன் மனதை அலைய விடக் கூடாது என்பதையும் உணர்ந்தார். தான் மறு மணம் செய்து கொள்வதானாலும் குறைந்தபட்சம் மூன்று வருஷங்களாவது காத்திருக்க வேண்டும். பலமான குடும்பப் பின்னணியுள்ள ஒரு நல்லப் பெண்ணை தேடியாக வேண்டும். இந்தத் தடவை அழகைப் பார்க்கக் கூடாது. கிரிஜா போன்று நல்ல ஆரோக்கியமான பெண்ணை கண்டுபிடிக்க முயல வேண்டும். படித்த பெண்ணாக — பி.ஏ.—எம்.ஏ. தேறியவளாக இருக்க வேண்டும். இரண்டாவது மனைவி புத்திசாலியாகவும் நிலைமையைப் புரிந்து நடப்பவளாகவும், உதாரணத்துக்கு நந்தினியைப்போல பொறுப்பை உணர்ந்தவளாகவும் இருக்க வேண்டும். பூர்ண வளர்ச்சியடைந்த பக்குவப்பட்ட கன்னியை மணக்க வேண்டும். நீண்டகாலம் திருமணத்துக்குக் காத்திருந்தவளாக இருந்தால் அவளை திருப்தியுடன் வைத்திருப்பது சுலபமாக இருக்குமல்லவா? கணவனுக்கு அவள் உண்மையில் அடிமை போலிருப்பாள். அல்லவா? விசுவாசமிக்க நாய் போலவும், உண்மையில் பாரம் சுமக்கும் கழுதை போலவுமிருப்பாள்...அவரது சிந்தனைப் போக்கிற்கும் நந்தினி அவளது நாட்குறிப்பில் எழுதியுள்ள

படிப்பகம்

www.padippakam.com

விதத்துக்கும் ஏதோ சில ஒற்றுமை இருப்பதாக திடீரென ஒரு கருத்து அவருக்கு உதித்தது.

அவர் சிறிதே வெட்கத்துடன் எழுந்து சற்றே நின்று தனது ஓய்வறைக்கு சென்றார். சுனந்தாவினுடைய, பெரிதாக்கப் பட்ட புகைப்படத்தின் முன் நின்று சினிமா வசனபாணியில், "என்னை மன்னித்துவிடு சுனந்தா நான் பைத்தியக்காரனாகிக் கொண்டிருக்கிறேன். உனது புனித நினைவை நான் குலைத்திருக்கக் கூடாது. என் அன்பே நீ இன்றும் எனது இதயத்தில் ஜீவித்திருக்கிறாய். உனது அருமைக் குழந்தைகளின் உள்ளத்திலும் குடிகொண்டிருக்கிறாய். எனது தலையாய கடமை குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவது தான், பொறுப்புடன் காரியத்தில் கண்ணாயிருக்கும் பெண், பணிவும் சாந்தமும் உள்ள ஒரு பையன், ஒளிமயமான உனது நினைவு—இவைகளால் எனது வாழ்வு பூர்ணத்துவம் பெற்றுள்ளது...... இருந்தாலும் மற்றொரு நோக்கில் பார்க்கும் போது எனது வாழ்வு நிறைவு பெறவில்லை."

வாசற்கதவு மணி ஒலித்தது. நந்தினி வந்திருக்க வேண்டும். அவ்வளவு சீக்கிரம் எப்படி வர முடியும்? கதவைத் திறந்தார்; கிரிஜா உள்ளே நுழைந்தாள். அவரது இதயத் துடிப்பே ஒரு கணம் நின்றுவிட்டது.

"ஐயா இன்று நீங்கள் முன்னதாகவே வந்து விட்டீர்கள். நல்ல வேளை; ஞாபகமாக பக்கத்து வீட்டில் சாவியைக் கொடுத்துவிட்டுப் போயிருந்தேன்—இல்லாவிட்டால் நீங்கள் சிரமப் பட்டிருப்பீர்கள்." கிரிஜாவின் குரலில் அதிர்ச்சியோ விசனமோ இல்லை.

"நீ இவ்வளவு சீக்கிரம் எப்படி வந்தாய்?" என்னை மாலையிலேயே வரும்படி நந்தினி சொல்லி இருந்தார். கல்லூரி விட்டதும் தான் ஒரு விருந்துக்குச் செல்வதாகவும், வீடு திரும்ப நேரமாகுமென்றும் சொன்னார். என் வீட்டுக்குச் சென்றேன். அங்கு அதிக நேரம் தங்க முடியவில்லை. அம்மா தூங்கிக் கொண்டிருந்தாள். எனக்கு அலுப்புத் தட்டியது. ஆகவே இங்கு வந்து வீட்டை சுத்தப் படுத்தும் சில வேலைகளை செய்யலாமென்று நினைத்தேன்."

"பர்வதம்மா எப்படி இருக்கிறாள்?" சற்று குணமடைந்திருக்கிறாள். ஆனால் மிகவும் பலவீனமாக இருக்கிறாள்" என்று சொல்லிக் கொண்டே கதவைச் சாத்தி தாளிட்டு விட்டு சமைய

படிப்பகம்

www.padippakam.com

லறையை நோக்கி நடந்தாள்.

உங்களுக்கு தேநீர் தயாரிக்கட்டுமா? என்று கேட்ட பொழுது கிரிஜா திரும்பிப் பார்த்து புன்னகை பூத்தாள்.

இருள் சதாசிவய்யாவின் கண்களைக் குருடாக்கியது. அவரது தலை சுற்றியது. பலவீனத்தால் அவரது கால்கள் நடுங்கின. காதுகள் சூடேறின. வழக்கத்திற்கு மாறாக அவரது இதயம் படபடத்து வேகமாகத் துடித்தது. ஆழ்ந்த பெரு மூச்சு அவரது உதடுகளை அசைத்தன. ''கிரிஜா'' என்று உச்சரித்தபடியே சமையல் அறைக்குள்ளே சென்றார்.

★ ★

நந்தினி ஏன் இன்று நீயே சமையல் செய்து கொண்டிருக்கிறாய்? என்று மிகுந்த எச்சரிக்கையுடன் கிரிஜாவின் பெயரைக் குறிப்பிடாமல் சதாசிவய்யா கேட்டார்.

அப்பா, இனிமேல் எல்லா வேலைகளையும் நானேசெய்து கொள்ளப் போகிறேன்.

ஏன், என்ன நடந்தது? கிரிஜாவின் சமையல் உனக்குப் பிடிக்கவில்லையா?

இன்று முதல் கிரிஜாவோ அவளது அம்மாவோ நம் வீட்டுக்கு வேலை செய்ய வரமாட்டார்கள்.

ஏன் நந்தினி என்ன நேர்ந்துவிட்டது? சதாசிவய்யாவின் குரலில் ஆர்வத்தோடு பலவீனமுமிருந்தது.

அவள் இன்று என்னிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டாள்.

யார் கிரிஜாவா?

ஆமாம். என்ன நடந்தது தெரியுமா? சமையல் அறை அசுத்தமாக இருந்தது. அதை சுத்தம் செய்யும்படி அவளிடம் சொன்னேன். அப்பா, அவள் என்ன சொன்னாள் தெரியுமா? 'நான் வீடு கூட்டுகிறவளோ, வேலைக்காரி என்றோ நினைக்கிறாயா? அவள் வரும்போது சுத்தம் செய்து கொள்வாள்' எனக்கோ மஹா கோபம்—அவ்வளவு கர்வமா உனக்கு? அப்படியானால் எங்கள் வீட்டிற்கு வேலைக்கு வருவதை நிறுத்திக் கொள். உன் அம்மாவையும் வர வேண்டாமென்று சொல்லி விடு'' என்று சொல்லி அவளது சம்பளத்தையும் அவள் முகத்தில் வீசி எறிந்து வெளியே துரத்திவிட்டேன்.

தொலைந்து போ! ஜாக்கிரதை, மீண்டும் இந்த வீட்டு வாயிற்படி பக்கம் தலை காட்

படிப்பகம்

www.padippakam.com

டக் கூடாது. வந்தால் என்ன செய்வேன் தெரியுமா...

அங்கேயே அந்தக் கணமே, எந்த முறையிலும் நந்தினிக்குக் கோபமூட்டி வருத்தமுண்டாக்கக் கூடாதென்று சதாசிவய்யா தீர்மானித்து விட்டார்.

நல்லது அதுதான் சரி. நல்ல காரியம் செய்தாய். ஆனால் நமக்கு வேறு ஒரு நல்ல சமையற்காரி கிடைக்க வேண்டுமே.. நந்தினி உனது தாயார் நோயுற்றிருந்த போது பர்வதம்மா எவ்வளவு உதவிகரமாக இருந்தாள் தெரியுமா? பாவம் அவள் இப்போது ஏழைதான். ஆனால் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவள். உண்மையில் அவள் வேலைக்காரியல்ல.... தான் பர்வதம்மாவைத் தாங்கிப் பேசியதில் அவர் திருப்தி அடைந்தார்.

அப்பா இனி அவர்கள் நமக்குத் தேவையில்லை. அவர்கள் மோசக்காரர்கள். எல்லா வேலைகளையும் நானே செய்வேன்.

நீ படிக்க வேண்டும். கல்லூரிக்குப் போய் வர வேண்டும்.

எல்லாவற்றையும் நான் சமாளித்துக் கொள்வேன். இப்போது நான், பி. ஏ. முதல் வருஷம் தானே. ஒன்றும் பெரிய பிரச்னை இல்லை. இதுபற்றி உங்களுக்குக் கொஞ்சமும் கவலை வேண்டாம் அப்பா.

இதில் சதாசிவய்யா திருப்தி அடைந்தவராகவும், திருப்தி அடையாதவராகவு மிருந்தார். நிச்சயம் நந்தினிக்கு எல்லாம் தெரியும் என்பதில் திருப்தி. அதே சமயம் கிரிஜா தன் கைப்பிடியில் இருந்து நழுவிப் போனதில் அதிருப்தி.

டப்...டப்....டப் நந்தினி சுறுசுறுப்புடன் புரோட்டா தயார் செய்து கொண்டிருப்பதைக் கண்ட சதாசிவய்யாவுக்கு திடீரென அவள் வளர்ச்சியடைந்து விட்டதாகத் தோன்றியது. சிக்கிரத்தில் அவளுக்கு ஒரு மாப்பிள்ளை தேட வேண்டுமென்று நினைத்தார்.

நந்தினி உனக்கு வரபோகும் கணவன் பாக்கியசாலியாக இருப்பான். ஏற்கனவேயே நீ கைதேர்ந்த குடும்பத் தலைவியாகிவிட்டாய்.

இல்லை அப்பா, நான் திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை. மஹேஷ் வளர்ந்து பெரியவனாகி அவன் தன் சொந்தக் காலில் நிற்கும் வரை நான் மணம் செய்து கொள்ள மாட்டேன்.

நான்....அவனை கவனித்துக் கொள்ள நான் இருக்கிறேன்.",

படிப்பகம்

www.padippakam.com

நீங்களா அப்பா ! எல்லாவற்றையும் உங்களால் எப்படி கவனித்துக் கொள்ள முடியும்?

விஷயத்தைத் தொடுவதற்கு இதுதான் சரியான தருணம் என்று சதாசிவய்யா கருதினார்.

நந்தினி உன்னிடம் நான் சில விஷயங்களை தெரிவிக்க வேண்டும். தவறாக எடுத்துக் கொள்ளாதே. உனது தாயாரை நான் மறந்துவிட்டதாக எண்ண வேண்டாம். பாவம் மஹேஷ். நந்தினி, அவனுக்காக நான் ஏன் திருமணம் செய்து கொள்ளக் கூடாது ?

நந்தினி தகப்பனாரை முறைத்துப் பார்த்தாள் : நீங்களும் மற்றவர்களைப் போல சாதாரண மனிதராக இருப்பீர்களென்று எனக்குத் தெரியாது. மறுமணம் பற்றி நீங்கள் எப்படி சிந்திக்க முடிந்தது ? அதுவும் இவ்வளவு சீக்கிரம் :

நந்தினியின் கேள்வியில் சதாசிவய்யா கலக்கமுற்றார். உள்ளுக்குள் எரிச்சல் மூண்டது.

ஆனால் அப்படி அல்ல நந்தினி. தயவு செய்து பொறுமையுடன் அறிவுபூர்வமாக யோசித்துப் பார். இன்னும் ஒன்றிரண்டு வருஷத்திற்குள் உனக்குத் திருமணம் முடித்தாக வேண்டும்...

இல்லை, இல்லை. ஒருபோதும் இல்லை. நான் திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை என்று உங்களிடம் சொல்லவில்லையா? மஹேஷை மற்றொரு பெண்ணிடம் விடுவதை—அதுவும் குரூரமான ஒரு மாற்றாந்தாயின் கையில் ஒப்படைப்பதை என்னால் நினைத்துக்கூடப் பார்க்கமுடியவில்லை. இது ஒரு நாளும் நடக்காது. இதைப் பற்றி அம்மாவின் ஆத்மா என்ன சொல்லும்? தயவு செய்து கொஞ்ச நாட்களுக்கு இதைப் பற்றி பேச்செடுக்காமல் நீங்கள் ஏன் பொறுமையாக இருக்கக் கூடாது ?

சதாசிவய்யா வெறுப்புற்றார். நந்தினியின் மஹாகோபமும் கசப்பான பேச்சும் அவருக்கு எறிச்சலுண்டாக்கியது.

நந்தினி எங்கள் பொருட்டு நீ இவ்வளவு தூரம் - னது வாழ்க்கையைத் தியாகம் செய்யத் தேவையில்லை. நியாயமாகப் பார்த்தால் சிறியவர்களின் நலனுக்காகப் பெரியவர்கள் தான் தங்கள் வாழ்வைத் தியாகம் செய்ய வேண்டும். பெரியவர்களின் பொருட்டுத் தங்கள் வாழ்வைத் தியாகம் செய்ய குழந்தைகள் ஒரு போதும் நினைக்கக் கூடாது. நான் சொல்வது புரிகிறதா ?

படிப்பகம்

www.padippakam.com

அப்பா உண்மையில் நீங்கள் சொல்வதன் அர்த்தம் என்ன வென்றால் நீங்கள் இரண்டாந் தாரமாக திருமணம் செய்து கொள்ள வேண்டு மென்பது தானே. அதனால் தான் அந்த ராட்சஸ முகரக்கட்டை கிரிஜா வைத் துரத்தினேன். என்ன நடக்கிறது என்பது எனக்குத் தெரியாது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? கண்ணை மூடிக்கொண்டு பூனை பாலைக் குடிக்கிறது. இதைத் தானே கிரிஜா செய்தாள். அந்த குணங்கெட்டவளின் தந்திரங் களை நான் முன்பே தெரிந்து கொண்டேன். பார்வதம்மாவுக் குக் கூட இந்த சதித் திட்டத் தில் பங்கிருக்குமென்று நினைக் கிறேன். நிச்சயமாக எனக்குத் தெரியும் அவள் உடம்புக்கு எதுவுமில்லை. ஜுரமுமில்லை. ஒரு கேடுமில்லை.

சதாசிவய்யா பெரும் பீதி யடைந்து அமைதி இழந்தார். நாற்காலியிலிருந்து இறங்கிக் கொண்டே நந்தினியை உறுத் துப் பார்த்தார்.

''நந்தினி, இன்னும் நீ சிறிய பெண் தான். பெண்களே அதீத கற்பனைத் திறனுள்ளவர் கள்?''

''அப்பா இப்போது நீங்கள் பொய் சொல்லத் தேவை யில்லை. என்னவோ நடந்தது நடந்ததவையாக இருக்கட்டும். சாப்பிடலாம் வாங்களேன் அப்பா.''

அவளது குரலில் வெற்றிப் பெருமிதமும் கர்வமும்தொனித் தது.

''அவ்வளவு சீக்கிரத்திலா?''

''நேரத்தில் சாப்பிடுவது எல் லோருக்கும்நல்லது. மஹேஷின் படிப்பையும் நான் கவனிக்க முடியும். நானும் கூட எனது பாடங்களை படிக்கலாம். மஹேஷ் ஏ மஹேஷ்! அவன் எங்கே இருக்கிறான்? அவனுக்கு வீடு ஒரு ஹோட்டல் மாதிரி தான்.'' சுனந்தா ஒரு போதும் இப்படிப் பேசியதில்லை என் பதை சதாசிவய்யா நினைத் துக் கொண்டார். அவள் இனிய சுபாவமுள்ள மிக சாதுவான பிராணி- பசுவைப்போல சாது. நந்தினியின் நிஷ்டூரமான வார்த்தைகள் அவரது உள் ளத்தை உரசியது. அவளது பிடியிலிருந்து தானும் மஹே ஷும் கூட விடுபட்டாக வேண் டுமென அவர் எண்ணினார். இந்த சமயத்தில் இதற்கு ஒரே வழி கிரிஜாவை மணம் செய்து கொள்வதுதான். அதற்கு முன் குராவை அழைத்து வந்து நந் தினிக்கு புத்திமதி கூறும்படி கேட்டுக் கொள்ள வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

இல்லை என்றால் அவளது வெறித்தனம் எல்லை மீறிப் போய்விடும்.',

''நந்தினி இன்று இரவு எனக்கு சாப்பாடு வேண் டாம்.''

''ஏன் என்ன நடந்து விட் டது அப்பா?''

''என்னவோ தெரியவில்லை. ஆனால் சாப்பிட வேண்டு மென்ற உணர்வே எனக் கில்லை......

''ஏன்? கிரிஜா சமையல் செய்யவில்லை என்பதாலா' என்று நந்தினி சிரிக்க முயன் றாள்.

''நந்தினி!''

''நீங்கள்சாப்பிடா விட்டால் நானும்கூட சாப்பிட மாட் டேன்.''

''சரி மஹேஷைக் கூப்பிடு. எல்லோருமாக சேர்ந்து உட் கார்ந்து முடிந்த அளவு உணவை வயிற்றுக்குள்ளே தள்ளிவைப்போம். செய்ய லாமா? இப்ப எல்லாம் சரியாகி விட்டதல்லவா?''

ஃ ஃ ஃ

இன்றுடன் சுனந்தா கால மாகி முதல் ஆண்டு நிறைவு பெறுகிறது.

காலை மூடுபனி இன்னும் மறையவில்லை வெளியிலிருந்து மூடுபனி வீட்டிற்குள் சென்று அங்குள்ளவர்களின் உள்ளத்தில் கூட புகுந்துவிட்டதாகத் தோன்றியது. குறைந்தபட்சம் சதாசிவய்யா இப்படி கருதி னார். மூடுபனியில் ஒழுங்கற்ற முறையில் ஒரு சண்டை நடந்து கொண்டிருக்கிறது: குற்ற மனப்பான்மையும், வெட்க உணர்வும் நியாயமான புண் பட்ட உள்ளத்தை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருக்கிறது; அவருக்கு மகளின் மீதுள்ள அன்பு, உயர்ந்த குணம் இவற்றை எதிர்த்து அவரது புது விதமான எரிச்சலும் துவே ஷமும் மோதுகின்றன. கிரிஜா வைத் தீண்டியதால் ஏற்பட்ட புதுமையான சுகானுபவம் அவ ரது மார்பில் அம்பாகப் பாய்ந்து துன்புறுத்துகிறது. இந்த வலியுடன் பயமும் கூட சேர்ந்து கொண்டது—பர்வ தம்மா பிறப்பித்த மிரட்டலி னால் உண்டான பயம்.

சில நாட்களுக்கு முன் பர்வ தம்மா வந்து சொன்னாள்: ''இதோ பாருங்க ஐயா, ஏதா வது என் மகளுக்கு நேர்ந்தால் அதற்கு நீங்கள் தான் பொறுப்பு. பாவம், சின்ன பெண். ஒருபாவமுமறியாத வள். வயதான, பெரியவரான,

படிப்பகம்

www.padippakam.com

எல்லாம் தெரிந்த நீங்கள் அவரை உங்களது பெண்ணைப் போல வைத்திருக்க வேண்டும்.

பூஜையும் சாப்பாடும் முடிந்த பிறகு, தான் வீட்டை விட்டு வெளியேறி எங்கோ வெகு தூரம் தன்னந் தனியாக வெளியே போவது போலவும் பலமாக உணர்ந்தார். ஆனால் அவர் எங்கு போவது? உடனே அவர் படுக்கையில் சாய்ந்தார்.

''அப்பா நீங்கள் மிகுந்த சஞ்சலமடைந்துள்ளதாகத் தோன்றுகிறதே ஏன்?'' என்று நந்தினி வந்து அவரது படுக்கையின் ஓரமாக அமர்ந்து கேட்டாள்.

சதாசிவய்யா நந்தினியைப் பார்த்தார். அவளது கண்கள், உதடுகள், கன்னம் யாவும் சுனந்தாவினுடையதைப் போலவே இருந்தன. மணமான புதிதில் இப்படித்தான் சுனந்தா வந்து அவருக்குப் பக்கத்தில் அமர்ந்து கொள்வாள். பேசுவார்கள், பேசுவார்கள் அப்படி நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருப்பது வழக்கம்.

நந்தினியின் கைகளைப் பற்றிக் கொண்டு ''நந்தினி உனக்கு அதிக தொந்தரவு கொடுத்து விட்டேன். இல்லையா? எனது நடவடிக்கைகள் உனக்கு வருத்தத்தையும் துன்பத்தையும் கொடுத்து 'விட்டதல்லவா? இன்று நீயும் கூட 'களைத்திருப்பதாகத் தெரிகிறது. வாயேன், நீயும் இங்கேயே படுத்துக் கொண்டாலென்ன?'' என்று சதாசிவய்யா 'உருக்கமாகக் கேட்டார்.

தந்தையின் பக்கத்தில் நந்தினி படுத்துச் கொண்டாள்.

''நந்தினி''

''என்ன அப்பா?''

''பர்வதம்மாவை நீ சந்தித்தாயா''

''இல்லையே''

நீ வீட்டில் இல்லாதபோது ஒரு நாள் அவள் இங்கு வந்து என்னை பயமுறுத்தி விட்டுப் போனாள்.

பயமுறுத்துவதா? எதற்காக?

பயப்படக் காரணமில்லை. கிரிஜாவுக்கு எதுவும் நேர்ந்தால்...

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

எப்படி பதில் சொல்வதென்று அவருக்குப் புரியவில்லை. எப்படியும் சொல்லித்தானே ஆக-

படிப்பகம்

www.padippakam.com

வேண்டும். அது பாவத்தின் கூலி. அவளுக்கு உண்டாகிவிட்டால் அதற்கு நானே பொறுப்பு என்றும், அவளை நான் மணம் செய்து கொள்ள வேண்டுமென்றும் சொன்னாள்...

அந்த அநாசாரப் பெண்ணையா? அது முடியாது. ஒரு நாளும் நடக்காது அப்பா.

சதாசிவய்யா மேற் கூரையைப் பார்த்தார்.

அப்பா, அம்மா உயிரோடிருந்து இம்மாதிரி விஷயங்களில் நீங்கள் சந்தேகத்திற்காளானால் அவள் என்ன செய்திருப்பாள்.

அவள் இருந்திருந்தால் இது போன்ற நிலைமையை நான் எதிர்நோக்க வேண்டியிருந்திருக்காது.

அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டு விட்டதாக வைத்துக் கொள்வோம் — சந்தர்ப்பவசமாக திடீரென தவறுதலாக நீங்கள் நடந்து கொண்டுவிட்டதால்...

அவள் என்ன செய்திருப்பாள் என்று எனக்குத் தெரியாது?

அம்மா என்ன செய்திருப்பாள் என்று நான் சொல்லட்டுமா?

நீ என்னம்மா சொல்கிறாய்?

அந்தப் பெண்ணை உங்களுக்கு மணம் முடித்து வைத்திருப்பாள். இப்படித்தான் அந்தப் பிரச்னைக்கு அம்மா தீர்வு கண்டிருப்பாள்.

யார் கண்டது? சதாசிவய்யா சிரித்தார்.

நந்தினி தனது வலது பக்கமாகத் திரும்பி தனது இடது கரத்தை தந்தையின் நெஞ்சில் வைத்துக் கொண்டு அப்பா நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள்? என்று கேட்டாள்.

என்னையா கேட்கிறாய்? உண்மையில் கிரிஜாவுக்கு ஏதும் நேர்ந்தால் டாக்டரிடம் அவளை அழைத்துச் சென்று... ஒரு சர்வ சாதாரண மனிதனைப் போலப் பேசினார்.

அப்பா அது கொலையாகி விடும்! அது பொறுப்பற்ற செயல். மனிதன் தன் பாவத்தின் பயனை ஏற்க வேண்டும். அவனது சிலுவையை அவன் சுமந்தே தீரவேண்டும்..."

"அதுவும் உண்மைதான். அதைபற்றி என்ன பேச்சு இப்போது? — கற்பனை எதற்கு? நந்தினி உண்மையில் நீ என்ன நினைக்கிறாய் என்று சொல்

படிப்பகம்

www.padippakam.com

என்னதான் நினைத்துக்கொண்டிருக்கிறாய் ?

நான் இன்னும் யோசிக்க வேண்டியுள்ளது. இருவரும் மேல் கூரையைப் பார்த்தபடியே தூங்கிவிட்டனர். பத்து நிமிடத்தில் அவர் கண்ணயர்ந்து விட்டார். சில நொடிக்குள் குறட்டைவிட ஆரம்பித்துவிட்டார்.

அவர் எழுந்தபோது புதுமையான கனவு கண்டு விழித்துக்கொண்டதாக உணர்ந்தார். கனவில் அவர் சுனந்தாவுடன் எங்கோ போகிறார். நந்தினி அவர்களுக்கு முன்பாக நடனமாடிக் கொண்டு வருகிறாள். திடீரென்று, ஒரு மரத்தில் கிரிஜாவின் உடல் தொங்கிக்கொண்டிருப்பதை அவர்கள் பார்க்கின்றனர். சுனந்தா அலறுகிறாள்... சதாசிவய்யா இப்போது விழித்துக் கொள்கிறார். சுற்றிலும் பார்த்துவிட்டு நந்தினியை உற்றுநோக்கினார். நந்தினி கண் விழித்தபடியே படுத்திருந்தாள். சதாசிவய்யாவின் இதயம் அன்பாலும் பந்தத்தாலும் நிரம்பி தளும்பியது. நந்தினியை தன் பக்கமாக இழுத்து மார்போடு சேர்த்துதழுவிக் கொண்டார்.

''நந்தினி அசட்டுப்பெண்ணே இன்னுமா நீ சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறாய்?''

ஆம் அப்பா.''

''கண்மணி, வேண்டாம் சற்று நேரம் தூங்கு.''

''அப்பா ஒரு விஷயம் நிச்சயம்''

''என்ன நந்தினி?''

''நீங்கள் கிரிஜாவை திருமணம் செய்துகொள்ளப் போவதில்லை. அவளைத் திருமணம் செய்தால்—அப்படி உண்மையில் நடந்தால்....அவளை நான் கொலை செய்து விடுவேன்''

''என்ன?'' சதாசிவய்யாவின் இதயம் பயத்தால் நடுங்கியது.

''உண்மையில் தவறு நடந்ததாக வைத்துக் கொள்வோம்... அந்த விஷயத்தை என்னிடம் விட்டு விடுங்கள். அதை நான் கவனித்துக் கொள்கிறேன். நானே அவளை டாக்டரிடம் அழைத்துப்போய்....''

நீயா''

''ஆம்'' நந்தினி எழுந்து உட்கார்ந்து ஜன்னலுக்கு வெளியே பார்க்க ஆரம்பித்தாள். அவளது கண்களில் நீர் நிறைந்தது. சில நொடிகளில் வெள்ளமாகக் கன்னத்தில் வழிந்தோடியது.

''அப்படியே வைத்துக் கொள்வோம்— உண்மையில்

படிப்பகம்

www.padippakam.com

நீங்கள்— உண்மையில் அவளைக் காதலித்தால்—நான் ஏன் குறுக்கே வந்து நிற்க வேண்டும். அவள் மீது உங்களுக்கு அப்படிப்பட்ட எண்ணமிருந்தால் தயவு செய்து அதை என்னிடம் சொல்லுங்கள். மஹேஷை என்னுடன் அழைத்துக் கொண்டுபோய் தாத்தா வீட்டில் இருந்துகொள்கிறோம். சொல்லுங்கள் அப்பா, அவளை மணம் செய்து கொள்ளும் விருப்பம் உண்டா?''

''இல்லை'' சதாசிவய்யா இப்படி பதில் சொல்ல வேண்டியதாயிற்று.

இப்படி அவர் 'இல்லை' என்று சொல்லிய அதே நொடியில் அவரது உடம்பிலுள்ள ஜீவ சக்தி வெளியேறிவிட்டதாக உணர்ந்தார். உயிரற்ற சடலம் போல எண்ணிக் கொண்டு தன் கால்களையும் கைகளையும் படுக்கையில் பரக்க விரித்தபடி படுத்துக் கொண்டார். தன்னுடைய இளமையைப் பாதுகாத்துக் கொள்ள அவர் யோகாசனம் செய்தது ஞாபகத்திற்கு வந்தது. அவர் எப்படி சாவாசனம் செய்தார். சவம் போன்று—வீட்டின் கூரையைப் பார்த்தபடியே லேசாகக் கண்களை மூடினார். சிறிது நேரம்சென்று கண்களைத் திறந்தபோது சுவரிலுள்ள புகைப்படத்திலிருந்து சுனந்தா தன்னை நோக்கி புன்முறுவல் செய்வதைப் பார்த்தார்.

★ ★ ★

எழுத்தாளர்களுக்கு....

வெள்ளைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதுங்கள். அஞ்சலட்டை உள்நாட்டு உறைகளில் அனுப்பும் படைப்புக்கள் கவனிக்கப்படமாட்டா. உங்கள் முகவரியை தெளிவாக எழுதுங்கள்.

ஆசிரியர் 19, தெற்கு போக் சாலை சென்னை 600017 என்ற முகவரிக்கு எழுதியனுப்புங்கள்.

—பொறுப்பு ஆசிரியர்

படிப்பகம்

www.padippakam.com

'நளினக் கலைகளால் நேசம் வளர்ப்போம்''

-சிவா-

'பாரதமும் ஸ்ரீலங்காவும் பூகோள ரீதியில் நெருங்கிய நாடுகள். சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இந்திய நாட்டுடன் வம்சாவளித் தொடர்புடன் கலாச்சாரத் தொடர்பும் கொண்டவர்கள். ஆனால் இன்று நிலவியதோ ராணுவத் தொடர்புதான். இந்த வேதனை தரும் நிலையை மாற்றி இரு நாட்டு மக்களிடையே நேச உறவுக்கும் பாலமமைப்பது கலைஞர்களாகிய நமது தலையாய கடமையாகும்.''

இப்படிக் கூறியவர் திருமதி ஸோமலதா சுப சிங்கே. அண்மையில் சென்னை கிருஷ்ண கானசபாவில் நடந்த ஒரு நடனச் செய்முறை விளக்கச்சொற்பொழிவில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். பரஸ்பரம் வெருப்பு சந்தேகம் போன்ற மாறுபட்ட அரசியல் சூழலில் இந்தச் சிங்களக் கலைஞரின் நேசத்துடிப்பு அந்த மக்களது இதயத்துடிப்பை வெளியிடுகிறது.

சென்னையில் மார்கழி (டிசம்பர்)க் கலைவிழாக்கள் கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்கும் நேரம். சங்கீத வித்வத் சபை என்ற 'ம்யூசிக் அகதமி' யில் பிற்பகல் மாலை வேளைகளில் மரபார்ந்த நடன, இசை நிகழ்ச்சிகள் நடக்கின்றன. காலை நேரங்களில் இசை பற்றிய கருத்தரங்குகள் நடத்தப் படுகின்றன. இவற்றில் இசை பற்றிய சர்ச்சைகளும் செய்முறைக் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன. இதே போல கிருஷ்ண கான சபா நாட்டியக் கலைக்கு அழுத்தம் கொடுத்து இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை நடத்துகிறது. தமிழ் இசைச் சங்கம் தமிழ் இசை, தமிழ்க்கலை மரபுகள் இவைகளில் அழுத்தம் கொடுத்து நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. ருக்மணி

படிப்பகம்

www.padippakam.com

தேவி அமைத்த கலா கேந்திரம் தனது மாணவர்கள் ஆசிரியர் களைக் கொண்டு பல நாட்டிய நாடகங்கள், நிகழ்ச்சிகள் நடத்திப் பல பரிசோதனை கள் மூலம் புதிய கலை முயற்சி களை அறிமுகம் செய்கிறார் கள். இந்த ஆண்டு இவற்றைத் தவிர இலனும் பல பல கலாச் சார அமைப்புக்கள் நாட்டிய, இசை, விழாக்களை நடத்து கின்றனர்.

கலைத்துறைகளில் பல மனித நேயம் கொண்ட கலைஞர்கள் இருக்கிறார்கள். மரபார்ந்த கலை மேடைகளிலும் பல மாற் றங்களும், மாற்றுச் சிந்தனை களும், புதிய சோதனைகளும் வளர்ந்து வருகின்றன. இவற் றுடனை முற்போக்குக் கலைஞர் களின் தொடர்பும், நட்பும் பல நல்ல விளைவுகளை ஏற்படுத் தும். இந்த ஆண்டு கிருஷ்ண கான சபாவின் நாட்டிய கலா மாநாட்டை இயக்குபவர் பேராசிரியர் சந்திரசேகர். இவர் பரோடா பல்கலைக் கழ கத்தில் நாடகத்துறைத் தலை வர் சென்னை கலாக்ஷேத்ரா ருக்மணி தேவியின் வழிகாட்டலில் உருவான கலைஞர். அவர் யதேச்சையாக ஸோம லதாவைச் சந்தித்தபோது அவ ரது கலை வாழ்க்கைப் பற்றி அறிந்து அவரை இந்த நாட்டி யக்கலை மாநாட்டுக்கு அழைத் தாராம்.

கிருஷ்ணகான சபாவில் டிசம் பர் 21-ம் தேதி காலை திருமதி ஸோமலதா "மரபார்ந்த மதச் சடங்கு முறை நடனத்தில் நாடகக் கூறுகள்" என்ற தலைப் பில் ஒரு அருமையான கருத் துரை நிகழ்த்தினார்கள். பெரடேனியா பல்கலைக் கழக நாடகத்துறையில் பணி புரியும் ஜெயஸேனா கொடக் கௌடா, ஸனட் அஹெகன், ஆகிய கலைஞர்கள் குறிஞ்சி, மருத நிலங்களைச் சார்ந்த கண்டி மற்ற சமவெளிப் பகுதி நடனங்களை-பேச்சுக்கு விளக்க மாக இடை இடையே நிகழ்த் திக் காட்டினார்கள். ஆடை ஆலங்காரம் அவற்றின் பிரதேச வேறுபாடுகள், மேளத்தின் அமைப்பு. ஒலி, வேறுபாடுகள் இவற்றின் நுட்பங்களையும் செய்முறையிலும் காட்டி விளக் கினார்கள். புத்தமதத்தின் தாக்கம் காரணமாக, அவை மேல் மக்களிடம் சென்று லட் சணக் கலைகளாக (Classical) மாறாமல் மக்கள் கலைவடிவி லேயே (Folk Forms) வளர்ந்து வந்தது என்பதையும் குறிப்பிட் டார். இந்த நடனங்களின் பொருள்கள் வருமாறு.

1. சூரிய வழிபாட்டுச் சடங் காசார நடனம். 18 பெலாபாலி

படிப்பகம்

www.padippakam.com

களை (பூதங்கள், முகமுடியுடன்) சூரிய தேவன் (ஒளி) வெற்றிகொள்ளுதல் மேளத்தின் விருவிருப்பான முழக்கத்திற்கு ஏற்ற நடனம்.

2. கிராமக் காட்சிகள்,

குடிகாரக் கிழவன்,
அவனது கிழத்தி
கூந்தல் திருத்தும்
கிராமத்து யுவதி
வண்ணான் வண்ணாத்தி,

இவை எல்லாவற்றிலும் நடனத் திறமையுடன் நகைச் சுவையும் இழையோடுகிறது. மக்கள் கலைவடிவத்தின் உயிர்ப்பும் கொப்பளிக்கிறது. மரபார்ந்த நடன வடிவங்களையும் உள்ளடக்கத்தையுமே பார்த்துப் பழகிய சென்னை நகர ரசிகர்கள் இந்த வித்தியாசமான வடிவங்களின் கலை அம்சங்களையும் வரவேற்கத் தவறவில்லை.

திருமதி ஸோமலதா ஒரு நாடக நடிகை, நாட்டியக் கலைஞர், நாடக ஆசிரியர், இயக்குனர் அதுமட்டுமல்ல. பிரபலமான, சிங்களத் திரைப் பட நடிகை, தொலைக்காட்சிப் படங்களிலும் நடிப்பவர்.

இப்டாவின் சார்பில் அவரைப் பேட்டி கண்டோம் சிங்கள நாடகத்துறை, மேடைக் கலைகள் பற்றிய பல செய்திகளை அவர் தந்தார். குறிப்பிட்ட தலைப்புகளில் அந்தப் பேட்டியில் திருமதி ஸோமலதா கூறிய கருத்துக்களை இங்கே தொகுத்துத் தருகிறோம்.

சிங்கள நாடகத் துறை

சுதந்திரத்திற்கு முன் நாடகங்களின் பொருள் தேசபக்தியைக் கருவாகக் கொண்டிருந்தது. சுதந்திர இயக்கத்தின் மீது மக்களின் உணர்வை அது பிரதிபலித்தது. இந்தக் காலகட்டத்தில் நாடகத் துறையில் குறிப்பிடப் பட வேண்டியவர் ஜான்-டி-ஸில்வா. சாதாரண மக்களிடம் நாடகம் பிரபலமாக இருந்தாலும் அறிவாளர்களை அது கவரவில்லை. பெண்கள் நடிக்க முன் வரவில்லை. பெண்களுக்கு நடிப்பு கௌரவமானதாகக் கருதப்படவில்லை இசை நடனக் கூறுகளால் அது மக்களைக் கவர்ந்தது. சுதந்திரத்திற்குப் பின் குறிப்பாக 1956க்குப் பிறகு நாடகத் துறையிலும் மற்றபல துறைகளைப் போல, மறுமலர்ச்சி ஏற்பட்டது. நாடகம் அறிவாளர்களையும் கவரத் தொடங்கியது. இதற்கு ஒரு காரணம் தாய்மொழி, (சிங்களம், தமிழ்) கல்விப் பயிற்சி மொழியான

படிப்பகம்

www.padippakam.com

தால் பல அறிவாளிகள் தாய் மொழியில் வெளிப்பாட்டைத் தொடங்கினார்கள். வடிவத்தின் கலை அம்சங்களால் மட்டுமின்றி, கருத்தாலும் மக்களைக் கவரும் நிலையை நாடகம் எட்டியது.

சரத் சந்திரர் குறிப்பிடப்பட வேண்டிய நாடக ஆசிரியர். துவக்கிய நாடகக் குழுவில்தான் திருமதி ஸோமலதாவும் தயாரானார். நாடகம், மக்கள் நடன வகைகள், தமிழ் தெருக் கூத்து இவைகளின் பல அம்சங்களைத் தனதாக்கிக் கொண்டது. சிங்கள இசைக்கு இந்தியாவின் வட நாட்டு இந்துஸ்தானி இசையுடன் அதிகத் தொடர்பு உண்டு. 'மனமே' என்ற நாடகம் புத்தமத ஜாதகக் கதை ஒன்றை புதிய சிந்தனைக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட்ட கதை. சரத்சந்திரர் இதை எழுதித் தயாரித்தார். மக்களின் சிந்தனையைக் கிளறும் இந்த நாடகம் மக்களைக் கவர்ந்தது.

சுகத பால டி ஸில்வா என்ற நாடக ஆசிரியர் இந்த நாடகத் துறைப் போக்குக்குச் சவாலாக யதார்த்தவாத நாடகங்கள் (realistic theatre) உருவாக்கினார். இந்த இரண்டு போக்குகளுக்கும் அப்பால் சோவியத் நாடாக மேதை ஸ்டானிஸ்லாவ்ஸ்கி, ஜெர்மன் நாடகாசிரியர் 'ப்ரெக்ட்' போன்றவர்களின் தாக்கமும் பெற்றது.

இன்றைய சிங்கள நாடகங்களை மரபார்ந்த கூறுகளையும், யதார்த்தவாதக் கூறுகளையும், சோஷலிச யதார்த்தவாதக் கூறுகளையும் உள்ளடக்கிய ஒரு வளர்ச்சியடைந்த நாடகத் துறையாகப் பரிணமித்திருக்கிறது. மக்களின் பெரும் பகுதியினர் இன்று கல்வி பெற்றவர்கள். சினிமா, தொலைக்காட்சியின் வளர்ச்சி கூட நாடகமேடையை பாதிக்கவில்லை. நாடகங்களுக்கு மக்கள் திரளாக வருகிறார்கள். நாடகக் கலைஞர்கள் மக்கள் ஆதரவில் நாடகத் தொழிலை முழுநேரத் தொழிலாக ஏற்று வாழ முடிகிறது. குணஸேனா கலபதி இன்றைய நாடகாசிரியர்களில் குறிப்பிடத் தகுந்தவர். 'காஸ்யா லோர்கா', 'யொமா' போன்ற நாடகங்கள் பிரபலமானவை.

குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும்

குழந்தைகளுக்கான நாடகங்கள் சிறப்பாகத் தயாரிக்கப்படுகின்றன. இளைஞர்களுக்கான அவர்களது பிரச்சினைகளை மையமாகக் கொண்ட நாடகங்

படிப்பகம்

www.padippakam.com

களும் வளர்ச்சி பெற்ற நிலையில் உள்ளன. திருமதி ஸோமலதா அந்த இரு துறைகளிலும் வெற்றிகரமாகப் பல நாடகங்களை இயக்கி இருப்பதாகக் கூறினார். தமிழ் நாடகத் துறையும் இதை முறையில் வளர்ச்சியடைந் திருப்பதாகக் கூறினார். இந்தியாவில் வளர்ச்சி அடைந்த மேடை இயக்கம் வங்காளத்திலும் மராத்திரத்திலும் இருப்பதைச் சுட்டிக்காட்டிய அவர் ஸ்ரீலங்காவின் நாடகத்" துறையின் வளர்ச்சியை அவைகளுடன் ஒப்பிடலாம் என்றார்.

திருமதி ஸோமலதாவுக்கு, 'வஸந்த தேவாஸா' 'விராகே' என்ற இரு சிங்களப் படங்களில் சிறந்த துணை நடிகைக்கான ஜனாதிபதி பரிசு இரண்டு முறை கிடைத்திருக்கின்றது. அவரது கணவர் மாவட்ட நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றுபவர். அவருக்கு இரண்டு புதல்வியர், இளையவர் நடிப்பு, நாட்டியத் துறையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார்.

பயிற்சி

நாடகக் கலைஞர்களை உருவாக்க முழுநேரப் பயிற்சி முகாம்களுடன் வாரம் ஒரு முழுநாள் வீதம் தொடர்ந்து 6 மாதத்திற்கு பயிற்சி அளிக்கும் வகுப்புகளும் அவர் நடத்தி இருக்கிறார். பிரச்சினைகளை மையமாகக் கொண்ட நாடகங்களை மக்கள் விரும்பி ரசிக்கிறார்கள். நாடகம் பொழுது போக்குக்கு மட்டுமே என்ற நிலையிலிருந்து சமுதாயச் சிந்தனையின் கலை வெளிப்பாடாக அது உயர்ந்திருக்கிறது.

பாலம் அமைப்போம்

இருமக்களுக்கும் இடையே நேசத்தை வளர்க்கக் கலைஞர்களின் பங்கு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு அவர் கூறும் யோசனைகள் இருநாட்டுக் கலைஞர்களிடம் கலந்துரையாடல், கலைப் பரிமாற்றங்கள், மக்களின் அடிப்படையான நட்புணர்வையும், சமாதான விருப்பத்தையும் வளர்க்கும் கலைநிகழ்ச்சிகள்.

இவைகள் மக்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நேச உறவுகள் வலுப்பட வழி வகுக்கும் என்று கருதுகிறார் திருமதி ஸோமலதா.

இந்தப் பாதையில் இப்டாவின் செயல்பாடுகளையும் கேட்டறிந்து தன்பாராட்டுக்களை வெளியிட்டார் அவர்.

நளினக் கலைகள் அவை நம் நேசத்தை வளர்க்கட்டும்.

படிப்பகம்

www.padippakam.com

பாட்டாளித் தலைவனும் படைப்பாளித் தோழனும்

★ ★ ★

தமிழாக்கம் :

இராகுலதாசன்

பாட்டாளியர் தலைவனாம் லெனினுடைய செயலகத்தில் நான் பணியாற்றிக் கொண்டிருந்த காலம். லெனினும் கார்க்கியும் அங்கே சந்தித்துப் பேசி உரையாடுவதைக் காணும் வாய்ப்பு எனக்கு அடிக்கடி கிடைத்தது.

லெனினைச் சந்திக்கக் கார்க்கி செயலகத்திற்கு வரும்போதெல்லாம், செயலகத்தில் பணிபுரிகின்ற அலுவர் அனைவருக்கும் ஏகப்பட்ட சந்தோஷம் பெருகிவிடும். அலுவலர்களாகிய நாங்கள் இவ்வாறு பிரத்தியேகமாகச் சந்தோஷப்படுவதற்குக் காரணமே லெனின் தான். "மிக நெருங்கிய நண்பரைச் சந்திக்கப் போகிறோம்; பாட்டாளி மக்களது புரட்சிக்காகத் தன்னை, தன் எழுத்தை முழுமையாக அர்ப்பணித்துள்ள ஒரு மகத்தான மனிதனைச் சந்திக்கப் போகிறோம் என்று மகிழ்ந்து போகும் லெனின், அத்தகைய கார்க்கியை வரவேற்பதற்குப் பெருமை மிகக் கொண்டு தயாராக இருப்பார். லெனின் கொண்டிருக்கும் பெருமை கலந்த மகிழ்ச்சி எங்களையும் தொற்றிக் கொண்டு விடும்.

லெனின் தங்கியிருக்கும் அறைக்குக் கார்க்கி அடிக்கடி வருவார். 'வராத நாளே

படிப்பகம்

www.padippakam.com

இல்லை' என்று சொல்லிவிடும் அளவுக்குக் கார்க்கியின் வருகை அடிக்கடி இருக்கும். சில நேரங்களில் கார்க்கியை லெனின் தனது தனி அலுவலகத்திலேயே கூட வரவேற்றுக் கொள்வார். ஒரு முறை கார்க்கி பெட்ரோகிராட் நகரிலிருந்து லெனினைப் பார்க்க வருவதாக இருந்தது. அந்த வருகையின் போது, வரவேற்பு ஏற்பாடுகளைச் செய்வதற்காக வழக்கம்போல லெனின் தன் செயலாளரை அழைத்தார். கனிவும் ஆர்வமும் பொங்கப் பின்வருமாறு சொன்னார்: ''கார்க்கி நாளைக் காலையில் இங்கே வருகிறார். அவரை அழைத்து வருவதற்கு என்னுடைய காரை ஸ்டேஷனுக்கு அனுப்பி வையுங்கள். அவர் வந்து தங்கும் அறையில் எல்லாம் தயாராக இருக்குமாறு கவனித்துக் கொள்ளுங்கள். அவர் தங்கும் அறை குளிருக்கு இதமாக வெதுவெதுப்பாக இருக்குமாறு ஏற்பாடு செய்யவேண்டும். அங்கே போதுமான நெருப்புக்குத் தேவையான எரிபொருள் இருக்குமாறும் கவனித்துக் கொள்ள வேண்டும் ...ம் ... அத்தோடு, எந்த நேரத்திற்குச் சரியாகக் கார் அனுப்படவேண்டும் என்று அவரோடு தொடர்புகொண்டு, நேரத்தைத் தெரிந்து கொண்டு கார் அனுபபி வைக்கவேண்டும்...''

அலெக்சி மாக்ஸிமோவிச் என்ற கார்க்கி மட்டும்தானா இவ்வாறு மிக அக்கறையோடு லெனினால் கவனிக்கப்பட்டவர்? இல்லை. எல்லோரும் தான். இதனை லெனினும் நன்கு அறிவார். உள்நாட்டு யுத்தம் மிக மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த அந்த நாட்களில் இப்படியெல்லாம் அனைவரையும் மிக உன்னிப்பாகப் பார்த்துப் பார்த்துக் கவனம் செலுத்திக் கொண்டிருப்பது மிகவும் கடினமான காரியம். போராட்டக் காலமாக இருக்கிறது என்பதற்காகவோ, அனைவரையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது என்பதற்காகவோ, லெனின் கார்க்கியை வரவேற்பதில், உபசரிப்பதில், மரியாதை செய்வதில் எப்போதும் தளர்ந்ததே இல்லை.

கார்க்கி வரப்போகும் அந்த நாளின் காலை நேரமும் இதோ விடிந்துவிட்டது. லெனின் பரபரப்பு அடைந்து விடுவார். தனது அலுவலகத்திற்கு வழக்கமாக வரும் நேரத்திற்கு முன்னதாகவே லெனின் வந்து விடுவார். வந்ததும் வராததுமாகத் தன் செயலாளருக்கு ஆள் அனுப்பிவிடுவார். ''கார்க்கியை வரவேற்க எல்லாம் தயார் தானா?'' என்று செயலாளரிடம் கேட்டுத் தெரிந்து கொள்

படிப்பகம்

www.padippakam.com

வார். "கார்க்கி வரும்போது கிரெம்ளின் வாசலில் அவரைத் தாமதப் படுத்திவிடப் போகிறார்கள். அப்படி நிறுத்திவிடாமல் ஏற்பாடு செய்துவிட்டீர்களா ?" என்று கேட்பார். ஒரு அரைமணி நேரம்தான் கழிந்திருக்கும். செயலாளர் அறையில் மணி அலறும். லெனின்தான் கேட்பார் : "கார் அனுப்பியாயிற்றா ?" என்று. கார்க்கி என்ற அந்தப் படைப்பாளித் தோழரை வரவேற்க இத்தனை அன்பும், ஒழுங்கும், பரபரப்பும் லெனினிடம் இருக்கும்.

லெனின் தரவேற்ற முறை. அதற்காக அவர் தந்த ஆணைகள், செயற் குறிப்புக்கள் அனைத்தையும் எங்கள் அலுவலகத்தில் பத்திரப்படுத்தி வைக்காமல்போனது மிகவும் வருந்துவதற்குரியதாகும். அதனால் லெனின்—கார்க்கி சந்திப்பு நிகழ்ச்சிகளை நாள், தேதி வாரியாகச் சேகரிக்க இயலவில்லை. ஆனாலும், அந்தச் சந்திப்புக்கள் நீங்காத நினைவுகளாய் நெஞ்சில் இருக்கின்றன.

மறக்க முடியாத அந்தச் சந்திப்புக்களில், 1919-ஆம் ஆண்டின் போது நிகழ்ந்த ஒரு சந்திப்பை இங்கே நினைவு கூர்கிறேன்.

கார்க்கியின் அந்த வருகை எதிர்பாராதது; முன்னறிவிப்பு இல்லாதது. ஒருநாள் மாலை நேரத்தில் கார்க்கி திடீரென்று வந்துவிட்டார். அந்த நேரத்தில் லெனின் அலுவலகத்தில் இல்லை. வெளியே ஒரு கூட்டத்தில் உரையாற்றச் சென்றிருந்தார். லெனினுடைய வருகைக்காகக் கார்க்கி செயலகத்தில் காத்திருந்தார். அப்படி எப்போதும் கார்க்கி தனியாகக் காத்துக் கொண்டிருந்ததே இல்லை. வருகை பற்றி முன் அறிவிப்பு இருக்கும். 'எப்போது, எப்போது' என்று அனைத்தையும் தயார் நிலைப் படுத்திக் கொண்டு லெனின் காத்துக் கொண்டிருப்பார். கார்க்கி உள்ளே வரும்போதே லெனின் ஓடிவந்து வரவேற்பார்; கைநீட்டிக் கைபிடித்துக் குலுக்குவோர்; தனது இன்னொரு கரத்தாலும் தோளாலும் கார்க்கியின் தோளைச் சுற்றி வளைத்து அணைத்துக் கொள்வார்; தோழர்களை, நண்பர்களை முகத்துக்கு முகம் நேர் பார்த்து மகிழுவதுதான் லெனினது வழக்கம். அதன் படியே, கார்க்கியை அணைத்தபடியே லெனின் முகம் பார்ப்பார். முதலாவது விசாரிப்பு உடல்நலம் பற்றியதாகத்தான் இருக்கும். இவ்வாறு நலம் விசாரித்துக் கட்டிப்பிடித்தபடியே தனது அலுவலக அறைக்குள் அழைத்துச் செல்

படிப்பகம்

www.padippakam.com

வார் லெனின். இதுதான் எப்போதும் நடக்கும். ஆனால், இன்றைக்கு லெனின் அலுவலகத்தில் இல்லாத காரணத்தால் கார்க்கி மட்டும் தன்னந்தனியாய் உள்ளே காத்திருக்க நேர்ந்தது.

லெனின்—கார்க்கி இருவரது சந்திப்புக்களின் போது அலுவலர்களாகிய நாங்கள் சும்மா இருந்துவிட முடியாது. மிகவும் சுறுசுறுப்பாக இருப்போம். அவர்கள் இருவரது சந்திப்புகள் வெறும் பொழுதுபோக்குச் சந்திப்புகளாக இருந்ததில்லை. கார்க்கி வரும்போதெல்லாம், உடனடியாகக் கவனிக்க வேண்டிய பல விஷயங்களை எடுத்துக் கொண்டுதான் வருவார். இருவரும் ஏற்றுக்கொண்ட சமுதாயக் கடமைகள் தொடர்பான விஷயங்களாக அவை இருக்கும். சந்திப்பின்போது, அவற்றின் மீது லெனின் உடனடியாகக் கவனம் செலுத்துவார். கார்க்கி கொண்டுவந்த விஷயங்கள் எவையும் தேங்கியதாகவோ, தாமதம் ஆனதாகவோ, முடிவு செய்யப்படாமல் விடப்பட்டதாகவோ சொல்ல முடியாது. அந்த விஷயங்கள் தொடர்பாக; நேரடி ஆணைகள், செயற்குறிப்புக்கள், ஆகியவை செயலாளர்களாகிய எங்களுக்கு உடனேயே இடப்பட்டுவிடும். விசாரணைக்குரிய குறிப்புக்கள் அனுப்பப்படும்; அனுப்பவேண்டிய கடிதங்களின் நகல்கள், தொலைவரிச் செய்திகள் ஆகியனவும் தயாராகிவிடும். அவைகளுக்கான பதில்கள் உரிய நேரத்தில் லெனினுடைய மேசைக்குச் சென்றுவிட வேண்டும். இதில் எந்தவிதக் குறைபாடும் நேர்ந்துவிடக் கூடாது. கார்க்கியின் வருகையால் இவ்வளவும் நடந்தாக வேண்டும். எனவேதான் செயலக அலுவலர்களாகிய நாங்களும் வெகு சுறுசுறுப்பாக இயங்குவோம்.

கார்க்கி வருகை தரும்போது, சில தவிர்க்க முடியாத வேறு வேலைகளில் லெனின் மூழ்கியிருக்க நேர்ந்த சந்தர்ப்பங்களும் அமைந்தன. லெனின் நேரடியாகவே ஈடுபட்டுக் கவனிக்கவேண்டிய விஷயங்கள், அவசரமான விஷயங்கள் குறித்து லெனின் தந்து கொண்டிருந்த நேர்முகப் பேட்டிகள் என்றவாறு பல முக்கியமான பணிகளில் அவர் ஈடுபட்டிருப்பார். அதற்காக கார்க்கியின் சந்திப்பில் எந்தத் தயக்கத்தையும் அல்லது தள்ளிப் போடுதலையும் லெனின் வைத்துக்கொண்டதே இல்லை. எத்துணை பெரிய விஷயங்களில் அவர் ஈடுபட்டிருந்தாலும், கார்க்கியின் வருகைக்காக லெனின் எப்போதும் வழி திறந்தே வைத்திருந்தார். செய

படிப்பகம்

www.padippakam.com

லக அலுவலர்களாகிய எங்களிடம் முன்கூட்டியே எச்சரித்து விடுவார் : "நான் எந்தவித அவசரப் பணியில் இருந்தாலும், கார்க்கி வந்தவுடன் என் அலுவலகத்திற்குள் அனுப்பி விடுங்கள், தாமதித்து விடக்கூடாது'' என்று அவசரவேலையில் ஈடுபட்டிருக்கும் நேரத்திலும், கார்க்கியை வரவேற்றுத் தன் அருகே வைத்துக் கொண்டு, அந்த அவசர வேலைகளை முடித்து அனுப்பி வைப்பார்.

கார்க்கியின் மீது லெனினுக்கு மிக ஆழ்ந்த அன்பும் மரியாதையும் இருந்தது. அதுபோலவே லெனின் மீது கார்க்கிக்கும், ஆழ்ந்த அன்பும் மரியாதையும் இருந்தது. அவர்கள் இருவரது சந்திப்பிற்குப் பிறகு, லெனின் தந்த செயற்குறிப்புக்கள், ஆணைகள் ஆகியவை பற்றி நான் கார்க்கியுடன் தனியே பேசுவது உண்டு. சில விஷயங்கள் குறித்துக் கருத்துக்களைத் தெளிவுபடுத்தி உறுதி செய்து கொள்வதற்காகவும், சில விண்ணப்பங்கள் மீதான குறிப்புக்களை வரைவதற்காகவும், இவை போன்ற பிற விஷயங்கள் குறித்தும், சந்திப்பிற்குப் பிறகு கார்க்கியுடன் பேச வேண்டியிருக்கும்.

அப்போது, லெனின் பற்றி, சந்தித்த பிறகு அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டது பற்றி... கார்க்கி குறிப்பிட்டுப் பேசுவார். அந்த நிமிடங்களில் கார்க்கி மிகவும் உணர்ச்சிவசப்பட்டு விடுவார். லெனின் மீது அவர் கொண்டுள்ள உணர்வு பூர்வமான அன்பும் மரியாதையும் பீறிக்கொண்டு வெளிவரும், மறைத்துக் கொள்ள வேண்டும் என்று கார்க்கி நினைக்கின்ற கட்டுப்படுத்துதலையும் மீறி.

—M. GLYASSER எழுதிய LENIN AND GORKY என்ற கட்டுரையிலிருந்து.

படிப்பகம்

www.padippakam.com

கொங்கு நாட்டு நிலப்பெயர்கள்

-பெருமாள் முருகன்-

முன்னுரை :

பெயராய்வு இன்று வளர்ந்து வரும் ஒரு துறையாக விளங்குகின்றது. ஊர்ப் பெயர், மக்கட் பெயர், பட்டப் பெயர் எனப் பெயராய்வின் பரப்பு விரிந்து வருகின்றது. மாவட்டம் தோறும் வழங்கும் ஊர்ப் பெயர்களை ஆய்ந்து, சில நூல்களை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது. ஊர்ப் பெயராய்வின் அளவிற்குப் பிற பெயராய்வுகள் வளரவில்லை.

அவ்வகையில், கொங்கு நாட்டு நிலப்பெயர்களை ஆயும் பணியை இக்கட்டுரை மேற்கொள்கிறது.

நிலப்பெயர்—விளக்கம் :

தொல்காப்பியம் நிலங்களை ஐவகையாகப் பிரித்துப் பெயரிடுகின்றது.[1] குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை, என்ற அவை விரிந்த பரப்பைக் குறிக்கும் பெயர்களாகும். 'நிலப் பெயர் குடிப் பெயர் குழுவின் பெயரே' என்னும் நூற்பாவில் 'நிலப்பெயர்' என்னும் சொல்லாட்சியைத் தொல்காப்பியர் கையாள்கின்றார். இங்கும் நிலப்பெயர் என்பது நாட்டின் பெயரையே குறிப்பதை, இளம்பூரணர் கொடுக்கும், 'அருவாளன்', 'சோழியன்' என்னும் சான்றுகளின் மூலம் அறியலாம்.[2]

சோழர் காலத்தில் 'பிரமதேயம்' உள்ளிட்ட நிலப்பெயர்கள் வழங்கின என்பதை அறிகிறோம். ஆனால், இங்கு எடுத்துக்கொண்டிருக்கும் நிலப்பெயர்கள் இவற்றிலிருந்து வேறுபட்டவை; மக்களால் வழங்கப் பெறுபவை. எனவே, சமுதாய வரலாற்றிற்குத் துணை செய்பவை.

ஒவ்வொரு கிராமத்திலும் பகுதி பகுதியாகப் பிரிக்கப்

படிப்பகம்

www.padippakam.com

பட்ட பல நிலங்கள் உள்ளன. இந்நிலங்களின் பிரிப்பு எல்லை சீராக அமைந்திராது. காரணம், நிலம் உடையவர்கள் அனைவரும் ஒரே அளவில் நிலம் வைத்திருப்பதில்லை. எனவே தனிப்பட்டவரின் ஆளுகை, ஒரு குடும்பத்திற்குரியது, பலரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த போதும் ஒரு குறிப்பிட்ட பரப்புடையது எனப் பல முறைகளில் நிலங்களின் எல்லை மாறுபட்டிருக்கும். இவ்வடிப்படையிலேயே அந்நிலங்களுக்குரிய பெயர்களும் அமைந்திருக்கக் காணலாம்.

நிலங்களில், பல்லாண்டுகளாக ஒரு பரம்பரையினர்க்கே உரியதாக இருந்து வருவனவும் உண்டு; பலரின் கைம்மாறி மாறி வருவனவும் உண்டு. ஆயினும் இவற்றின் பெயர்களில் பெயர்களில் பெறும் மாறுதல் ஏற்படுவதில்லை, இப்பெயர்கள் பல சமுதாயச் செய்திகளையும் மக்களின் மனவெளிப்பாடுகளையும் உள்ளடக்கித் திகழ்கின்றன.

இரு கூறுகள் :

ஊர்ப் பெயர்களின் அமைப்பைப் பொதுக்கூறு, சிறப்புக் கூறு என இரண்டாகப் பிரித்துக் காண்பர்.

"பல்வேறு இடங்களுக்கும் பொதுவான அமைப்பைப் பொதுக்கூறு புலப்படுத்துகிறது. அவ்விடங்களுக்குரிய சிறப்புத் தன்மைகளைச் சிறப்புக் கூறு சித்தரிக்கிறது."[3]

நிலப் பெயர்களையும் இந்த அடிப்படையில் பிரிக்கஇயலும்.

பொதுக் கூறுகள் :

பொதுக்கூறு என்பது பெயரின் விகுதியாக அமையும். பல பெயர்களுக்கும் பொதுவாக அமையும் கூறு இதுவாகும்.

"ஊர்ப் பெயரின் சற்றிலே ஊர்ப்பெயர் விகுதியாக அமைந்திருக்கும் கூறு பொதுக் கூறு எனப்படும்."[4] என்னும் ஊர்ப் பெயர்களுக்குரிய கூற்று நிலப்பெயர்களுக்கும் பொருந்தும்.

கொங்கு நாட்டு நிலப்பெயர்களின் பொதுக் கூறுகளாக இரண்டைச் சுட்டலாம். அவை,

1. காடு
2. தோட்டம் என்பன.

பெரும்பான்மையான பெயர்கள் 'காடு' என்ற பொதுக் கூறினையே கொண்டிருக்கின்றன. மிகச் சில நன்செய்நிலங்களே 'தோட்டம்' என்ற கூறி

படிப்பகம்

www.padippakam.com

லைக் கொண்டிருக்கின்றன. கொங்கு நாடு பெரும்பான்மை புன்செய் நிலங்களைக் கொண்டிருக்கும் பகுதி. எனவே, 'காடு' என்ற பொதுக் கூறே மிகப் பழமையானது என அறியலாம். கிணறு, வாய்க்கால் போன்ற செயற்கைப் பாசனங்கள் தோன்றிய பின்னர் 'தோட்டம்' என்ற கூறு வந்திருக்க வேண்டும்.

சிறப்புக் கூறுகள் :

'பொதுக் கூறுகளின் முன் பகுதியில் அமைவன சிறப்புக் கூறுகள். பெயரில் மட்டும் முன்னோடியாக இல்லாமல், ஒவ்வொரு ஊரின் வரலாற்றையும், அதன் காரணமாகத் தமிழர் வரலாற்றைத் தருவதிலும் பொதுக் கூறுகளை விட ஆழமும் அகலமும் உடையனவாக இவை திகழ்கின்றன''[5] என்னும் விளக்கம் நிலப் பெயர்களுக்கும் பொருந்தும்.

கொங்கு நாட்டு நிலப்பெயர்களைச் சிறப்புக் கூறுகளின் அடிப்படையில் ஐந்து வகையாகப் பிரிக்கலாம் அவை,

1. மனிதர் பெயர்கள்
2. நிலத்தின் தன்மைப் பெயர்கள
3. அளவு, வடிவப் பெயர்கள்
4. சிறப்புப் பொருள் பெயர்கள்
5. பிற பெயர்கள்

என்பன.

இனி இவற்றை விரிவாகக் காண்போம்.

1. மனிதர் பெயர்கள் :

நிலங்களுக்கு உரியவர்களின் பெயர்களை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் நிலப் பெயர்கள் இவ்வகையில் சேர்வனவாகும்.

இப்பெயர்களை மூவகைப் படுத்திக் காணலாம். அவை,

1. 1. சாதிப் பெயர்கள்
1. 2. பதவிப் பெயர்கள்
1. 3. பட்டப் பெயர்கள்

என்பன.

1. 1. சாதிப் பெயர்கள் :

நிலத்திற்குஉரியவரின் சாதிப் பெயரைக் கொண்டு அந்நிலம் அழைக்கப்படும் வழக்கை பரவலாகக் கொங்கு நாட்டில் காணலாம். கொங்கு நாட்டைப் பொறுத்த அளவில் நிலக்கிழார்களாக இருப்பவர்கள் வேளாளர்களேயாவர். நிலக்கிழார்களான வேளாளர் சாதி நிலப் பெயர்களில் அமைவதில்லை. பிற சாதிப் பெயர்களே நிலப்

படிப்பகம்

www.padippakam.com

பெயர்களில் காணப்படுகின்றன.

சான்று :

வண்ணாங்காடு, பூசாரி காடு, தட்டாங்காடு, அய்யங்காடு, பறைய தோட்டம், சங்கிலி தோட்டம்
சானாங் காடு, சாயுபு காடு. ஆண்டி காடு.

இவையன்றி சில பெயர்கள், சின்னாங்காடு, பெரியசாமி காடு என சாதிப்பெயரல்லாத. ஒரு குறிப்பிட்டவரின் பெயரில் அமைந்திருக்கின்றன. நுணுகிப் பார்ப்பின் இப்பெயர்களும் வேளாளர் அல்லாத சாதியினரின் பெயர்களாகவே இருக்கக் காணலாம்.

தொழில் அடிப்படையில் சாதிப்பிரிவினையை ஏற்படுத்தியிருந்த ஒரு சமுதாய அமைப்பை நிலப்பெயர்கள் தெளிவாகக் காட்டுகின்றன. இச் சமுதாய அமைப்பில் ஒரு சாதியினர் அவர்க்குரிய தொழிலைவிட்டு வேறு தொழிலுக்கு வருவதை அச்சமுதாயம் விரும்பியிருக்கவில்லை. எனவே, ஏதேனும் சில காரணங்களால் வேளாளர் அல்லாத பிற சாதியினரில் ஒருவர் உழவுக்கு வரும்போது அவர்களின் நிலங்கள் அவர்களது சாதிப் பெயராலேயே அழைக்கப்பட்டுள்ளன.

விதிவிலக்காக, நால்லக் கவண்டந் தோட்டம், கவண்டங்காடு போன்ற சில பெயர்கள் அருகிக் காணப்படுகின்றன. அவை அண்மைக் காலத்து வழக்குகளாகவே இருக்க வேண்டும்.

1. 2. பதவிப் பெயர்கள் :

கிராமங்கள் நிர்வகிக்கும் பொருட்டு சில பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. அத்தகைய பதவி வகித்தவர்களின் நிலங்கள் அவர்களின் பதவிப் பெய பெயரால் அழைக்கப்பட்டுப் பின்பு நிலைத்துவிட்டன.

சான்று : கணக்கங்காடு
மணியாரங்காடு
கொத்துக்காரன்காடு

ஒரு சமூகத்தின் விருப்பு, வெறுப்புகள் அச்சமூகத்தின் படைப்புக்களில் வெளிப்படுவது இயற்கை. கொங்குச் சமூகத்தின் படைப்பான நிலப் பெயர்களில் கிராம நிர்வாகிகளின் பதவிப் பெயர்கள் இடம் பெற்றிருப்பதற்குக் காரணம் மக்கள் அவர்கள் மீது கொண்டிருந்த வெறுப்பேயாகும். இன்றும் 'மணியாரன்' போன்றவர்கள் இழைத்த கொடுமைகளைக் கதை கதையாகச் சொல்லுகின்றனர் கொங்கு மக்கள்.

படிப்பகம்

www.padippakam.com

1.3. பட்டப் பெயர்கள் :

ஒவ்வொரு மனிதருக்கும் ஏதாவதொரு வகையில் பட்டப் பெயர்கள் வைக்கப்படுகின்றன. மனிதர்கள் மறைந்து விட்டாலும் அவர்களின் பட்டப் பெயர்கள் நிலப்பெயர்களாக நிலைத்துவிடுகின்ற தன்மையைக் கொங்கு நாட்டில் காணலாம்.

சான்று :
குள்ளங்காடு, கருவாலங்காடு, மசயங்காடு, நரியந்தோட்டம், பல்லங்காடு.

2. நிலத்தின் தன்மைப் பெயர்கள்

மண் பல தன்மைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. மண்ணின் தன்மைக்கேற்பவே அந்நிலத்தில் பயிர்செய்தல் நடைபெறுகிறது எனவே, மண்ணின் தன்மை உழவில் ஈடுபட்டிருப்போருக்கு மிக இன்றியமையாததாகும்.

மண்ணின் தன்மையையே பெயராக அந்நிலத்திற்கு வழங்கி வரும், வழக்கம் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக உள்ளது.

சான்று :
ஓடக்காடு, செம்மாங்காடு
கல்லாகாடு, கருங்கலாங்காடு
மணக்(ற்)காடு.

3. அளவு, வடிவப் பெயர்கள் :

மனிதனின் உருவ அமைப்பு, நிறம் ஆகியவற்றைக் கொண்டு பட்டப்பெயர்கள் சூட்டுவது போல நிலங்களுக்கும் அளவு, வடிவ அடிப்படையில் பெயர் சூட்டும் பண்பு கொங்கு நாட்டில் காணப்படுகின்றது.

சான்று :

பெரிய காடு
சின்னத் தோட்டம்
நெடுங் காடு
துண்டுக் காடு

கொங்கு நாட்டு மக்கள் கடவுள்களைக் கூட நிறம், உயரம் ஆகிய அடையாளங்களை வைத்து 'பெரியசாமி', 'சின்னச்சாமி', 'கருப்பண்ணச்சாமி' என அழைத்து வருவதைக் 'கொங்கு வேளாளர் வரலாறு' என்றும் நூல் தெளிவாகச் சுட்டுகிறது.[6]

4. சிறப்புப் பொருள் பெயர்கள் :

ஒவ்வொரு நிலத்திற்கும் ஏதாவதொரு தனித்தன்மை இருக்கும் பிற மாநிலங்களில் காணப்படாத ஏதாவது ஒரு பொருள் (அவை செடி, கொடிகளாகவோ, மரமாகவே இருக்கலாம்) குறிப்பிட்ட நிலத்தில் மட்டும் அதிகம் காணப்படுமானால், அதன் பெயராலேயே அந்நிலம் அழைக்கப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

சான்று :

சங்கங்காடு, பனங்காடு
கல்லிக்காடு, கோரக்காடு
மின்னக்காடு, பாலக்காடு

இவை போன்றே ஒரு நிலத்திற்கு மட்டும் உரியதாத விளங்கும் பொருளைக் கொண்டும் பெயர்கள் அமைகின்றன.

சான்று :

குட்டிச் செவுத்துக்காடு
பாளக்காடு, வரவிக்காடு,
ஊத்துக்காடு.

5. பிற பெயர்கள்

மேற்கண்ட பகுப்பில் அடங்காத அனைத்துப் பெயர்களையும் இத்தலைப்பு குறிக்கின்றது.

ஊரின் எல்லையாக அமைந்த நிலத்திற்கு 'எல்லக்காடு' என்ற பெயர் வழங்குகின்றது. யாருக்கோ எப்போதோ யாரோ மானியமாகக் கொடுத்த நிலம் 'மானுவக்காடு' என இன்றும் வழங்கி வருதலைப் பல இடங்களில் காணலாம். இதன் மூலம் கொங்கு நாட்டிலும் நிலங்களை மானியமாகக் கொடுக்கும் வழக்கம் நிலவி வந்தமையை அறிய முடிகின்றது. மேலும் கோயில்களுக்கென நிலங்கள் விடப்பட்டிருந்தமையை 'சாமி காடு' என்ற பெயர் பரவலாக வழங்கி வருவதன் மூலம் அறியலாம்.

இவை போன்ற பெயர்களன்றி இன்னும் பல பெயர்களின் அடிப்படை விளங்கவில்லை. இப்பெயர்கள் மக்களின் பேச்சு வழக்கில் திரிந்து நேர்பொருள் கண்டறிய முடியாத அளவில் காணப்படுகின்றன.

சான்று :

மாலயக்காடு, சினாங்காடு
திருப்பலாங்காடு, களிச்சிகாடு.

இப்பெயர்களின் விளக்கம் தெரியவருமானால் இன்னும் பல செய்திகளை அறிவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

சில செய்திகள் :

நிலப் பெயர்கள் குறித்த பொதுவான செய்திகள் சிலவற்றைக் காணலாம்.

ஒரு நிலத்திலிருந்து மற்றொரு நிலத்தை வேறுபடுத்தி, அடையாளம் காணவே நிலப் பெயர்கள் ஏற்பட்டன எனலாம். ஒரு குறிப்பிட்ட பெயரில் வழங்கும் நிலத்தில் குடியேற்றம் ஏற்பட்டு, ஊராக மாறும்போது அந்நிலத்தின் பெயரே ஊரின் பெயராக மாறியமைகிறது.

படிப்பகம்

www.padippakam.com

சான்று :

ஓடக்காடு புதூர்
மஞ்சக்காட்டுவலசு.

"புதிதாக உண்டாக்கிய ஊர்களுக்கு வலசு, குறிச்சி, புதூர் எனப் பெயரிடும் மரபு கொங்கு நாட்டிலேயுண்டு"[7] என்னும் கருத்து மேற்கண்ட ஊர்கள் நிலப் பெயர்களிலிருந்து தோன்றியவை என்பதற்கு வலுவூட்டுகின்றது.

நிலங்களுக்குரிய இப்பெயர்களில் சில காலப் போக்கில் மாறி அமைந்திருப்பதையும் காணலாம். இம்மாற்றம் எல்லாப் பெயர்களிலும் எளிதில் நிகழ்ந்து விடுவதில்லை. வழங்கும் பெயரை மறைக்கும் அளவிற்கு இயற்கை மாற்றமோ, நிகழ்ச்சி மாற்றமோ ஏற்படும் போதே பெயர் மாற்றங்கள் நிகழ்கின்றன. சான்றாக, கணக்கங்காடு என்று வழங்கி வந்த ஒரு பெயர் கொங்கராங்காடு என மாறியுள்ளமையைச் சுட்டலாம். 'கொக்கரான்' என்ற ஒருவர் தன்னுடைய செயல்களால் மக்களிடம் பாதிப்பை ஏற்படுத்திய காரணத்தால், பழைய பெயர் மறைந்து புதிய பெயர் வழக்கிற்கு வந்திருக்கிறது.

இத்தகைய நிலப்பெயர்கள் நிலத்தைக் குறிக்க எல்லாக் காலத்தும் பயன் படுத்தப்படுகின்றன. இந் நிலங்களையே தற்காலிகமாக இவற்றில் விளையும் பயிர்களைக் கொண்டு வழங்குவதும் உண்டு. அப்பயிர் அறுவடை செய்ததும் அப்பெயரும் மறைந்துவிடும்.

சான்று : கரும்பங்காடு
நெல்லங்காடு.

நிலத்திற்கு உரியவரை அந்த நிலத்தின் பெயரைக் குறிப்பிட்டு அழைக்கும் வழக்கம் கொங்கு நாட்டில் பரவலாகக் காணப்படுகின்றது. 'வெட்டுக்காட்டான்', 'ஒட்டக்காட்டான்' என்பது போலப் பல பெயர்களை சான்றுகளாகக் காட்டலாம்.

முடிவுரை :

இக்கட்டுரை மூலம் அறியும் செய்திகளைத் தொகுத்துக் காணலாம்.

1. தொழில் அடிப்படையில் சாதிப் பிரிவுகள் அமைந்திருந்த சமூக அமைப்பைக் கொங்கு நாட்டு நிலப்பெயர்கள் காட்டுகின்றன.

2. கிராம நிர்வாகத்தை நடத்தியவர்களின் உதவிகளை நிலப் பெயர்கள் மூலம் அறிய முடிகின்றது.

3. மண்ணின் தன்மைக்கேற்ப, சாகுபடி நடைபெற

படிப்பகம்

www.padippakam.com

வேண்டி இருப்பதால், அதற்கு மக்கள் முக்கியத்துவம் கொடுத்தமையை நிலப்பெயர்கள் காட்டுகின்றன.

4. மானியமாக நிலம் கொடுக்கும்வழக்கமும் கொங்கு நாட்டில் நிலவியமைக்கு நிலப் பெயர்களையும் சான்றுகளைக் கொள்ளலாம்.

5. பட்டப் பெயர்களைக் கொண்டு பெயரிடுதல், சிறப்புப் பொருள்களைக் கொண்டு பெயரிடுதல் ஆகியன மக்களின் இயல்பான மனப்போக்கைக் காட்டுகின்றன.

6. நிலப்பெயர் அடிப்படையில் ஊர்ப்பெயர் அமைதல், நிலத்திற்கு உரியவர் நிலப் பேயரால் அழைக்கப்படுதல் ஆகிய செய்திகள் நிலத்தோடு பிணைந்திருக்கும் மக்கள் வாழ்க்கைக்குச் சான்றுகளாக விளங்குகின்றன.

குறிப்புக்கள் :

1. தொல்காப்பியம் (இளம்பூரணம்), சொல்லதிகாரம், நூற்பா, 162.
2. தொல்காப்பியம் (இளம்பூரணம்), பொருளதிகாரம், நூற்பா, 5.
3. கரு. நாகராசன், செங்கை மாவட்ட ஊர்ப்பெயர்கள். ப. 193.
4. ஆர்.ஆளவந்தார் இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், ,51.
5. கே. பகவதி, தமிழக ஊர்ப் பெயர்கள், ப. 107.
6. ட்டி. கே. சக்திதேவி கொங்கு வேளாளர் வரலாறு. பக். 14-15.
7. மேற்படி நூல், ப. 59.

படிப்பகம்

www.padippakam.com

புதிய புறாக்கள்

தனுஷ்கோடி ராமசாமி

புறாக்கள் ஓரிடத்திலிருந்து செய்திகளை மற்ற இடங்களுக்கு கொண்டு சென்றன பழைய காலங்களில். இன்று இந்தப் 'புதிய புறாக்கள்' தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மானுட எழுச்சி.... சுதந்திரம்.... நல்வாழ்விற்கான பூபாளத்தைக் கூவிக்கொண்டு கலை வானில் உலாப் புறப்பட்டிருக்கின்றன.

இந்த அணி காமராஜர் மாவட்டக் குழுவின் ராஜபாளையத்துக் கிளையிலிருந்து கம்பீரமாகக் கிளம்பியுள்ளது.

'படைப்பைப் பார்க்க வேண்டும்' 'படைப்பாளனைப் பார்க்க கூடாது' என்பார்கள். அவர்கள் வெறும் விமர்சகர்கள்.

'படைப்பைப் பார்க்க வேண்டும்' 'யார் படைத்தது என்று பார்க்க வேண்டும்' 'எங்கிருந்து வருகிறது... இன்ன பிற வற்றையும் நோக்க வேண்டும்.—இது நமது தேவை.

ராஜபாளையம் ஒரு தொழில் நகரம். தமிழகம் முழுக்க... ஏன் இந்தியாவின் பல மாநிலங்களிலும் தொழிற்சாலைகள் தொடங்கியுள்ளவர்கள் வாழும் நகர் ; கற்றவர்களும் நவீனத் தொழிலாளர்களும் மிக்க நகர்.

இப்பகுதியில் கவிதை என்றும், தூய கலை என்றும் முகமூடிகள் அணிந்து கொண்டு ஏகாதிபத்தியச் சார்பு, இந்திய தற்சார்பு அறிவியல் முன்னேற்றத்திற்கு எதிர்ப்பு, சரண்டல்

படிப்பகம்

www.padippakam.com

கோட்பாடுகள்...., கோழைத்தனமான பிற்போக்குத் தனங்கள்... கொண்ட கூலி அறிவு ஜீவிகளின் மாய்மாலங்களை அடக்கி... அப்புறப் படுத்தி—

தொழிலாளர் வர்க்கப் போர் முழங்கி.... மனித நேயமிக்க அறிவியலை துணிச்சலாக வரவேற்று, சோவியத் நட்பு, உலக சமாதான கீதம் இசைத்து அனைவரையும் ஆக்கிரஷித்து இவ்வணியில் இணைத்து வெற்றி நடையிடும் நமது தோழர்கள் பறக்கவிட்டிருக்கும் கலைப் புறாக்கள் இவை.

'அன்று சுதந்திரத்திற்காக முழங்கால்களில் அடிபட்டோம் அன்னியரிடம். இன்று ஒரு வாய் கஞ்சிக்காக அடிபடுகிறோம் உள்ளூர் சுரண்டல் காரர்களிடம்' என்று வரவேற்பு வளையம் நாட்டியுள்ளார் எஸ். எஸ். மணியம்.

'எட்டையபுரத்தில் உதித்தான் ஒரு குட்டிச் சூரியன். அந்த உதய காலத்தில் மட்டுமே தமிழ்த்தாயின் மார்பில் பால் சுரந்தது. இப்போது 'பால்' உணர்வோடு எழுதும் எழுத்தாளர்களைப் பார்த்து அந்தத் தமிழ் தாயின் வாயில் உமிழ்நீர் சுரக்கிறது 'தூ' என்று துப்புவதற்கு என்கிறார் கே. தங்கேஸ்வரன்.

பட்டுப்போர்த்திய பெட்டிக்குள் போவான் அப்துல்காதர். சிலுவைக் குறி பெட்டிக்குள் அந்தோணிசாமி. பல்லக்கு, சில சமயம் பாடை....லக்கிருந்தால் பீரங்கியில் போவான் இந்துக் குடிமகன். நான் மிகவும் மதிக்கிறேன் சவப்பெட்டியை மட்டும். அதைச் செய்யும் ஆசாரி ஏசுவின் வீட்டு அடுப்பில் அன்று பூனைக்கு வேலையில்லை—ஆ. பாரதிசங்கர்.

பெண்களின் கவிதைகள் வியப்பூட்டுகின்றன. இன்றைய பெண்களின் நிலையை பெண்களே கூறுகிறார்கள்.

'பார்வைக்காய் வடிவமைத்த
வெட்டப்பட்ட பூங்காச் செடிகள் !
வியாபார நோக்குடன்
எழுதப்பட்ட கவிதைகள் !'

—ஜெயலக்ஷ்மி.

படிப்பகம்

www.padippakam.com

'எனக்கு மன நிறைவு
பிறரிடம் குறை காண்பதில்'

—எஸ். வைஜெயந்தி.

'டன்னீரில் நனைந்து கழுதைப்பாலில்
குளித்தால் கிளியோபாட்ராவுக்குப் பெருமை!
மண்ணெண்ணையில் நனைந்து தீயில்
குளித்தாலும் நமக்கு இல்லை கருணை!'

—ஜெ. லலிதா.

'நான் அதிகம் கற்பனை உள்ளவள்
அதனால் தான்
என் அன்புக் கவிதை தொலைந்து போனது'

இன்னும் படிப்பு, பாசம், சிந்தனை இங்கு சிதறடிக்கப் பட்டு பெண்மை கவலைக்குள் தள்ளப் படுவதை எஸ். மகேஸ்வரி புலம்புகிறார்.

ஆலயத்தில் அர்ச்சகர் அந்தஸ்த்திற்கு முதலிடம் தருவதை யும், பெண்கள் ஆடை, அணிகலன அளப்பதையும், ஆண்கள் அங்கங்கள் நோக்குவதையும் கூறி—

'ஆலயம்! இது என்ன
அமைதி தரும் இடமா?
அல்லது
சில்லண்டிகள் கூடும்
சேரியும் சந்தா?'

என்று வினவுகிறார் எஸ். வி. சரஸ்வதி.

வரதட்சணை வாங்காமல் திருமணம் செய்ய முன்வந்த வனை 'மாப்பிள்ளை நிறமென்ன? குறை என்ன? உடம்பில் ஏதேனும்...? வேலையில் சிக்கல் ஏதேனும்..?' என்று பெண் வீட்டார் கேட்பதில் வேதனை கொள்கிறார் சேதுலட்சுமி செண்பகம்.

ரொக்கம், கோல்ட் செயின், எச். எம். டி. வாட்ச் ஸ்கூட்டருக்கு விலை போகும் மாஜிக் காதலனை—

படிப்பகம்

www.padippakam.com

'நேசம் காட்டி
மோசம் செய்பவனே !
நீதான் உண்மையான
விலை மகன்... !'

என்று அடையாளம் காட்டுகிறார் கே. லிங்கம்.

தனது துன்பத்திலும் கூவி மானுட குலத்திற்கு இன்பம் நல்கும் குயிலிடம் நாம் படித்துக் கொள்ள வேண்டும் என்கிறார் என் பங்கஜம். இங்குள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை வானிலுள்ள மேகத்திடம் முறையிட்டுக் கலங்குகிறார் சாந்த மீனா தேவி. ஊழல்கள் மலிந்துவிட்ட, சாரமில்லாத சத்துணவு மணியொலியை எதிர்பார்த்திருக்கும் சிறுவர்களை படம் பிடித்துக் காட்டுகிறார் ரஜினி. ஏமாற்றம் அளிக்கும் கல்வி முறையை எம். எஸ். மகேஸ்வரி சாடுகிறார்.

கடல் கன்னி வானத்தை மணந்து மழையாக கொட்டியதை அழகான கவிதையாக வருணிக்கிறார் எல். லலிதா. அனாதையாகிப் போய்விட்ட நல்லதங்கையின் அவலத்தை விளக்குகிறார் பழனியம்மாள் சுப்பிரமணியம்.

'மழைச் சொட்டுக்கள்
வண்ணம் பூசிய சுவரில் பட்டு
மேற்கே மறையும் ஆதவன் ஒளியில்
பிரதிபலிக்கும் இமை நேர வைரங்கள்...'

மழையின் அழகில் ஆனந்தித்து தமிழர்களுக்கு வழங்குகிறார் ராஜேஸ்வரி கோதண்டம்.

'ஏய் அப்படிப் பார்க்காதே
நீ அப்படிப் பார்த்தால்
என் சுமைகளை உன்மீது
சுமத்தி விடுவேன்—பிறகு
என் சிலுவையை நீ சுமக்க நேரிடும்...
அதனால் தயவு செய்து வீசாதே
அந்த அனுதாப பார்வையை
இன்னொரு முறை என் மீது.... !'

படிப்பகம்

www.padippakam.com

என்ன மென்மை....? என்ன மனித நேயம்...! எவ்வளவு அழகான கவிதை??—இது எம். லலிதாவினுடையது.

புதுமைப் பெண்களின் சார்பாக புரட்சி பிரகடனத்தை எழுதுகிறார் இரா. ஆனந்தி—

'நாங்கள்
கோடிப் பிரளயத்தை
தேகத்தில் தேக்கி...
நெஞ்சத்தில் மட்டும்
பஞ்சாக்னி வளர்க்கும்
வேகப் புயல்...!
வரும் உதயங்களில்
விடியலுக்காக ஏங்குபவர்கள்
நாங்கள் அல்ல.
விடியலே எம் விழிகளில்தான்.'

ஆண்களை காளையர்கள் என்று கூறியதால் தான் அவர்கள் இன்று விற்கப்படுகிறார்களோ என கிண்டலடிக்கிறார் வெ. கந்தக்குமார்.

'பட்டதாரிகள் போஸ்ட் ஆபீஸின் நீண்டகால வாழ்க்கையாளர்கள்; செல்லப் பெயரைத் தட்டிக்கொண்ட தண்டங்கள்'—டி. பாஸ்கர்.

'நேற்று மரங்களை வெட்டி
விற்று விட்டான்! அரசியல்வாதி
இன்று அவனே மரம்
நடுகிறான்! நாளை அவன்
வாரிசுகள் பிழைக்க வேண்டாமா?'

அங்கதம் பண்ணுகிறார் க. காசிசுப்பிரமணியன்.

குமரியில் வாழ்ந்தும் சூரிய உதயமே பார்க்காத அஜந்தா ஓட்டல் சமையல்காரருக்காக கசியும், அ. சுப்பிரமணியனின் இதயம் அனைவரையும் கசியச் செய்கிறது.

'நட்ட நடு நிசியில் தந்து விட்டுச் சென்றதால்
நம் மக்களுக்கு சுதந்திரம் பெற்றது தெரியவில்லை.

படிப்பகம்

www.padippakam.com

அன்றைக்குப் போராடிய களைப்பினால்
தூங்கியவர்கள் இன்னும் எழவேயில்லை'

தேசப் பற்றுடையவர்கள் எழுந்து புதிய சமுதாயம படைக்க வேண்டுமே என்று ஆதங்கம் கொள்கிறார் லதா.

'ஏ... சூரியனே! உன் கதிர்கள் புகாத இடத்தில் கவிஞர்களின் கற்பனைக் கதிர்கள் பாய்ந்து விட்டதைப் பார்' என்கிறார் சிவ. அருணாசங்கர். இந்த 'அணி வகுக்கும் அலைகளின் ஆவேச முழக்கம் எதற்காக? தொடர்ந்து முயன்று துணிந்து போராடத் தூண்டிடவோ' என சி. விநாயகமூர்த்தி கேட்கிறார். ஆமாம். அதற்காகத்தான்!

பிரபலமான சில கவிஞர்கள் முதல் தளிர்நடையிடும் பல கவிஞர்கள் வரை நாற்பது ஆண்களும் பதினேழு பெண்களுமாக ஐம்பத்தியேழு படைப்பாளிகளின் கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

'போரற்ற புது உலகம்; பேதமற்ற புதிய வாழ்க்கை. இவையே இவற்றின் குறிக்கோள்' என்கிறார் இவற்றைத் தொகுத்தளித்துள்ள குறிஞ்சிச் செல்வர் கொ. மா. கோதண்டம்.

பன்மொழிப் புலவர் மு. கு. ஜகந்நாதனின் நல்ல அணிந்துரையும், தோழர் பொன்னீலனின் விரிவான முன்னுரையும் இத்தொகுப்பிற்கு நல்லணிகலன்களாக உள்ளன.

இப்புறாக்கள்... நோக்குவோர் நெஞ்சில் தெளிவை ஏற்படுத்தும்; மனித நேயத்தை ஊற்றெடுக்கச் செய்யும்; ஆனந்தப்படுத்தும்!

தொகுப்பு. குறிஞ்சிச் செல்வர் கோ. மா. கோதண்டம்.

வெளியீடு : தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்,
22. இராமசாமி கோவில் தெரு,
இராஜபாளையம். 626117.
விலை ரூ. 5.00

படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

கைமாறு

— ராஜ்கமல் —

அலுவல் மிகுதி. மதிய உணவு கூட மறந்து விட்ட நிலை. யாரோ என்னைக் காண வெளியே காத்திருப்பதாகக் கூறினார் எனது பி. ஏ.

''யாருன்னு விசாரிச்சிருக்கலாமே... பெயர், வந்த விஷயம் எல்லாம் கேட்டு அனுப்பவேண்டியது தானே...'' என்றேன்.

''கேட்டேன் சார்... உங்களைப் பார்க்கணும் நேரிலே' இன்னு சொல்லிட்டார். கூட ஒரு பையன் வந்திருக்கான்''

'' 'லஞ்ச் டயம்'ன்னு சொன்னீங்களா ?''

''சொல்லலலே சார்... நீங்க தான் இன்னும் சாப்பிடலேயே... சாப்பிட்டதுக்கப்புறம் அவரை அழைக்கவா ?''

''ஆள் எப்படி இருக்கார் ?''

''மகா அழுத்தம்... உங்க கிட்டேதான் பேசணும்ங்கறார்...''

''சரி... அவரை உடனே உள்ளே அனுப்புங்க. நீங்க வெளியே இருங்க. நான் கூப்பிட்டதுக்கப்புறம் உள்ளே வாங்க....''

வெளியே சென்றவர் காத்திருந்தவரை உள்ளே அனுப்பினார். அவரைக் கண்டதுமே என்னையறியாமலே எழுந்து நின்றுவிட்டேன்....

''உட்கார் ஸ்ரீதர்...இப்போ.. நீ ஒரு கெஜட்டெட் ஆபீசர்... யு ஆர் நாட் எ ஸ்கூல் பாய்... பொறுப்பு மிக்க உத்தியோகத்திலே இருக்கே....'' என்று கூறியவாறே என்னை என் இருக்கையில் அமர்த்திய ஆசிரியர் ராஜநாயகம் எதிரில் இருந்த இருக்கையில் அமர்ந்தார். அவ

படிப்பகம்

www.padippakam.com

ருக்குப் பின் அவருடைய பிள்ளை ரவி நின்று கொண்டிருந்தான்.

''ஏது சார் இவ்வளவு தூரம் என்னைத் தேடி.... வாங்க மொதல்ல சாப்பிடலாம்.... அப்புறம் சாவகாசமாய்ப் பேசலாம்'' என்றேன்.

பணியாள் குறிப்பறிந்து வெளியே சென்றான். சற்றைக்கெல்லாம், என் வீட்டு உணவுப் பதார்த்தங்களுடன் ஓட்டல் சாப்பாடும் கலந்து ஆசிரியரையும் அவரின் மகனையும் விருந்தோம்ப எனக்கு உதவினான் பணியாள்.

உணவருந்திய போதே ஆசிரியரிடம் அளவளாவியதில் அவர் ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற விபரங்களும், பி. எஸ். ஸி., முடித்துள்ள ரவிக்கு வேலை விஷயமாகத் தான் என்னைச் சந்திக்க வந்திருக்கிறார் என்பதும் புரிய வந்தது.

எனது இன்றைய நிலைக்கு அஸ்திவாரமிட்டவர் அவர். என் உயர்நிலைப் பள்ளிப் பருவத்தில் என் ஆசிரியர் அவர். முற்றிலும் கிராமச் சூழலில் கூழாங்கல்லாய் இருந்த நான் வைரமாக ஒளிவீச பட்டை தீட்டியவர் அவர்.

''கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துக்கங்க சார்'' என்று கூறி நான் ஓய்வு கொள்ளும் ஏ. ஸி. அறையில், யு ஃபோம் ஸ்பாஞ்ச் மெத்தையிட்ட கட்டிலைக் காட்டினேன்.

''ஸ்ரீதர்! வந்துட்டியா.... என்னிக்கு நான் பகல்லே தூங்கினேன்? மத்தியானம் படுத்துக்கிடற பழக்கமே என் கிட்டே இல்லேங்கறது உனக்குத் தெரியுமே.... நீ படுத்துக்கோப்பா... உனக்கு நிறைய அலுவல் இருக்கும்... அதுக்கேத்தாப்பலே ஓய்வும் தேவைப்படும். நான் முழு ஓய்வில் தானே இருக்கேன்... அதிலே வேணும்னா சாய்ஞ்சுக்கிடறேன்'' என்று கூறியவாறே கட்டிலின் எதிரே இருந்த சோபா-கம்பெட்டில் அமர்ந்தார் ஆசிரியர் ராஜநாயகம்.

ரவி நின்றுகொண்டிருந்தான்.

''நீ அந்த பெஞ்சில சித்த படேன்'' என்றேன்.

''நான் பேப்பர் பார்க்கறேன்...'' என்று கூறி அவன் அடுத்த அறைக்குப் போய் விட்டான்.

கட்டிலில் சாய்ந்த எனது நினைவலைகளில் என் பள்ளிப் பருவ நாட்கள் நீந்தின. அந்தக் காலத்தில் ஆசிரியர் ராஜநாயகம் மாணவர்களின் நலனுக்காக அரும்பாடுபட்ட நிகழ்வுகள்

படிப்பகம்

www.padippakam.com

மனத்திரையில் சித்திரங்களாக ஒளிர்ந்தன.

ஆறாம் வகுப்பிலிருந்து பள்ளியிறுதித் தேர்வுவரை எங்கள் ஊரில் நான் படித்த அந்த உயர் நிலைப் பள்ளியில் ராஜநாயகம் சிறந்த ஆசிரியராகத் திகழ்ந்தார். ஒவ்வொரு மாதமும் மாதாந்திரத் தேர்வுகள் நடைபெறும். எல்லாப் பாடங்களிலும் முதல் மதிப்பெண் பெறும் மாணவர்களை தம் இல்லத்துக்கு அழைப்பார். தின்னப் பலகாரங்களும் சுவை நீரும் தந்து உபசரிப்பதோடல்லாமல், பரிசுகளும் வழங்கி ஊக்குவிப்பார். பின்தங்கிய மாணவர்கள் மீதும் அவருக்கு அலாதியான அக்கறை உண்டு. அம்மாணவர்களின் விபரங்களை ஓர் பட்டியல் போட்டுக் கொண்டு, மாலை நேரங்களில் தமது இல்லத்துக்கு அழைத்து இலவச ட்யூஷன் தருவார். எந்தெந்த மாணவன் எந்தெந்த பாடத்தில் எத்தனை பின்தங்கியிருக்கிறான் என்பதைத் தெரிந்து அந்தந்த மாணவனுக்கு அந்தந்த பாடங்களில் நல்ல பயிற்சி அளித்து முன்னேற்றி விடுவார். வகுப்பில் கடைசி ரேங்கில் இருக்கிற மாணவனையும் ஒன்றிரண்டு மாதங்களில் எல்லாப் பாடங்களிலும் பாஸ் மார்க் வாங்கச் செய்து விடுவார். அடுத்தடுத்து அவனை முன்னேற்றி முதல் ரேங்க் எடுக்குமாறு மாற்றிவிடுவதில் மன்னன் அவர்.

நான்கூட ஒவ்வொரு மாதாந்திரத் தேர்விலும் தலைமை ஆசிரியரிடம் பிரம்படி வாங்குவேன். அப்போது தலைமை ஆசிரியராக இருந்த திரு ஜி. ஐ. மாணிக்கவாசகம் பி. ஏ., எல். டி., மிகவும் கண்டிப்பானவர். ஒவ்வொரு மாதமும் நடைபெறும் மாதாந்திரத் தேர்வுகளில், அனைத்துப் பாடங்களிலும் முதல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு பள்ளியின் இலச்சினை பொறுத்த நட்சத்திர பேட்ஜ் அணிவித்து கைகுலுக்குவார். பத்தாவது ரேங்க் வரை வரும் மாணவர்களைப் பாராட்டும் வகையில் வகுப்பு மாணவர்களை கைதட்டச் செய்வார். அவரும் கரகோஷம் செய்து மாணவர்களை ஊக்குவிப்பார். மீதி மாணவர்கள் எல்லோரும் அவரிடம் பிரம்படிகள் பெறுவர். தவறிய பாடங்களுக்காக தப்பாமல் பிரம்படிகள். பாடங்கள் எத்தனை தவறியதோ அத்தனை பிரம்படிகள் உண்டு நிச்சயமாய்.

ஆசக்கழிசடையாய் இருந்த என்னை மாற்ற ஆசிரியர் ராஜநாயகம் எத்தனை பாடுபட்டார் என்று எனக்குத் தான் தெரியும். சராசரி மாணவனாக இருந்த என்னை ஓராண்டில் பள்ளியின் இலச்சினை பொறித்த நட்சத்திர பேட்ஜ் அணியும் மாணவனாக்கிக் காட்டிய போது,

"ஐ அப்ரிஷியேட் அண்ட் தாங்க் யு மிஸ்டர் ராஜநாயகம்... படுமோசமாயிருந்த இந்த ஸ்ரீதரை எனமாய் மாத்

படிப்பகம்

www.padippakam.com

ிட்டீங்க? யு ஆர் ரியலி கிரேட்!" என்று தலைமை ஆசிரியரே எனது ஆசிரியரைப் புகழ்ந்ததை என் வாழ் நாளில் என்னால் மறந்து விட இயலுமா?

இது மாத்திரமல்ல...இன்னும் எத்தனையோ! மாணவர்களின் அறிவுத் திறனை வளர்த்துத விய ஆசிரியர் ராஜநாயகம். மாணவர்களின் நிதி நிலை யறிந்து மனமிரங்கி உதவிய தெல்லாம் என் மனக்கண்ணில் பளிச்சிடுகின்றதே!

அக்காலத்தில் பள்ளிக்கு ட்யூஷன் பீஸ் செலுத்தித்தான் நாங்கள் படித்தோம். போர்டிங்கில் சேர்ந்து படித்த மாண வர்களில் சில ஏழை மாணவர் களுக்கு குறித்த காலக் கெடு வுக்குள் பணம் வந்து சேராது. அவர்களுக்கு, போர்டிங் பீஸ் பள்ளி நிர்வாகமே தந்துவிடும். ட்யூஷன் பீஸோ, ஸ்பெஷல் பீஸோ, எக்ஸாமினேஷன் பீஸோ கட்டத் திண்டாடுவர் ஆசிரியர் ராஜநாயகத்திடம் போய் நிற்பார்கள். அவர் தமது பர்ஸிலிருந்து பணத் தைக் கட்டுவார். அந்த மாண வர்களுக்கு மணியார்டரில் பணம் வந்ததும், நன்றியுடன் ஆசிரியர் செலுத்திய தொகை யைத் திருப்பித் தந்துவிடுவர். திருப்பித் தர இயலாது போன மாணவர்களும் உண்டு...ஆனால் அதையெல்லாம் பொருட்படுத் தியவரல்ல ராஜநாயகம்.

எனக்குக் கூட எஸ். எஸ். எல். சி. தேர்வுக்கு பணம் கட் டப் பிந்திவிட்டது. அவர் சமய மறிந்து உதவினார். எனது தந்தையார் பணம் அனுப்பிய தும் அவர் செலுத்திய பணத்தை அவருக்குத் தந் தேன்.

அவரிடமுள்ள இன்னொரு சிறப்பான நற்குணம் என் நினைவுக்கு வருகிறது. அவரி டம் பயின்ற மாணவர்களில் எவரேனும் உடல் நலக் குறை வால் பள்ளிக்கு வரவில்லை என்று தெரிந்தால் போதும். அன்று மாலையே அந்த மாண வனின் வீட்டுக்குச் சென்று அவன் உடல் நிலை குறித்து விசாரிப்பதோடன்றி இலவச மருத்துவ ஆலோசனைகளை அள்ளி வழங்கி விட்டுத் தான் தமது வீடு திரும்புவார்.

படிப்பில் அக்கறையுள்ள மாணவர்கள் சுகவீனத்தினால் பல பாடவேளைகளை இழந்து விட்டோமே என்று வருந்துகை யில் அவர்களுக்கு ஆறுதல் கூறி, உடல் நலம் பெற்ற பின் அவர்கள் இழந்த பாடங்களில் தனிப் பயிற்சியளித்து, அவர் களை அதிக மதிப்பெண்களைப் பெறச் செய்வதில் தமது முழுத் திறனையும் செலவழிப்பார்.

அத்தகைய நல்லாசிரியர் இப் போது என்னைத் தேடி வந்தி ருக்கிறார். நான் அவரின் பழைய மாணவன் என்ற உரி மையில் எனது உதவியை நாடி வந்திருக்கிறார்... தன் மகனின் வேலை விஷயமாக வந்திருக்கி றார். என்னை உயர்த்திய ஏணி அவர். இப்போது அவரின்

படிப்பகம்

www.padippakam.com

மகன் ரவியை உயர்த்தும் ஏணியாக நான் உதவ வேண்டுமே. இல்லையெனாது இப்போது அவருக்கு உதவி செய்தாக வேண்டும். இருக்கின்ற சூழ் நிலையில் என்ன செய்யலாம்? ரவியைப் பொறுத்தவரையில் தேர்வாணைக் குழுவின் தேர்வில் அதிகபான மதிப்பெண்களுடன் தேறியிருக்கிறான். நேர் முகத் தேர்விலும் வெற்றி பெற்றிருக்கிறான். லிஸ்ட் என் கையில் தானே இருக்கிறது... ஆனால் ரூபாய் பத்தாயிரத்தை ஆசிரியரிடம் எப்படிக் கேட்பது? அவர் தந்தால் அந்த அமைச்சரின் வாயை அடைத்து விடலாம். அவரின் தலையீட்டையும் ஓரளவுச்குச் சமாளித்து விடலாம். ஆனால் மிகக் குறைந்த மதிப்பெண் பெற்றும் அமைச்சரின் சிபாரிசில் தேர்வில் குறுக்கு வழியில் தேர்வு பெற்றவனுக்கு எப்படி பணி நியமனம் செய்ய இயலும்? அப்படிச் செய்தாலும் எந்த விதத்திலும் அது நியாயமில்லையே... ஆனால் அவனிடமும் ரூபாய் பத்தாயிரத்தை என் மூலம் வாங்கிக் கொண்டாரே இந்த அமைச்சர். உம்... ரவிக்கு அந்த இடத்தை தந்துவிட வேண்டியதுதான். அது தான் நியாயம். இந்த அரசியல்வாதிகளால் என்னை என்ன செய்துவிட முடியும்? இடமாற்றம் செய்வதைத் தவிர என்ன சாதித்துவிடப் போகிறார்கள்? எங்காவது மாற்றித் தொலைப்பார்கள்... தொலைகிறது... என்ற முடிவுடன் எழுந்தேன். ஆசிரியருக்கும் அவரது மகனுக்கும் சிற்றுண்டிகளும் காப்பியும் வரவழைத்தேன். அன்புடன் உபசரித்தவாறே,

"சார்! நீங்க எனக்கு லஞ்சம் வாங்க மட்டும் கற்றுத் தரலே. ஆனா பாலிடீஷியன்ஸ் எங்களுக்கு கற்றுத் தந்துட்டாங்க... இந்தக் காலத்திலே... அரசியல்வாதிகள் எங்க அட்மினிஸ்ட்ரேஷனிலே வீணாக தலையிடறாங்க. ஒவ்வொரு பணி நியமனத்துக்கும் 'ரேட்' வைச்சு அரசுப் பணிகளை விற்கறாங்க... அவங்கள்லாம் 'கறை படாத கரங்களாம்!' ஏன்னா... அவங்க கையாலே லஞ்சம் வாங்கறதில்லேயாம்.... அதுக்கு எங்க கரங்களையில்ல பயன்படுத்திக் கிறாங்க.... கடும் நிர்ப்பந்தம், அப்படிப்பட்ட சிக்கல்லே நான் அகப்பட்டுக் கிட்டு முழிக்கறேன் சார்" என்றேன் என் பிரிய ஆசிரியரிடம்.

"உன் நிலமை எனக்கு நல்லா புரியுது ஸ்ரீதர். எனக்குக் கிடைத்த கிராஜுவிடி பணத்திலேர்ந்து பத்தாயிரம் ரூபாய் கொண்டு வந்திருக்கேன்... இதோ... வாங்கி வைச்சுக்க... அந்த லஞ்சப் பேயின் பசிக்குப்

படிப்பகம்

www.padippakam.com

போட்டுத்தொலை. ஆனா எப்படியாவது என் பையன் ரவிக்கு உன் கையாலே அப்பாய்ண்மெண்டர் ஆர்டர் தந்துடுப்பா...'' என்றார் ஆசிரியர்.

அப்போது டெலிஃபோன் கிணு கிணுத்தது. ரிஸீவரை இடக்கையால் எடுத்து இடக் காதில் பொருத்தினேன்.

',எஸ்....ஸ்ரீதர் ஸ்பீக்கிங்...'' என்றேன்.

அந்த கொள்ளைக்கார மாண்புமிகுவின் குரல்தான்.

''வெரி சாரி சார். நீங்க சொரிக பண்ணின காண்டிடேட்டுக்கு அப்பாய்ண்மெண்ட் போட முடியாது... வெரி லோ மார்க்ஸ்... ஐ காண்ட் ஹெல்ப் சார்...'' என்றேன்.

நாகரிகமில்லாமல் பேசினார் மாண்பு.

''உம்மால் என்னை டிரான்ஸ்ஃபர் தானே செய்ய முடியும்? ஐ டோண்ட் கேர்.... ஐ யாம் ஆன் ஐ. ஏ. எஸ். ஆபீசர்... ஐ யாம் பிரிப்பேர்ட் டு கோ எனிவேர் இன் இண்டியா'' என்று பொரிந்து தள்ளிவிட்டு ரிஸீவரை ஃபோன் மீது 'டக்' கென்று வைத்தேன். பி.ஏ. வை அழைத்தேன். பணி நியமனம் குறித்துப் பேசினேன். அடுத்த சில நிமிடங்களில் அப்பாய்ண்மெண்ட் டைப் ஆகி என் கைக்கு வந்தது. அதில் நான் கையொப்பமிட்டு ரவியின் கையில் தந்தேன்.

ஆசிரியரின் மலர்ந்த முகத்தை நோக்கி மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் ''ரவி இஸ் அப்பாய்ண்டெட் சார்.... நீங்க பணத்தை எடுத்துக் கிட்டு நிம்மதியா போயிட்டு வாங்க சார்...'' என்றேன்.

''தாங்க் யு வெரிமச் ஸ்ரீதர்.... உன் உதவியை என்னிக்கும் மறக்க மாட்டேம்ப்பா...'' என்று கூறியவாறே, என் கரங்களை ஆதுரத்துடன் பற்றி விடை பெற்றார் ஆசிரியர் ராஜநாயகம்.

அந்த ஒப்பிலா மனித மேரு, கருணைக் கடல், உவகை வெள்ளத்தில் என்னைப் பிரிந்து செல்வதை விழி இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தேன்.

161, பிரகாசம் சாலை, சென்னை- 108, ஜனசக்தி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் எஸ். எஸ். தியாகராஜன், ஆசிரியர் ப. மாணிக்கம்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

Regd. No. 9140 THAMARAI JANUARY 1990
W.P.P. No. TN/MS (N)54 Regd. as News paper in Srilanka

தாமரை
(மாத இதழ்)
சந்தா விபரம்

1 ஆண்டு	ரு	24.00
6 மாதம்	ரு	12.00
தனிப்பிரதி	ரு	2.00

ஜனசக்தி
(நாளிதழ்)
சந்தா விபரம்:

1 ஆண்டு	ரு	350.00
6 மாதம்	ரு	175.00
3 மாதம்	ரு	90.00
தனிப்பிரதி	ரு	1.00

படிப்பகம்